# தொழிலாளி

இலங்கை தொழிற் சங்க சம்மேளன வெளியீடு


**மக்கள் சீனம்பற்றி...**

* புரட்சியின் பாடங்கள்
* பொருளாதார அபிவிருத்தி
* மக்கள் கம்யூன்கள்
* சீனத்தின் கண்ணோட்டம்
* சீன எதிர்ப்புக் கும்பல்


விலை சதம் 15 | இந்தியாவில் 15 நயா பைசா ★ அக்டோபர் 1, 1963 ★ பக்கங்கள் 16 | ஒலி 8


# ஒரே மத்திய ஸ்தானம் நோக்கி முன்னேறுவோம்

**1963** செப்டம்பர் மாதம் 29-ம் திகதி கூடவிருக்கும் அகில இலங்கை தொழிற் சங்கங்களின் மகாநாடு சரித்திர முக்கியம் மிகு சம்பவமாகும். இந்த நாட்டுத் தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திரத்தில், பல்வேறு வழிகளில் சென்றுகொண்டிருந்த பல பகுதிகள் பொதுவான 21 கோரிக்கைகளுக்குப் பின்னால் ஒன்று திரள்வது இதுவே முதல்தடவையாகும். முழு தொழிற்சங்க இயக்கமும் பொதுவான கோரிக்கைப் பட்டியலை ஒத்துக் கொண்டதும் இதுவே முதல்தடவையாகும்.

இதன் முக்கியத்துவம் மேலும் கூடுதலானது. தொழிற்சங்க இயக்கத்தின் பல பகுதிகளும் ஓர் பொது அணியில் ஒற்றுமைப்படுத்தப் பட்டது இதுவே முதல் தடவை. 1947 பொது வேலை நிறுத்தம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், அரசாங்க ஊழியர்கள் தனியார் துறையிலுள்ள ஊழியர்களுடன் தொழிற்சங்க பொதுச் சம்மேளனங்களில் கூட்டுச் சேர்வதைக் தடுத்து அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தொழிற்சங்க சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்ததின் பின், இந்த இரு பகுதிகளும் வெவ்வேறாக செயல்பட நிர்ப்பந்திக்கப் பட்டன. தற்பொழுது முதல் தடவையாக அவர்கள் ஒற்றுமைப் பட்டு, இப்பொழுது உருவாக்கப் பட்டுள்ள கூட்டுத் தொழிற்சங்கக்கமிட்டியில் தமது எதிர் காலத்தைக் காண்கின்றனர். இது மட்டுமல்ல, தோட்டத்தொழிலாளர்கள் இதுகாலவரை பிரதான தொழிற்சங்க இயக்கத்திலிருந்து பிரித்து வைக்கப் பட்டனர் தோட்டத்தொழிலாளர்களின் பெரும் சங்கங்களின் தலைமை பிழையான, வகுப்புவாதக் கொள்கைகளைப் பின்பற்றியதின் விளைவே இது. இதன் விளைவாக, தொழிற்சங்க இயக்கத்தின் மிகுதிப் பகுதி நடாத்திய வேலை நிறுத்தப் போராட்டங்கள் ஒன்றிலாவது தோட்டத்தொழிலாளர்கள் பங்கு பற்றியதில்லை.

இன்று, முதல் தடவையாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை உட்பட தோட்டத்தொழிலாளர்களின் நான்கு பிரதான தொழிற்சங்கங்களும் 21கோரிக்கைப் பொதுப் பட்டியலின் பின்னர் கூட்டுத் தொழிற்சங்க கமிட்டியில் இணைந்துள்ளன.

## இலங்கைத் தொழிற்ச சங்க சம்மேளனத்தின் பங்கு

இவை முழுத் தொழிற் சங்க இயக்கத்துக்குமே குறிப்பிடத்தக்க வெற்றியைக் கொடுத்துள்ளன. தொழிற்சங்கங்களிடையே இந்தளவு ஒப்பந்தத்தைக்கொண்டு வருவதில் இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வகித்த பங்குபற்றி நாம் பெருமைப்படுகின்றோம். இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் தான் பேச்சுவார்த்தைகளைத் தொடக்கி, கூட்டுத் தொழிற் சங்கச் சமிட்டியை உருவாக்குவதற்கும் பொதுக் கோரிக்கைப் பட்டியலைத் தயாராக்குவதற்கும் ஒப்பந்தம் ஏற்படும் வரை அவற்றை வெற்றிகரமாக நடத்தப் பெரிதும் உதவியது. ஒரு முனைப்பட்ட (செக்டேரிய பெருமை பேசுவதற்காகவோ அன்றி மறு தொழிற்சங்கங்கள் வகித்த பங்கை மறுப்பதற்காகவோ நாம் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் வகித்த பங்கு பற்றி நினைவுகூறவில்லை. எங்கள் நோக்கத்தின் உண்மையை ஸ்தாபிக்கவும், மேலும் ஸ்திரமான தொழிற்சங்க ஐக்கியத்துக்கான எமது வேண்டுகோள்களைக் கூடிய சிரத்தையுடன் கவனிக்குமாறு கோருவதற்காகவுமே நாம் இதனைக் கூறுகின்றோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தொழிலாளவர்க்க விரோதக் கொள்கைகளே, தொழிற்சங்க இயக்கத்தில் இன்றிருக்கும் ஐக்கியம் ஏற்பட நிர்ப்பந்தத்தின் என்பதில் சந்தேகமில்லை. அரசாங்கத்தின் தொழிலாளவர்க்க விரோதக் கொள்கைகள் ஆகிய சம்பள உயர்வு நிறுத்தம், வேலைநிறுத்தங்களை உடைப்பதற்குப் பொலிஸ், இராணுவத்தைப் பாவித்தல், வேலை நிறுத்தத்தின் பொழுது பேச்சுவார்த்தை நடாத்த மறுத்தல் முதலியவற்றைத் தொழிலாளவர்க்கத்தின் தனிப்பட்ட நடவடிக்கைகளால் போரிட முடியாது என்ற பாடத்தைத் தனிப்பட்ட போராட்டங்களின் கசப்பான அனுபவங்கள் முழுத் தொழிற் சங்க இயக்கத்துக்குமே அளித்துள்ளன, ஆகவே அரசாங்கத்தின் தொழிலாளவர்க்க விரோதக் கொள்கைகளை மாற்ற வேண்டுமாயின் முழுத் தொழிற் சங்க இயக்கமும் தங்கள் அணிகளை ஒற்றுமைப் படுத்தி, தனியொரு பொது அணியை உருவாக்கித் தீர்க்கமான ஒன்று திரட்டப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் தொழிற்சங்க இயக்கத்துக்கு எழுந்துள்ளது.

## இங்கிருந்து எங்கே?

அவசியம் காரணமாகவே நாம் ஓரளவு ஒப்பந்தத்துக்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம். இங்கிருந்து நாம் எங்கே போக வேண்டும்? தற்பொழுதைய ஐக்கியத்தால் நாம் என்ன சாதிக்கின்றோம் என்பதைப் பொறுத்தே பதில் இருக்கின்றது. 21 கோரிக்கைப் பொதுப் பட்டியலின்பின் நாம் தொழிற் சங்க இயக்கத்தை ஒற்றுமைப் படுத்தியுள்ளோம். செப்டம்பர் 29-ம் திகதி கூடிய அகில இலங்கை தொழிற் சங்கங்களின் மகாநாடு இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அதன் பின் அவை அரசாங்கத்திற்கும் முதலாளிமார்கட்கும் சமர்ப்பிக்கப்படும். அநேகமாக எதிர்பார்ப்பது போல் இக்கோரிக்கைகள் அளிக்கப் படாத கட்டத்தில் இக்கோரிக்கைகளை ஆதரித்து நடவடிக்கையில் ஈடுபடத் தொழிற்சங்க இயக்கம் தயார் செய்தல் வேண்டும். அத்தகைய நடவடிக்கை, தொழிற் சங்கங்கள் முன்னென்றும் எடுத்திராத அளவிற்குப் பிரமாண்டமான பரந்த இயக்கமாக அமையும். தொழிற்சங்க இயக்கம் முழுவதையும் கூட்டு நடவடிக்கையில் திரட்டும் அளவிலேயே தொழிற் சங்க இயக்கத்தின் எதிர்கால ஐக்கியம் தங்கி இருக்கின்றது. கூட்டு நடவடிக்கைப் பட்டறையிலேயே பழையவெறுப்புகள் மறைந்த, நிரந்தரமாக நிலவக்கூடிய ஐக்கியத்தை உருவாக்கலாம். பொது எதிரிகளுக்கெதிராக பொதுக் கோரிக்கைகளுக்காகப் பொதுப் போராட்டத்தின் பொழுதே புதிய தோழமைத் தொடர்புகளை உருவாக்கலாம் என்பது எமது உறுதியான அபிப்பிராயம்.

அண்மையில் உள்ள எதிர் காலத்தில் தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்திற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் சாதகமானவை. எப்படியிருந்த பொழுதும் நாம் தனித்துத் தனித்துச் செயல்பட்ட நிலைக்குத் திரும்பிப் போதல் முடியாது. கூட்டுத் தொழிற் சங்க கமிட்டியை உருவாக்கும் ஆறு தொழிற் சங்க மத்தியஸ்தானங்களும் தற்பொழுது முக்கிய பிரச்சினைகள் அனைத்தையும் பற்றிப் பொதுவான ஆலோசனையில் ஈடுபடும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றன. இந்த ஐக்கியம் எவ்வழியிலாவது பாதுகாக்கப்பட்டு மேலும் விருத்தியாக்கப்படல் வேண்டும். தொழிற்சங்க இயக்கத்தின் தற்பொழுதைய ஐக்கியத்திற்கு மேலும் கூடிய உருவம் கொடுப்பதுடன், காலத்திற்குக்காலம் எழும் பிரச்சினைகளை மட்டும் விவாதிப்பதற்கான கூட்டங்களுடன் நிற்பாட்டாது மேலும் திட்டமான ஸ்தாபன ரீதியான அமைப்பையும் கொடுத்தல்வேண்டுமென இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் கருதுகின்றது. மறுவார்த்தைகளிற் கூறுவதாயின், அரசியல் மற்றும் வித்தியாசங்களைக் கருத்துள் கொள்ளாது இந்த நாட்டின் எல்லாத் தொழிற்சங்கங்களையும் ஒரு பொதுஸ்தாபனத்தில்திரட்டும் வண்ணம் ஓர் ஐக்கிய தொழிற் சங்க மத்தியஸ்தானத்தை ஏற்படுத்தும் காலம் வந்துவிட்டது என நாம் கருதுகின்றோம்.


[15-ம் பக்கம் பார்க்க]


## தொழிற்சங்க இயக்கம் ஒரே குரல் எழுப்பட்டும்

## மக்கள் சீனக் குடியரசு மலர்

# மக்கள் கம்யூன்களின் சிறப்பான வளர்ச்சி!

## எதிரிகளின் பிதற்றல்களுக்கு பதில்

**1958**ம் ஆண்டில், வூசான் மாகாணத்தில் கூடிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி கீழ்வரும் அறிக்கையை வெளியிட்டது.

"கிழக்கு ஆசிய அடிவானத்திலே 1958-ம் ஆண்டில் உதய சூரியனாக ஒரு புதிய சமூக ஸ்தாபன அமைப்புத் தோன்றியது."

கிழக்கு ஆசியாவின் உதய சூரியனாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வர்ணித்து வரவேற்ற கம்யூன் முறை, லட்சக்கணக்கான கூட்டுறவு ஸ்தாபனங்களையும், நிறுவனங்களையும் உள்ளடக்கிய 26,000 கம்யூன்களை இன்று மக்கள் சீனத்தின் எட்டுத் திக்கிலும் பூத்துக் குலுங்கச் செய்துள்ளது. இவைகளின் மூலம் 25 கோடி ஆண்களும் பெண்களும் பொன் வாழ்வ நோக்கி ராஜநடை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளிலே சீனத்துக் கம்யூனைத் தாக்கியவர்கள் பலர்; துதித்தவர்கள் ஏராளம்,

ஆனால், சூரியனைக் கண்டு குலைத்த நாய்களின் விரக்தி போல இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் காற்றோடு காற்றாகி ககனத் தூசுகளாகி விட்டன.

இந்த மிக மிக சொற்ப ஆண்டுகளிலே, 50 கோடி சீனத்து விவசாய மக்களுக்கு புதுப்பாதை காட்ட உதயமான உதய சூரியனான கம்யூன் முறை, விவசாயத்துறை, தொழில்துறை, வர்த்தகம், கல்வி, சுகாதாரம், தமது பிரதேசத்தின் இராணுவ விவகாரங்கள் ஆகிய சகல துறைகளிலும் துரித முன்னேற்றம் அடைந்து வருகிறது. கம்யூன்கள், ஸ்தலப்பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், சில ஸ்தல வங்கிகள், வர்த்தகப்பகுதிகள் ஆகியவைகளையும் பரிபாலித்து வருகின்றன.

இந்த ரீதியில் கடந்த காலங்களில் உலகின் பல நாடுகளில் தோன்றிய கம்யூன்களிலிருந்து இவை வேறுபட்டிருந்தன. அரச, ராணுவ நிர்வாக அதிகாரங்களைப் பெற்றிருந்ததுடன், சீனக் கம்யூன்கள் முதற் தடவையாக 'சம்பள முறையை, அமுலுக்குக் கொண்டுவந்தன.

சீனக் கம்யூன்களின் மிகச் சிறந்த வெற்றி 'இலவச உணவு' விநியோகமாகும். அதிக உணவு உற்பத்தி மூலம் அமுலுக்குவந்த இலவச உணவு விநியோகம், வறுமையிலும், பட்டினியிலும், பஞ்சத்திலும், சதாவும் மரணத்தோடும் போராடிக்கொண்டிருந்த சீன மக்களை மட்டுமின்றி, உலக மக்களையே பேராச்சரியத்தில் திளைக்கச் செய்தது. தலை சிறந்த ஆங்கில எழுத்தாளர் ரூவி கலி குறிப்பிட்டது போன்று பல வாரங்கள் சீனத்து மக்கள் இந்தப் புதுமையை நம்பாமலேயே இருந்தார்கள்.

இது போக, மருத்துவ வசதி குழந்தைகள் பராமரிப்பு, பள்ளிக் கூடங்கள், முதியோர் பாதுகாப்பு இல்லங்கள், வைத்திய வசதிகள் யாவும் இலவசமாக கம்யூன்களில் தரப்படுகின்றன.

சோஷலிஸ வளர்ச்சிக்குப் புதுப்பாதை காட்டிய கம்யூன் முறை, ஆரம்ப காலத்தில் நம்ப முடியாத, சாதனைக்கு அப்பாற்பட்ட புரட்சிப்பாதையாகத் தோன்றியதில் புதுமையில்லை. முதலாளித்துவ சக்திகளை மட்டுமின்றி சில சோஷலிஸ்டுகள் கூட கம்யூன் முறையைக் கிண்டல் செய்தனர்; கண்டித்தனர்.

### சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்

கம்யூன்கள் மீது சுமத்தப் பட்ட குற்றச்சாட்டுகள் மூவகைப்படும்.

முதல் குற்றச்சாட்டு, கம்யூன் முறை தனி நபரின் உரிமையை பறித்து. அடிமையாக்குகின்றது.

இரண்டாவது, அது குடும்பத்தைத் தகர்க்கிறது. மூன்றாவது, மக்களுக்கு பலாத்காரமாக ராணுவப் பயிற்சி தருகிறது.

இவை தவிர முதலாளித்துவ பிற்போக்குக் கும்பலுக்கு மக்கள் சீனத்தின் புரட்சிக் கம்யூன்களைத் தாக்க வேறு காரணங்கள் கிடைக்கவில்லை.

ஆனால் இக்குற்றச்சாட்டுகள் அனைத்தும் பயித்தியக்காரத்தனமானவை என்பது கம்யூன்களின் வளர்ச்சியையும், மக்களின் இன்ப வாழ்வையும் கண்டவர்களுக்குத் தெள்ளத் தெளியப் புரியும்.

அமெரிக்காவில் நாளுக்கு நாள் குடும்பங்கள் தகர்ந்து வருவதை அமெரிக்க எழுத்தாளர்களும், விமர்சகர்களும் உண்மையென்று ஏற்றிருக்கிறார்கள். திருமணமானவர்கள் தங்கள் பெற்றோர்களைத் தம்மோடு வைத்திருப்பதில்லை. அதேபோன்று, வயது வந்தவர்களும் குடும்பத்திலிருந்து நீங்கியே வாழ்கிறார்கள்.

### மக்கள் கம்யூன்களும குடும்ப வாழ்வும்

சீனத்திலோ, சாதாரண குடும்பங்கள் மட்டுமின்றி "பெரிய குடும்பங்களும்" இருந்தே வருகின்றன. கம்யூன்களில் கட்டப்படும் புதிய வீடுகளில் தாத்தாக்களுக்கும், பாட்டிகளுக்கும், வது வந்த மக்களுக்கும் அறைகள் விசேஷமாகக் கட்டப்படுவது 'பெரிய குடும்பங்கள்' பாதுகாக்கப் படுவதைக் காட்டுகின்றன.

மக்களில்லாதவர்களைத்தவிர வேறு யாருமே முதியோர் இல்லத்தில் இல்லை.

கம்யூன்கள் குடும்பங்களை உடைத்துத் தகர்த்து விடுகின்றன என்பது சுத்த அபத்தப் பிரச்சாரமாகும்.

கம்யூன் முறை அமுலாகி வரும் இரண்டு மாற்றங்களைக் கொண்டே பிற்போக்குவாதிகள் இந்தக் குற்றச்சாட்டை சீனு மீது சுமத்திவருகிறார்கள்.

முதல் மாற்றம், இது நாள் வரை, மகனும், அவனது மனைவியும் உழைத்து அதிலிருந்து வந்த ஊதியத்தை மகனின் தந்தையே பெற்றுவந்தார். அவரின் தயவிலும், அனுதாபத்திலுமே உழைக்கும் இரு ஜீவன்களும் வாழ்ந்து வந்தன. முதியவர் குடும்பத்தை ஆண்டு வந்தார். கம்யூன் முறை இந்த அடிமைப் போக்கில் மாற்றம் தோற்றுவித்தது. அவரவர் உழைப்பின் ஊதியத்தை அவரவர்களுக்கு அளித்தது.

இரண்டாவது மாற்றம்,

**H.M.P. மொஹிதீன்**

ஆசிரியர், 'தேசாபிமானி'

பொது உணவுச் சாலைகள், குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்கள், பாலர் பள்ளிக்கூடங்கள் உருவாக்கியது மூலம் உழைக்கும் திறமையும், சக்தியுமிக்க குடும்பத்தில் குசினியோடு அடிமைப்பட்டிருந்த லட்சக்கணக்கான பெண்களுக்கு ஆண்களுடன் சரிநிகராக உழைத்துச் சம்பளம் பெறும் வாய்ப்பை கம்யூன் முறை தோற்றுவித்தது.

### அடிமைத் தளையை அறுத்தெறிகின்றது

அடிமைச் சமுதாயத்தின் மிச்ச சொச்சங்களான இவ்விரு அடிமைத்தளைகளையும் கம்யூன் முறை தகர்த்தது பிற்போக்குவாதிகளின் வயிற்றைக் குடைந்தது. காரணம், இவ்விரு மாற்றங்களும் சீனத்தை சோஷலிஸப்பாதையில் துரிதமாக முன்னேற்ற இன்று பெரிதும் துணை புரிந்து வருகின்றன. மற்றும் மனைவி வேலை செய்வதும், வீட்டில் இருப்பதும் அவ்வவ் குடும்பத்தின் முடிவை ஒட்டின விவகாரமே ஆகும். இதில் கம்யூன் நிர்வாகம் எப்போதுமே தலையிடுவதில்லை.

கம்யூனில் மட்டுப் பட்டுள்ள மக்கள், தமது கிராம வீடுகளில் வதிகிறார்கள் அல்லது, வசதியான இடங்களில் புதிய வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். அதே வேளையில் தமக்கிடையில் கூட்டமும், சர்ச்சைகளும் நடத்தி, திறமையும், தகுதியும் மிக்கவர்களை நிலத்தில் வேலை செய்யவும் ஸ்தல வர்த்தக, தொழில் வளர்ச்சியில் ஈடுபடவும் நிர்ணயிக்கிறார்கள். மற்றவர்கள், பெரும்பாலும், சக்திமிக்கவர்கள் தற்காலிகமாகத் தமது கம்யூனுக்கு வேண்டிய, அவசியமாகத் தேவைப்படும் புதிய பாதைகள் கட்டவும், நீர்பாசனத் திட்டங்களைப் பூர்த்தி பண்ணவும் தமது உழைப்பைப் பிரயோகிக்கிறார்கள்.

இதில் அடிமைத்தனம் என்ன இருக்கிறது?

### பாதுகாப்புப்படை

ஒவ்வொரு கம்யூனுக்கும் சொந்தமாகப் 'பாதுகாப்புப் படை' இருக்கவேண்டிய அவசியத்தை, சாதாரண விவசாயிகளே இன்று உணருகிறார்கள். பெரும்பாலான கம்யூன்களில், ராணுவப் பயிற்சி வெறும் தடிகளாலும் கழிகளாலுமே தரப்படுகின்றன. இப்பயிற்சிகளை சில சமயங்களில் விவசாயிகள் தாமே நடத்திக் கொள்கிறார்கள்.

சமீபத்தில் சியாங்கே ஷேக், அமெரிக்க ஒற்றர்கள் பலரை கம்யூன் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்தது, இத்தகைய படைகள் ஒவ்வொரு கம்யூன்களும் இருக்கவேண்டிய அவசியத்தை உறுதிப் படுத்துகின்றன.

இப்பாதுகாப்புப் படைகள், பீக்கிங்கிலுள்ள பாதுகாப்பு அமைச்சினதோ, அல்லது யுத்த அமைச்சினதோ அதிகாரத்திலில்லாது, சுயேச்சையாக்க கம்யூன்களின் அதிகாரத்தில் இயங்குவது இங்கு விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

### மக்களிடமிருந்து மக்களுக்கு

சீனத்துக் கம்யூன்கள் பற்றி சீன விவகாரங்களிலும், சீனத்து விஞ்ஞானத்திலும் வல்லுனராக விளங்கும் டாக்டர் ஜோசப் நீதம், 'நியு ஸ்டேட்ஸ்மன் அன் நேஷன்' (New Statesman & Nation) என்ற பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார்:

"தமது கடமைகளைச் செய்யமக்களை சீன அரசாங்கம் பலாத்காரமாக இழுக்கிறது என்று மேற்கத்திய நாடுகள் எண்ணுகின்றன. இது மிகப் பெரிய தவறாகும். சீனத்தில் இதற்கு மாறாக உண்மையையே நாம் காண்கின்றோம். அங்கு மக்கள் உத்வேகத்துடன், உணர்ச்சி பொங்க தாமே இயங்கிவருகிறார்கள். பல தடவைகளில் அரசாங்கத்தின் திட்டத்தையும் தாண்டி சீன மக்கள் வெற்றிகரமாக தமது வேலைகளை செய்துவருகிறார்கள். ஒரு புதிய, அபூர்வ யந்திர சக்தி இன்று சீனத்தில் இயங்கி வருகிறது. இந்த யந்திர சக்தி வெளியிலிருந்து மக்கள் மீது திணிக்கப் படவில்லை; அது மக்களுக்குள்ளேயே இயங்குகின்றது" என்ற டாக்டர் நீதத்தின் கூற்று ஒரு உண்மையை மெய்ப்படுத்துகிறது. மக்கள் கம்யூன்கள் தலைமைப் பீடத்திலிருந்து திணிக்கப்பட்ட ஒரு விவகாரமல்ல. அது சீனத்து மக்களின் தேவைகளிலிருந்து, அனுபவத்திலிருந்து உருவான அதிசயத் திட்டமாகும். 'மக்களிடமிருந்து, தலைமையின் மூலம் மீண்டும் மக்களுக்கு' என்ற மாமேதை மாசே துங்கின் பிசகற்ற மார்க்ஸியக் கோட்பாடு இதில் இணைந்து, பிணைந்து இதன் வெற்றிக்கு இன்று திசை மார்க்கம் காட்டியுள்ளது.



மக்கள் கம்யூன் கோதுமை வயலில் அறுவடை செய்யும் பெண்மணி

தமக்குத்தேவையான உணவுகளைப்பெற கம்யூன் மக்களுக்கு உரிமை இல்லை என்பது சமீபத்திய குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

ஆங்கில அரசியல் விமசகரான ரிச்சார்ட் ஹரிமன் தனது 'சீனக் கம்யூன்கள்' என்ற நூலில் இதற்குப் பதில்

(10-ம் பக்கம் பார்க்க)

தலையங்கம்:

# மக்கள் சீனத்துக்கு நமது வாழ்த்துக்கள்

அறுபத்தேழு கோடி மக்கள் வாழும் உலகில் மிகப்பெரும் நாடான மக்கள் சீனக் குடியரசின் பதினான்காவது ஆண்டு தினம் 1963ம் ஆண்டு, அக்டோபர், முதலாம் திகதியாகும். இத்தினத்தில், ஈழத்துத் தொழிலாள வர்க்கத்தின் சார்பில், மக்கள் சீனக் குடியரசின் அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக மிகவும் கஷ்டமான நிலைமைகளில் இப்பிரமாண்ட நாட்டில் சோஷலிசம் கட்டி எழுப்பிக்கொண்டிருக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

உலக ஏகாதிபத்தியத்தினால் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் பகிஷ்கரிக்கப்பட்டு, தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டு, நண்பர்கள் என்று சொல்லப்படுபவர்களால் துரோகம் செய்யப்பட்டு, அடுத்தடுத்து மூன்றாண்டுகளாக மோசமான தேசிய இடர்ப்பாடுகளை அனுபவிக்கும் சீன நாடு, இக்கஷ்டங்களை எதிர்த்துக் கண்ட யகத்தான வெற்றிகளும், சோஷலிச நிர்மாண வெற்றிகளும் முழு உலகத்தையும் கவர்ந்துள்ளன. இவை அனைத்தும் வேறெந்த நாட்டிலிருந்தும் ஒரு சதம் தானும் கடன் எடுக்காது சீனம் செய்துள்ளது. ஒப்புயாவற்ற சாதனையாகும்.

சோஷலிசத்தைக்கட்டி எழுப்புவதில் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில், காலனி, அரைக் காலனி நாடுகளின் தேசிய சுதந்திரப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதில், உலக சோஷலிசத்தை அடைவதற்காக சர்வதேசிய தொழிலாள வர்க்கத்திற்குச் சரியான தலைமையளிப்பதில், சீன தொழிலாள வர்க்கத்திற்குச் சரியான தலைமையளிப்பதில், சீன தொழிலாள வர்க்கத்தின் வெற்றிகள் குறித்து இந்த நாட்டுத் தொழிலாளர்கள் பெருமதிப்புக் கொண்டுள்ளனர். 1952ல் ஏற்பட்ட எமது பொருளாதார நெருக்கடியின்பொழுது நேச நாடான சீனா நட்புக் கரம் நீட்டி உதவியதற்கு இந்த நாட்டு மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாயிருப்பார்கள். சீன இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தைக் கையெழுத்திடுவதன்மூலம் எமது ரப்பரை உலக விலைக்குக் கூடுதலாக வாங்கி, உலக விலைக்குக் குறைவாக அரிசியை எங்களுக்கு விற்றுச் சீனம் எங்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்றியது மட்டுமல்லாமல் ரப்பர் கைத்தொழிலையும் நாசமாகாது காப்பாற்றியது. இன்று ரப்பர் கைத்தொழில் ஸ்திரமாக இருப்பது, சீனம் சாதகமான விலைகளில் எமது ரப்பரைத் தொடர்ந்து வாங்குவதாலேயாகும் சீனத்தைப் பொறுத்து எங்கள் மக்களிடையேயுள்ள நல்லெண்ணம் காரணமாகவே, சீன–இந்திய எல்லைப்பிணக்கின் பொழுது ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரசுக் கட்சியும் மற்றும் பிற்போக்குவாதிகளும் சீன எதிர்ப்பு வியர்தியைக் கிளப்ப முடியாது போய் விட்டது.

அண்மையில், சீனத்தைப்பற்றி அவதூறு கூறவும், அதனை ஆக்கிரமிப்பாளன் என்று பட்டம் சூட்டவும், உலக மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும் கூடுதலான பிரச்சாரம் நடைபெறுகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியமும், இந்தியப் பிற்போககுவாதிகளும் டிட்டோ கும்பலும், தொழிலாள வர்க்க இயக்கத்தில் உள்ள குறிப்பிட்ட திரிபுவாதக் கூட்டத்தினரும் இப்பிரச்சாரத்தைத் தலைமை தாங்கி நடாத்துகின்றனர். இப்போராட்டத்தின் காரணம் தெளிவானது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலுள்ள உலக ஏகாதிபத்தியத்தை முழுதாக அம்பலப்படுத்தவும் அதனை முடிவாக ஒழித்துக்கட்டவும் சீனம் உறுதியான நிலை எடுத்துள்ளது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தேசிய சுதந்திரப் போராட்டங்களுக்கு பூரணமாக ஆதரவளித்தல் வேண்டுமென்பதே அதன் நிலை உலக சோஷலிசத்துக்காகவும், மனிதனை மனிதன் சுரண்டுவதை முழுதாக ஒழிப்பதற்காகவும், நடாத்தப்படும் உலகத் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு அது உற்சாகமளிக்கின்றது இத்தகைய சீனம் எல்லாப்பிற்போக்குவாதிகளதும், சீர்திருத்தவாதிகளதும் கோபத்துக்குள்ளாகியதில் ஆச்சரியமெதுவுமேயில்லை.

மா சே துங் பேசிய பேச்சொன்றை அடிப்படையாகக் கொண்டு, சீனம் உலக யுத்தத்தின் மூலம் சோஷலிசத்தை ஸ்தாபிக்க விரும்புகின்றது; அதனால் மனித இனத்துக்கு ஏற்படக் கூடிய நாசத்தைப் பார்க்க மறுக்கின்றது என்ற ரீதியில் பலத்த பிரச்சாரத்தைச் சீனத்துக்கெதிராகத் திரிபுவாதிகள் அண்மையில் நடத்தினர். மா சே துங் உண்மையில் கூறியது என்ன? மனித இனத்தின் அரைவாசிப் பகுதியை அணு யுத்தத்தினால் அழித்து உலக சோஷலிச அமைப்பைக் கட்டி எழுப்பவா சீனம் விரும்புகின்றது? இல்லை! அணுயுத்தம் என்றால் உலக நாகரிகம் அழிந்துவிடும் என்ற கருத்தையே தோழர் மா சே துங் மறுத்துக் கூறினார். ஏகாதிபத்தியவாதிகள் அணு யுத்தமாக அமையக்கூடிய மூன்றாவது உலக யுத்தத்தை அவிழ்த்து விடுவார்களாயின் அது நாகரிகத்தின் முடிவையல்ல, உலக ஏகாதிபத்தியத்தின் முடிவையே கொண்டுவரும். (சீன மக்கள் அத்தகைய யுத்தத்தை அவிழ்த்து விடுவர் என்பதல்ல). உலக ஜனத்தொகையில் அரைவாசி அழிக்கப்பட்டாலும், நாகரிகம் வாழத்தான் செய்யும் புதிய, மேலும் சிறப்பான நாகரிகம் பழையதின் இடத்தில் கட்டி எழுப்பப்படும்.

இந்நிலையை. யுத்தத்திற்கான நிலை என ஒருவர் எங்ஙனம் எடுக்க முடியும்? ஏகாதிபத்தியவாதிகளின் அணு ஆயுத மிரட்டல் கொள்கைக்கு முன்னால் பணிந்து போகும் கொள்கையை அனுஷ்டிக்க மறுப்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை நாம் உலக யுத்தத்தையெதிர்த்தும், அதைத்தடுப்பதற்காக இயன்றளவு முயன்றும் கொண்டிருக்கும் அதேநேரத்தில், யுத்தத்திற்கு பயந்தவர்கள் அல்ல என்ற சரியான மார்க்சிச நிலையின் உறுதியான விளக்கமே இது. எப்படியாவது, எந்த நிலைமையிலாவது மனிதன் வாழ்வதுதான் முக்கியம் என்ற கருத்தை மட்டும் நாம்முன்வைப்பதாயின் அதுஏகாதிபத்திய முதலாளித்துவ அடிமைத்தனத்தைத் தொடர்ந்து அனுமதிப்பதற்கே வழிவகுக்கும். அடிமைத்தனத்தில் வாழ்வதிலும் பார்க்க சாவது மேல் எனக் கருதி மறைந்த இலட்சக் கணக்கான மக்களுக்கு இது துரோகமாகும்.

பிற்போக்குவாதிகளும், திரிபுவாதிகளும் ஒன்றாகச் சீனத்துக்கெதிராக அவதூறையும், சாபத்தையும் குவித்தபொழுதும், பீக்கிங்கிலிருந்து எழும் குரலை உலகப் பொதுமக்கள் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் கவனிக்கின்றார்கள். ஏனென்றால் அது உலகத்து ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்; மனித இனத்தில் அடக்கப்பட்டவர்களின் குரல்; சமாதானம், சமாதானப் போட்டி என்ற இனிமையான வார்த்தைகளால் ஏமாறாது, சமுதாயப் புரட்சியைக் காணத் துடிக்கும் சமுதாயத்திலுள்ள ஏழைகளின் குரல். அவர்களின் போராட்டத்திற்குத்தான் பீக்கிங் தலைமைதாங்குகின்றது; அவர்களுக்குத்தான் எதிர்காலம் என்பதில் சந்தேகமில்லை.

இன்று வாழும் தலைசிறந்த மாக்சிச லெனினிஸ்டான தோழர் மா சே துங்கின் மகத்தான தலைமையில் உள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சமாதானத்துக்காக, ஜனநாயகத்துக்காக, தேசிய சுதந்திரத்துக்காக, சோஷலிஸத்துக்காகப் போராடும் உலகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஓர் கலங்கரை விளக்கமாகும். சீனத்தின் தலைமையில் உலகம் சோஷலிஸத்தை அடையும் என்பதில் சந்தேகமில்லை. இத்திருநாள் விரைவில் உருவாகட்டும்!

# வெள்ளவத்தை ஆலையையெடுக்குக

**- எம். பி. -**

## எண்பது நாள் வேலை நிறுத்தத்திற்குப் பெருகும் ஆதரவு

வெள்ளவத்தை ஆலையில் இரண்டரை மாதங்களுக்கு மேலாக நடைபெறும் வேலை நிறுத்தத்தை நிர்வாகத்தினர் தீர்த்து வைக்கத் தவறியதனால் வெள்ளவத்தை ஆலையை அரசாங்கம் எடுத்தல் வேண்டும் என்ற குரலை வெலிமடை பாராளுமன்ற அங்கத்தவர் திரு. கே. எம். பி, ராஜரத்ன எழுப்பினார்.

துணி இறக்குமதி எங்கள் வெளிநாட்டுச் செலவாணியில் பெரும்பகுதியாக இருக்கும் நேரத்தில், துணிமதி இறக்குமதியாளர்கள் செயற்கையான கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நேரத்தில், மில் முதலாளிகளின் பிடிவாதமும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் கோரியவாறு அரசாங்கம் ஆலையை எடுக்க மறுத்ததாலும் நாடு ஒவ்வொரு நாளும் சராசரி 32,000யார் துணியை இழக்கின்றது.

இந்நேரத்தில் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தினம் தினம் பெருகுகின்றது. இவ்வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இரு அடையாள வேலை நிறுத்தங்களை ஆகஸ்ட் 29ம் திகதியும், செப்டம்பர் 16ம் திகதியும் ஒழுங்குபடுத்தியது. செப்டம்பர் 16ம் திகதி இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன வேலை நிறுத்தக்காரர்கள் ஹைட் பார்க்கிலிருந்து ஊர்வலம் சென்று ஆலைக் கண்மையில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடாத்தினர், எத்தகைய கோரிக்கைகளையும் அளிக்காது வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு தொழில் மந்திரியும், நிர்வாகமும் எடுத்த முயற்சிகள் வெற்றிதரவில்லை: கோரிக்கைகள் வெற்றி பெறாது வேலைக்குத் திரும்புவதில்லை என்ற தொழிலாளர்களின் தீர்மானமும் உறுதியும் மிகவும் உயர்ந்துள்ளது.

இந்நேரத்தில், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் ஆலை வேலை நிறுத்தத்துக்கு நிதி உதவி அளித்து, வெள்ளவத்தை ஆலைக்கு எந்தவித சேவைகளையும் செய்யாது ஆதரவளிக்குமாறு சகல பிரதான தொழிற் சங்கங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எண்ணெய்க் கம்பெனி தொழிலாளர்களும், இலங்கை பெற்றோலியம் கார்ப்பரேஷன் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தின் போது பெட்ரோல் விநியோகிக்க மறுத்தது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். வேலை நிறுத்தம் தீர்க்கப்படாவிட்டால் இன்னும் ஒரு அடையாள வேலை நிறுத்தத்தை நடாத்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் உத்தேசித்திருக்கின்றது.

★

### பொதுக்கூட்டம்

பொருள்
**சீனப் புரட்சியின் சரித்திரமும் பாடங்களும்**

பேச்சாளர்
**நா. சண்முகதாசன்**

இடம்
**ரருட் ரேட்டிலுள்ள**
**இலங்கை செஞ்சிலுவை மண்டபம்**

காலம்
**ஒக்டோபர், 2ம் திகதி, பி. ப. 5மணி**

# சுபீட்ச வாழ்வை அரவணைக்கும் சீன மக்கள்

வெளிநாட்டு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் உள்நாட்டு முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ பிற்போக்காளர்களிடமிருந்தும் நாட்டை விடுவித்து, மக்கள் சீனக் குடியரசை ஸ்தாபித்த அக்டோபர் மாதம் முதலாம் திகதியை பதினுன்காவது வெற்றி வருடமாகச் சீன மக்கள் கொண்டாடுகிறுர்கள். இதே காலகட்டத்தில் விடுதலையடைந்த மற்றும் உலகநாடுகளின் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சீனு முன்னணியில் திகழ்கிறது. பிழையற்ற மார்க்ஸிஸ-லெனினிஸ தலைமையைப் பெற்றுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் சோஷலிஸ சமூகத்தை அமைக்கும் பணியில் சீனமக்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

சீனமக்கள் தங்கள் சுதந்திரத்தையும்-நாட்டின் விடுதலையையும் நீண்ட பல வருடங்களாக, ஆயிரக்கணக்கில் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்து மாபெரும் மக்கள் புரட்சியின் மூலம் பெற்ருர்கள். இப்பெரும் இரத்தத் தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தையும்-நாட்டின் ஒரு அங்குல நிலத்தைத்தானும் இழக்க சீன மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். சீன மக்கள், நமது நாட்டைப்போன்று ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து அரசியல் அதிகாரத்தை மட்டும் பெற்ற சுதந்திரத்தைப் போலல்லாது முழு நாடும் சம்பூர்ண விடுதலையடையவே இத்தகைய பெரும் போராட்டம் செய்தார்கள்.

நாட்டுச் செல்வங்களை தங்கள் இஷ்டம்போல் கொள்ளையிட்டுச் செல்ல ஏகாதிபத்தியங்களை அனுமதிக்கும் சுதந்திரத்தை சீன மக்கள் விரும்பவில்லை. நாட்டிலுள்ள மக்களின் உழைப்பை ஏகாதிபத்தியம் மிகக் குறைந்த விலையில் சூறையாடிச் செல்ல வழிகோலும் சுதந்திரத்தைச் சீன மக்கள் விரும்பவில்லை. தங்கள் நாட்டுமக்களின் அபிலாஷைகளுக்கு மாருக, ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாக்கும் சுதந்

**டி. பி. அல்விஸ்**


ரத்தையும், சீனமக்கள் விரும்பவில்லை. நாட்டின் எதிர்காலத்திற்குப் பொறுப்பாயுள்ள வருங்கால சந்ததியினரின் கல்வியை ஏகாதிபதித்யத்திற்கு தொண்டு செய்யும் விதேசிய மிஷனறியிருக்கு கையளித்துவிட்டுப்பெறும் சுதந்திரத்தையும் சீனமக்கள் விழையவில்லை. மாருக, போராட்டம் இல்லாது ஏகாதிபத்தியத்திடமிருந்து பரிபூரண விடுதலையைப் பெற இயலாது என்பதை சீன மக்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

இவைகளைப் பார்க்கும்போது நம் நாட்டைப்போலல்லாது, 1949 ஆம் வருடம் அக்டோபர் முதலாம் திகதி சீனமக்கள் அமைத்த "மக்கள் சீன குடியரசு" பூரணத்துவம் பெற்ற விடுதலையடைந்த குடியரசாக அமைந்தது. இந்த மக்கள் சீன குடியரசு, உண்மையில் சீன நாட்டின் சரித்திரத்தில் புதியதோர் நவயுகத்தை அன்று சிருஷ்டித்தது

பன்னெடுங்காலமாக, சீன தேசம் வெளிதேச ஏகாதிபத்தியங்களின் பிடிப்பில் இருந்தாலும் முதலாளித்துவம் வளர்ச்சியுறவில்லை. சீனு ஒரு பின்தங்கிய விவசாய நாடாகவே வைத்திருப்பதில் ஏகாதிபத்தியவாதிகள் மிக அக்கரை காட்டியுள்ளார்கள். ஏகாதிபத்திய சுரண்டல் நிலமாக, தங்கள் பொருட்களை விற்கும் சந்தையாக சீனுவை ஆக்கியிருந்தாகள். பின்னடைந்த வசாய நாடு என்பதைப்போக்கி தொழில் வளர்ச்சியுற்ற பலம்மிக்க சீனு நாட்டை வளர்ப்பதற்கு 1943, அக்டோபர் முதலாம் தேதி சீன மக்கள் அஸ்திவாரமிட்டார்கள்.

> தோழர் டி பி. அல்விஸ் (இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் பொருளாளர்) சமீபத்தில் மக்கள் சீனத்திற்குச் சென்று திரும்பியவர் அங்குதான் கண்ட அனுபவங்களை இங்கு விவரித்துள்ளார்.

இப்பெரும்கடமையை அவர்கள் நிறைவேற்றியது மிகப் பெரிய சாதனை -புதுமையென்றே கூற



வேண்டும். சீனநாடு செல்லும் எவரும் தங்கள் கண்களால் இவற்றைக் காணமுடியும். பலவித நெருக்கங்களின் மத்தியில் திட்டமிட்டபிரகாரம் இலக்கையும் வளர்ச்சியடைந்துள்ளது சீனு. அறுபத்தைந்து கோடிக்குமேல் சனத்தொகையைக்கொண்ட சீன நாட்டுமக்கள் எத்தகைய அதிகார வர்க்க சட்டங்களாலும் செயல்படவில்லை. மாருக புதிய நவயுகத்தை-சோஷலிஸ்ட் சீனத்தை கட்டி அமைக்க வேண்டும் என்ற பெருநோக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி தம்மிஷ்டபூர்வமாக செயல்பட்டனர்.

சீன நாட்டின் நிரந்தரச் சொத்து என்று சொல்லப்பட்ட. கொடிய தொத்து நோய்கள், பஞ்சம், பட்டினி, வெள்ளக்கொடுமை, சீரழிந்த வாழ்வு என்பவைகளெல்லாம் இன்று மறக்கப்பட்ட வார்த்தைகளாகிவிட்டன. புத்தம்புதிய வாழ்வில் சீன மக்கள் மகிழ்வொடு ஈடுபடுவதைக்காணும் போது அவர்களின் சாதனை வியப்பாகவுள்ளது.

சீன மக்களின் அபிலாசைகள் இன்னும் பூரணத்துவம் அடையவில்லை. என்ருலும் கடந்த ஒரு சிலவருடங்களில் பிரமிக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள். பொருளாதாரத்தில் மட்டுமல்லாது, சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளார்கள்.

இரவு நேரங்களில் தூங்குவதற்குக்கூட இடமில்லாது நடைபாதையில் வாழ்ந்த தொழிலாளர்களின் இன்றையவாழ்க்கைத்தரம் மிக மிக உயர்ந்துள்ளது. புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பெரிய தொழில் நகரங்களில் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதோடு, சகல வசதிகளும் கொண்ட பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், நீச்சல் தடாகங்கள், வியாபார ஸ்தலங்கள், கலாச்சார மண்டபங்கள் ஆகிய அனைத்தும் உள்ளன. தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். துன்பம் என்ருே தொலைந்துவிட்டது. அவர்கள் தொழிற்சாலைகளின்உரிமையாளர்கள், நிர்வாகஸ்தர்கள், உழைப்பாளர்கள். குறிப்பாக, தொழிற்சங்க உரிமைகளுக்கான போராட்ட அங்கு இல்லை. சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களின் இன்றைய வாழ்க்கைத்தரத்தோடு நமது வாழ்க்கைத் தரத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் வெட்கமாயிருக்கிறது. காலனி நாடுகளிலும். நம்மைப் போன்ற காலனி சார்புள்ள நாடுகளிலும் உள்ளோரை அவர்கள் வரவேற்கும் தன்மையைப் பார்க்கும் போது காண்பவருக்கு வீறு பிறக்கிறது. அவர்சள் தங்கள் நாட்டு மக்களின் வெற்றியில் காட்டும் உற்சாகமும், மற்றும் உலக மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றிக்கு அளிக்கும் ஆதரவு,ஒத்துழைப்பு ஆகிவைகளையும் காணும்போது அவர்களுக்கு சுபீட்ச எதிர்காலம் உண்டென நிச்சயமாகக் கூறலாம்

# சீனுவில் ஒரு சம்பவம்!


—கே. ஏ. சுப்பிரமணியம்—

[ செயலாளர், கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கம், யாழ்பிரதேசக் கிளை ]

சீனப் புரட்சி தினத்தையொட்டி 'தொழிலாளி' விசேஷ மலராக வெளிவருகிறது. அதற்கு ஒரு கட்டுரை வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டேன். நான் சீனுவில் கண்ட, தெரிந்து கொண்ட விஷயங்கள்-பெற்ற அனுபவங்கள் எவ்வளவோ. எல்லாவற்றையும் இக்கட்டுரையில் சுருக்கிக்கொள்ள முடியாது. முடிந்தவரை என் அனுபவங்களை தொடர்ந்து எழுத முடிவு செய்துள்ளேன். இக்கட்டுரையில் ஒரே ஒரு சம்பவத்தை மட்டுமே எழுதுகிறேன்.

சீனுவைப்பற்றிய பேச்சு இன்று உலகில் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. வளர்ந்து வரும் ஜனப் பெருக்கத்தைச் சமாளிக்க முடியாத சீன அரசாங்கம் யுத்த முஸ்தீபுகளில் இறங்கி மக்களின் எண்ணத்தைத் திசை திருப்பி வருகின்றது, என்று பத்திரிகைகளும் வானெலிகளும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றன. குறிப்பாக நமது அண்டை நாடான இந்தியா இப்பிரச்சாரத்தை மும்முரமாகச் செய்து வருகின்றது.

சீனுவின் விவசாய அமைப்பு முறை (கம்யூன்கள்) தொழில் உற்பத்திமுறை-வளர்ந்து வரும் ஜனப்பெருக்கம் இவற்ருல்தான் அங்கு வறுமை-பசி பட்டினி-சாவு - சர்வாதிகாரம் நிலவுகிறது என்றும் திட்டமிட்ட பிரசாரம் சீனுவிற்கெதிராக உச்ச கட்டத்தையடைந்துள்ள அச்சந்தர்ப்பத்தில்தான் ஜூன் மாத நடுப்பகுதியில் சீனுவிற்கு விஜயம் செய்தேன். அங்கு ஆறு வாரங்கள்வரை தங்கி தொழில் கேந்திர நகரங்களையும், விவசாயப் பண்ணைகளையும், கல்வி நிலையங்களையும், கலாச்சார மன்றங்களை



யும், தொழிலாளரினதும், கிராமப்புறங்களினதும் வாழ்க்கை-நிலைமையையும் மற்றும் பல விஷயங்களையும் நேரடியாகத் தெரிந்து கொண்டேன்.

இதே காலத்தில் சீனுவிற்கு வந்திருந்த வெளியூர்த் தூது கோஷ்டிகள், பத்திரிகை நிருபர்கள், ஸ்தானிகராலயப் பிரமுகர்கள் ஆகியவர்களுடன் கலந்துரையாடியதன் மூலம் சீனுவைப்பற்றி இன்னும் பல உண்மைகளையும், அனுபவங்களையும் பெறக்கூடியதாக இருந்தது.

எதிரிகளின் சீனுவைப்பற்றிய பொய்ப்பிரசார வேகத்தில் சிக்கி நான்கூட சீனு அவ்வளவாக முன்னேறவில்லை-முன்னேறியிருக்கவே - 59, 60, 61ம் ஆண்டுகளில் அங்கு இயற்கைக் கோளாறுகளால் விளைச்சலுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டு இருந்தது. தனியனுக நின்று சீனு எப்படி முன்னேறும்? என்றெல்லாம் நினைத்து சீனுவின் மகத்தான முன்னேற்றத்தைக் குறைத்து மதிப்பிட்டுத்தான் பிரயாணத்தை ஆரம்பித்திருந்தேன். ஆனல் அங்கு நான் கண்டதும், தெரிந்துகொண்டதும் முற்றிலும் 'மாருனது. சீனு முக மிக முன்னேறிவருகிறது' இந்தக் கருத்தை அங்கு வந்திருந்த தூதுகோஷ்டிகளும் கொண்டிருந்தன. அவர்களில் சிலர் சீனுவிற்கு இரண்டாவது தடவையாக விஜயம் செய்தவர்களாயும், மேற்கத்தேய நாடுகளுக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்தவர்களாயும் இருந்தனர். இவர்களில் சிலருடன் நாங்கள் பேசும் வாய்ப்பும், எங்கள் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. மேலும் நாம் அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்துகொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகள் எப்படியானவை என்று சொல்வதற்கு ஒரே ஒரு விஷயத்தைக் மட்டும் கூறுகிறேன்.

சீன மக்களிடையே வறுமை, பற்ருக்குறை இருக்கிறதா? அதனை எப்படித் தெரிந்து கொள்ளலாம்? இது இங்கிருந்து போகும் பொழுதே என் முன் எழுந்த கேள்விகள். சிந்தனை செய்த நான் ஒரு முடிவிற்கு வந்து, முடிந்தவரை கிராமப்புறங்களுக்கும், தொழிலாளர் வீட்டுப்புறங்களுக்கும் போகவேண்டும், அங்கு அவர்களது வீடுகளிலோ சுற்றுப்புறங்களிலோ குடும்பச் சண்டைகள் நடக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டும், என எண்ணினேன். மொழி விளங்காவிட்டாலும் பலத்த சத்தம் போட்டு கணவன் மனைவி சண்டை போட்டால் அது பற்ருக்குறைக்காகத்தானே இருக்சமுடியும், என்பது என்பது எனது கணிப்பு. இதனை என்னுடன் வந்திருந்த தோழர் அல்விஸ் அவர்களிடமும் கூறினேன்,

சீன தேசம் சென்ற நாள் முதல் திரும்பும் நாள்வரை முடிந்த அளவு கிராமப்புறத்து வீடுகளுக்கும், தொழிலாளர் வீடுகளுக்கும் போனேம். சில சமயங்களில் வேறு எங்காவது போய்க்கொண்டிருக்கும்சமயம் திடீரென காரை நிறுத்தி அந்த வீடுகளுக்குப்போவோம். அங்கு அவர்களுடன் கதைப்போம்-விசாரிப்போம். வீட்டில் எத்தனைபேர் என்று கேட்போம். அவர்கள் உணவு வகைகளைக் கேட்போம். உடைகளைக் கவனிப்போம் - எங்கும் மிகவும் சந்தோசமான வாழ்வு வாழ்கிருர்கள். கம்யூன்கள் தான் தங்களைக் காப்பாற்றியது என்று பெருமைகொள்கிருர்கள். ஆம் கம்யூன்கள் அவர்கள் வாழ்விற்கு வெற்றிதேடிக் கொடுத்திருககிறது. கோவா, கத்தரி, தக்காளிபோன்ற காய்கறிகள் ஒரு ருத்தல் அரைச் சதத்திற்கு விற்கப்படுகின்றன. பழவகைகள், மீன், முட்டை, இறைச்சி போதியளவு வாங்க முடியும். அதுவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

கம்யூன்கள், காய்கறிகள்-தானியங்கள் - பழவகைகள் மாத்திரம் உற்பத்தி செய்யவில்லை. வீதி அமைத்தல், நகர நிர்மாணம், நீர்பாசனவசதி செய்தல், விவசாயத்திற்கு அனுசரனையான சிறு கைத்தொழில்களையும் செய்து வருகிருர்கள். கம்யூன்களில் விளையாட்டு அரங்கங்கள், ஆஸ்பத்திரி, சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், கலை கலாச்சார மன்றங்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு கம்யூன் விவசாயிகள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிருர்கள். விளங்கக்கூடிய வார்த்தையில் சொல்லப் போனல் சீனுவில் ஒவ்வொரு கம்யூனும் ஒவ்வொரு கிராம ஆட்சியாக அமைந்துள்ளது என்று கூறலாம். 1962ம் 63ம் ஆண்டில் நாட்டில் பெருவாரியான உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டதோடு கால்நடைப் பண்ணைகளும் பெருமளவில் வளர்ந்தன. இப்போது பருத்தி உற்பத்தியிலும் விவசாயத்திலும் நவீன சாதனங்களைப் பயன் படுத்துவதிலும் சீனர்கள் கவனம் செலுத்தி வருகிருர்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

# பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஏன் அவசியம்?

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கொள்கை மாக்சிச மாளிகையின் அத்திவாரக் கல்லாகும். லெனின் தன்னுடைய சிறந்த பு தகங்களுள் ஒன்றான "அரசும் புரட்சியும்" என்ற புத்தகத்தில் இதனைப் பற்றி நன்கு விளக்கியுள்ளார். புகழ் பெற்ற இப்புத்தகத்தில் இம்முக்கிய விஷயம் சம்பந்தமாக மாக்சினதும் ஏங்கள்ஸினதும் முடிவுகளைத் திருப்பிச் சொல்லவும், திருப்பி வலியுறுத்தவும் லெனின் முயல்கின்றார். பாராளுமன்ற வாத மாயையில் அமிழ்ந்திருந்த லெனின் காலத்தைய சோஷல் ஜனநாயகவாதிகள் மாக்சிசத்தைத் திரித்து, அதன் புரட்சிகரத் தன்மையைப் பறித்ததுடன் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை மறுக்குமளவிற்குப் போனதினால் லெனின் இம்முயற்சியில் ஈடுபடுவது அவசியமாயிருந்தது.

இலங்கையிலுள்ள மாக்சிஸ்டுகளுக்கும் இதேபோன்றதோர் நிலைமை ஏற்பட்டுள்ளது. பாராளுமன்ற மாயை எமது நாட்டில் ஆழமாகப் பதிந்துள்ளதாலும், மாக்சிசத் தலைவர்கள் எனக் கூறப்படுபவர்களில் பலர் அதிகாரம் பெறுவதற்கு ஒரேவழி பாராளுமன்றம் என நம்பியிருப்பதாலும், அவர்கள் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் ஆவசியத்தைப் பற்றிய மாக்சிசப் போதங்களை முழுதாக மறுத்துள்ளனர். அல்லது அதன் முக்கியத்துவத்தைக்கவனத்திலெடாது மழுப்பியுள்ளனர்.

### அரசாங்கம் - வர்க்க அடக்கு முறையின் ஆயுதம்

தொழிலாள வர்க்கம் பாவிக்கும் ஒருவகை அரசாங்க அதிகாரம் என்ற முறையில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை விளங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் பற்றிய மாக்சிசக் கொள்கையைப் பூரணமாகப் புரிந்துகொள்வது மிக அவசியமாகும். அரசாங்கம் என்பது என்ன? முதலாளித்துவ தர்க்க நிபுணர்கள் எங்களுக்குக் கூறமுயல்வது போல் சமுதாயத்திற்கு வெளியேயிருந்து சமுதாயத்தில் நடைபெறும் வர்க்கப்போராட்டத்தில் நடுநிலைமை வகிக்கும் ஒன்றா? வர்க்க முரண்பாட்டை ஒழுங்குபடுத்தவும், சமுதாயம் சிறப்பாக நடைபெறுவதற்குமாக எழுந்த ஒரு அமைப்பே அரசாங்கம் எனச் சிலர் எங்களை நம்பவைக்க முயல்கின்றனர். உண்மையில் அரசாங்கம் இப்படிப்பட்ட தொன்றுமில்லை. ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை நசுக்குவதற்கான ஆயுதம் அரசாங்கம். நவீன சமுதாயத்தில் போட்டியிடும் வர்க்கங்கள் ஒன்றுபட முடியாததன் விளைவாக எழுந்ததே அரசாங்கம். இந்த அரசாங்க யந்திரம் 18ம் 19ம் நூற்றாண்டுகளில் வர்க்கப் போராட்டத்தின் தீவிர வளர்ச்சியின் விளைவாகப் பூரணமாக்கப்பட்டு மேலும் விருத்தியாக்கப்பட்டுள்ளது.

தொழிலாள வர்க்கம் தனது சக்தியைப் பெருக்கி மூலதனத்தின் பலத்துக்குச் சவால்விட முயன்றபொழுது, முதலாளி வர்க்கம் (பூர்ஷுவா), கிளர்ந்தெழும் தொழிலாள வர்க்கத்தை அடக்கி வைத்திருக்க உதவும் தனது அடக்குமுறை ஆயுதங்களை மேலும் விருத்தியாக்கியுள்ளது. இங்ஙனம் அரசாங்க அதிகாரத்தின் தற்கால உறுப்புக்களாகிய, நிரந்தர பட்டாளம், பொலிஸ் படை, சிறைக்கூடம், நீதிபரிபாலனம், மத்தியத்துவப் படுத்தப்பட்ட அரசாங்க நிர்வாகம் முதலியவை ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், பட்டாளத் தலைவர் முதலிய உயர்ந்த உத்தியோகத்தர்கள் எந்த அரசியல் கட்சி தலைமையிலிருந்தாலும், அது யூ.என் பி.யாகவோ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியாகவோ இருந்தாலும் கடமையுடன் ஊழியம் செய்வர் என்ற விளையாட்டுக் கதையைப் பலமுறை கேள்விப்பட்டிருக்கின்றோம். தொழிலாள வர்க்கத்தின் பகுதிகள் கூட முதலில் இத்தகைய அழகு வார்த்தைகளினால் ஏமாற்றப் பட்டுள்ளது. தொழிலாளர்கள் இதனை உணர்வதற்குக் கொஞ்சக்காலம் எடுக்கும். ஒரு ஊர்வலத்தில் கலந்துகொண்டதற்காகத் தொழிலாளியின் மண்டையைப் பொலிஸார் உடைக்கும் பொழுதோ, அன்றி ஒரு வேலைநிறுத்தத்தின் பொழுது நடந்த சிறியதோர் சம்பவத்திற்காக அவனுக்கு மறியல் கிடைக்கும் பொழுதே தான் உண்மை நிலையினைத் தொழிலாளிக்கு உணர்த்த முடியும். தொழிலாளியின் மண்டையைப்பிளந்த பொலிசும், அவனுக்கு மறியலளித்த நீதிபதியும் உண்மையில் நடுநிலைமை வகிப்பவர்களல்ல தனிநபர் சொத்து ரிமையின் மறுவார்த்தைகளில் முதலாளித்துவவத்தின் பாதுகாவலர்கள் என்பதைத் தொழிலார்களுக்கு உனர்த்தமு யும் முதலாளிமார் வர்க்கத்தின் உறுப்பினர் எவரும் பொலிசினால் புடைக்கப்படுவதைக் காணாமலும் கேள்விப்படாமலும் இருப்பது தொழிலாளியின் இம்முடிவை மேலும் உறுதியாக்குகின்றது. தமது தொழிலாளர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுத்ததற்காகவோ அன்றி அவர்களை வெளியில் விட்டதற்காகவோ முதலாளிமார்களுக்கு மறியல் தண்டனை அளித்ததையும் தொழிலாளி என்றுமே கேள்விப்பட்டதில்லை

### முதலாளி வர்க்கத்தின் அரசாங்கம் இயந்திரத்தை நொறுக்கி நிர்மூலமாக்க வேண்டும்

அரசாங்கம் என்பது ஆளும் வர்க்கத்தினரால் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை அடக்குவதற்கென உருவாக்கப்பட்ட

**நா. சண்முகதாசன்**

இயந்திரம் என்ற கருத்தை வர்க்கப் போராட்டத்தின் கோர உண்மைகள் தொழிலிக்குத் தெளிவாக்குகின்றன. ஆகவே இந்த முதலாளித்துவ அரசு இயந்திரத்தை தகர்த்தெறிந்து, நிர்மூலமாக்கி அதனிடத்தில் தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்கு உதவக்கூடிய அரசாங்க இயந்திரமாகிய பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை அமைப்பதன் மூலமாகவே மூலதனத்தின் நுகத்தடியிலிருந்து தனக்கு விடுதலை கிடைக்கும் எனும் முடிவுக்கு அவன் இயற்கையாக வருகின்றான். முதலாளி வர்க்கம் தனது நலன்களைப் பாதுகாப்பதற்கென பல்லாண்டு காலமாகப் பிரயாசைப்பட்டுக் கட்டிய அரசாங்க இயந்திரத்தைப் பிடித்து, தொழிலாள வர்க்கத்தின் நலனுக்காக அதனைப் பாவிக்கலாம் என்ற மயக்கம் தொழிலாளர்களிடையே கிடையாது.


பாராளுமன்றம் மூலம் அதிகாரம் பெறலாம் எனும் மயக்கங்களை அரவணைத்துக்கொண்டிருக்கும் சகல தொழிலாள வர்க்க அரசியல்வாதிகளும் பதிலிறுக்கவேண்டிய அடிப்படைக் கேள்வி இது. தற்பொழுதைய முதலாளித்துவ அரசியந்திரத்தை தொ லாள வர்க்கம் எடுத்து தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்காக அதனைப்பாவிக்கமுடியுமா? உறுதியாக ''இல்லை'' என்ற பதிலை மாக்சிசம் அளிக்கின்றது. மாக்சும் ஏங்கல்சும் கூட ஆரம்பத்தில் இக் கேள்விக்குப் பதிலைக் காணமுடியவில்லை. நிர்மூலமாக்கப்பட்ட அரசு யந்திரத்தின் இடத்தில் எதனை ஏற்படுத்துவது? உண்மையில் கம்யூனிஸ்ட் அறிக்கை இப்பிரச்சினையைச் சுட்டிக்காட்டுகிறதேயன்றி முடிவை அளிக்கவில்லை. 1871ல் நடைபெற்ற பாரிஸ கம்யூனின் அனுபவமே இக் கேள்விக்கான விடையை மாக்சுக்கு அளித்தது. கம்யூனிஸ்ட் அறிக்கையில் அவசியமாகச் செய்யப்படல் வேண்டுமென மாக்ஸ் நினைத்த ஒரேயொரு ''திருத்தம்'' பாரிஸ் கம்யூன் புரட்சிகர அனுபவத்தின் அடிப்படையில் இவ்விஷயம் பற்றியே செய்யப்பட்டது.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் ஆசிரியர்களான மார்சும் ஏங்கல்சும் 1872ம் ஆண்டு ஜூன் 24ம் திகதியிட்டு கையொப்பமிட்டுள்ள ஜேர்மன் பதிப்பின் கடைசி முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது என லெனின் சுட்டிக் காட்டுகின்றார்.

'தொழிலாள வர்க்கம் ரெடிமேட் அரசு இயந்திரத்தை இலேசாகப் பிடித்து தனது நன்மைக்குப் பாவிக்க முடியாதென்பதைக் கம்யூன் குறிப்பாக.. டுத்துக்காட்டியுள்ளது''

1871ம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 12ம் திகதி மாக்ஸ் குஜெல்மனுக்கு எழுதினார் ;-

''.....என்னுடைய பதினெட்டாவது புறுமெயரின் கடைசிப் பாடத்தை நீங்கள் பார்த்தீர்களானால் நீங்கள் கவனிக்க முடியும். பிரெஞ்சுப் புரட்சியின்



நா. சண்முகதாசன்

அடுத்த முயற்சி முன்னர் நடந்ததுபோல் அரசாங்க இராணுவ இயந்திரத்தை ஒருவர் கையிலிருந்து மற்றவருக்கு மாற்றுவதோடு நின்றுவிடாமல் அதனை (இயந்திரத்தை) நிர்மூலமாக்கிவிடவேண்டும்; கண்டத்தில் நடைபெறக்கூடிய எந்த உண்மையான மக்கள் புரட்சியினதும் மூலாதாரமான விதி இதுவே. எங்களது வீரம் நிறைந்த பாரிஸ் தோழர்களின் புரட்சி இதனைத்தான் குறிப்பிடுகின்றது.''

இந்த மிக முக்கிய அத்தியாவசிய விஷயம் பற்றி மாக்சிசத்தின் மூல பிதாக்களின் போதனை இதுவே. முதலாளித்துவ அரசு இயந்திரத்தைப் பிடித்து அதனைத் தனது நோக்கங்களுக்காகப் பாவிக்க முடியும் எனத்தொழிலாளவர்க்கம் எதிர்பார்க்க முடியாது. எந்தப் புரட்சியும் வெற்றிபெறுவதற்குமான பூர்வாங்க விதி முதலாளித்துவ அரசு இயந்திரத்தை உடைத்தெறிவதே.

நிர்மூலமாக்கப்பட்ட அரசாங்க யந்திரத்திற்குப் பதிலாக எதனை ஏற்படுத்துவது? மாக்சிச வாதிகள் குழப்பவாதிகள் (Anarchists) அல்ல. புரட்சியின் அடுத்த கணம் அரசை அழித்துவிடல் வேண்டுமென அவர்கள் சொல்லவில்லை. அரசு ஒருகாலமும் அழிக்கப்படவில்லை. ஏங்கல்ஸ் சுட்டிக் காட்டியவாறு, வர்க்க முரண்பாடுகள் முடிவாக மறையும் பொழுதே அரசு இல்லாமல் போகின்றது. ஆனால் வெற்றி பெற்றதோர் பாட்டாளி வர்க்கம், சோஷலிச மாளிகையைக் கட்டி எழுப்புவதற்கு மட்டுமல்லாது முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பைப் பலாத்காரத்தினால் நசுக்குவதற்கும், அதற்கென அரசாங்கஅதிகாரம் அவசியமாகின்றது. எந்தஆளும் வர்க்கமும் விருப்பத்துடன் தானாகவே ஆட்சியை விட்டுப் போனதோ அன்றி ஜனநாயகத் தாபனங்களின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டதோ சரித்திரத்தில் கிடையாது. முதல் ஆட்டத்தில் தோற்கடிக்கப்பட்டாலுமது தொடர்ந்து எதிர்க்கின்றது.

இந்தநோக்கத்திற்காக முந்திய அரசாங்கஇயந்திரத்துடன் அதற்கிருந்த நெருங்கிய தனிப்பட்ட தொடர்புகளையும், மற்றும்தொடர்புபுகளையும், பாவிக்கின்றது. இது காரணமாகவே பழைய அரசாங்க இயந்திரம் உடைக்கப்பட்டு அதனிடத்தில் தொழிலாளவர்க்க நலன்களுக்கு உதவக் கூடிய புதிய அரசாங்க இயந்திரம்அமைக்கப்படுதல் வேண்டும். உண்மையில் பார்க்கப்போனால் அக்டோபர் புரட்சி உட்பட்ட அநேகம் புரட்சிகள் சமாதானப் புரட்சிகளாகவே ஆரம்பிக்கின்றன. பதவியிலிருந்து துரத்தப்படும் வர்க்கத்தின் எதிர்ப்பே அதனைப் பலாத்கார புரட்சியாக மாற்றுகின்றது. பதவியிழந்த வர்க்கங்களின் இந்தத்தவிர்க்க முடியாத எதிர்ப்பைப் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் இரும்புக் கரத்தினால்தான் நசுக்கமுடியும். எல்லாப் புரட்சிகளின் பின்னரும் சர்வாதிகாரம் ஒன்று ஏற்பட்டுள்ளதும் உண்மையே.

### பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்- ஜனநாயகத்தின் அதி உயரிய படி

புரட்சிவாதிகள் என்று கூறப்படுபவர் சிலர் 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்' என்ற சொல்லைக் கேள்விப்பட்டதும் நடுநடுங்குகின்றனர். இத்தகைய பேச்சு வலதுசாரி முதலாளித்துவ சக்திகள் சர்வாதிகாரத்தை ஏற்படுத்துமாறு அவர்களைத் தள்ளுமென இவர்கள் வாதிக்கின்றனர். எல்லா முதலாளித்துவ அரசுகளும் ஏதோ ஒருவகையில் முதலாளித்துவ சர்வாதிகாரமே என்ற நிலை இல்லை என்பது போலிருக்கின்றது இவர்கள் பேச்சு. முதலாளித்துவ சர்வாதிகாரம், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஆகியவைபற்றி ஒரே முறையில் எங்ஙனம் பேச முடியும்? முதலாளித்துவ சர்வாதிகாரம் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு மேலாக நடாத்தும் சர்வாதிகாரம்; அதே நேரத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பரந்த பெரும்பான்மையினர் சிறிய சிறுபான்மையினருக்கு மேலாக நடாத்தும் சர்வாதிகாரம். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஜனநாயகத்தின் உச்சபடி என லெனின் விபரித்துள்ளார்.

ஆகவே தொழிலாள வர்க்கம் ஆட்சிக்கான தனது போராட்டத்தில், தற்பொழுதைய முதலாளித்துவ இயந்திரத்தைப் பிடித்துத் தனது நலனுக்காக அதனைப் பாவிக்க முடியாது என்பதையும், தற்பொழுதைய அரசாங்க இயந்திரத்தை அது உடைத்தெறிந்து அதனிடத்தில் தொழிலாள வர்க்கம் அரசு இயந்திரமாகிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்தல் வேண்டுமெனவும் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். அப்பொழுதே தொழிலாள வர்க்கம் ஆட்சிபெறும் முயற்சி வெற்றி பெறும்ருசியப்புரட்சி, சீனப் புரட்சி போன்ற வெற்றி அடைந்துள்ள எல்லாப்புரட்சிகளும் இந்தப் புரட்சிகரக் கொள்கைகளைக் கடைப்பிடித்ததனாலேயே வெற்றி அடைந்தன. இப் புரட்சிகரக் கொள்கைகளை எந்த வழியிலாவது மாசுபடுத்தினால் அது விட்டுக் கொடுப்புக்களிலும், வர்க்க இணைவிலும், முடிவில் தோல்வியிலுமே முடியும்.

# மக்கள் சீனத்தின் பொருளாதார அபிவிருத்தி

கடந்த சில ஆண்டுகளில் பல பொருளாதார இடர்ப்பாடுகளை சீன எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனல் சீன மக்கள் இவற்றைத் திறமையுடன் சமாளித்துச் சரிப்படுத்தியுள்ளனர். சீனமக்கள் தமது திறமையிலே நம்பிக்கை வைத்து, மிகுந்த சிரமத்துடன் வேலைசெய்ததன் விளைவாகத் தற்பொழுது சீன நாட்டின் தேசியப் பொருளாதாரம் எல்லா அம்சங்களிலும் சிறப்பாக வளர்ந்துள்ளது. மக்களுக்குச் சாதகமாக அமையாத அம்சங்கள் தற்காலிகமாக இருக்கும் பொழுது மக்களுக்குச் சாதகமான அம்சங்கள் நிரந்தரமாக உள்ளன என்பதையே இது காட்டுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இடர்களும் இன்னல்களும் ஏற்படலாம். ஆனல் மக்கள் ஒற்றுமையாகவும், சரியான தலைமையுடனும் திகழ்வார்களாயின் ஒவ்வொரு கஷ்டத்தையும் அவர்களால் வெல்ல முடியும்; அவர்கள் வெற்றியை நோக்கி முன்னேறுவதை எச்சக்தியுமே தடை செய்ய முடியாது என்பதைத்தான் சீன மக்களின் பொருளாதார வெற்றிகள் விளக்குகின்றன.

**கஷ்டங்களின் காரணம் யாவை ?**

பொருளாதாரக் கஷ்டங்கள் பலவித காரணங்களால் ஏற்பட்டன.

**ஆனந்தன்**

இயற்கை இடையூறுகள்: 1959 தொடக்கம் 1960 வரை மூன்ருண்டுகளாகச் சீனம் தொடர்பாக இயற்கை இடையூறுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. 1959-ல் 65 கோடி மூ (சீன அளவை) பிரதேசப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. இது முழுதாகப் பயிர் செய்யப்பட்ட பிரதேசத்தில் மூன்றில் ஒன்ருகும். 1961-ல் 90 கோடி மூ பிரதேசப் பயிர் பாதிக்கப்பட்டது. இது பயிர் செய்யப்பட்ட பிரதேசத்தின் அரைவாசிக்குக் கூடிய பகுதியாகும். இவை ஒரு நூற்ருண்டில் ஏற்பட்ட மிக பெரிய இடையூறுகளாகும். பெரும் பரப்புக்கள் பாதிக்கப்பட்டதாலும், இவை ஆண்டுக் கணக்காகத் தொடர்ந்து நடைபெற்றதாலும் கமத்தொழில் உற்பத்தி 1959-ல் குறைந்தது; 1960-ல் மேலும் குறைந்தது.

1958–1960 காலகட்டத்தில் சோஷலிச நிர்மாணத்தில் மகத்தான வெற்றிகள் ஈட்டப்பட்டன. அதே நேரத்தில் சில குறைபாடுகளும் ஏற்பட்டன, தவறுகளும் செய்யப்பட்டன: சில நடைமுறை வேலைகளை அமுல்படுத்தும் பொழுது சோஷலிசத்தைக் கட்டி எழுப்புவதற்கான பொதுக்கொள்கையைப்பூரணமாக அனுசரிக்கவில்லை என்பதே அதன் அர்த்தம்.

இவை பொதுவாகத்தேசிய பொருளாதாரத்திலும் குறிப்பாகக் கைத்தொழிலுக்கும், கமத்தொழிலுக்கும் இடையேயும் வில்லங்கங்களை ஏற்படுத்தின. தற்காலிகமான ஆனல் பாரதூரமான கஷ்டங்கள் தேசிய நிர்மாணத்தை வழிமறித்தன. மக்கள் வாழ்வு இதனல் ரொம்பவும் பாதிக்கப்பட்டது.

**சீன விரோத பிரச்சாரம்**

சீன தற்காலிகமான பொருளாதாரக் கஷ்டங்களுடன் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது ஏகாதிபத்தியவாதிகளும் சும்மா பார்த்துக்கொண்டிருக்கவில்லை. சீனத்தின்கஷ்டங்களைக்கண்டு அவர்கள் கைகொட்டி மகிழ்ந்தனர். சீனத்துக்கு எதிராக உக்கிரமான போராட்டம் நடாத்துவதற்கு இந்நிலைமையைப்பாவித்தனர். இதுமட்டுமல்லாது சீனத்தின் கஷ்டங்களை மேலும் பெருக்கி, அந்நாட்டைப்பலவீனப்படுத்தவும், தனிமைப்படுத்தவும் நோக்கப் கொண்டு ஆக்கிரமிப்புச் சதி நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனத்தின் கடல், ஆகாயப் பிரதேச உரிமையைக் கூடுதலாக மீறியது; சீன நாட்டில் படையெடுப்பதென சியாங் கே ஷேக்கின் போலி மிரட்டல்களுக்கு ஆதரவளித்து தைவான் பகுதியில் 1962-ல் நெருக்கடியைப் பெருக்கியது

1959ம் ஆண்டு வசந்த காலத்தில் இந்திய பிற்போக்குவாதிகள், திபேத் பகுதி அடிமைச் சொந்தக்காரர்களை எதிர்ப்புரட்சி செய்யுமாறு தூண்டிவிட்டனர். பின் 1962 கோடை காலத்தில் அவர்கள் எல்லை மோதுதலை உருவாக்கிச் சீனத்தின்மீது ஆயுதப்போர்தொடுத்தனர்.


1960 ஜூலையில் சோவியத் நாடு சீன-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையேயுள்ள தத்துவார்த்த வித்தியாசங்களை அரசாங்க தொடர்புகளில் கூடப் புகுத்தியது. சீனத்தில் கடமையாற்றிய 1300க்கு மேற்பட்ட சோவியத் நிபுணர்களை அது சடுதியாக மீட்டுப் பெற்றுக்கொண்டது. ஏற்றுக்கொண்ட நூற்றுக்கணக்கான ஒப்பந்தங்களையும் வேலைகளையும் வீசி எறிந்தது. பல முக்கிய இயந்திர, உபகரணப் பொருள் உதவியை அது நிற்பாட்டியது. சீனத்தின் பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, விஞ்ஞானம் ஆகியவற்றில் இது சொல்லொணுக் கஷ்டங்களை ஏற்படுத்தியது.

**சீன மக்கள் எக் கஷ்டம் கண்டும் சளைப்புறவில்லை.**

சீன மக்கள் எதிர்நோக்கிய கஷ்டங்களின் பாரதூரமான தன்மை பற்றிச் சந்தேகமேயில்லை. ஆனல் இயற்கை இடையூறுகளாலோ, ஏகாதி

## கமத்தொழில் கைத்தொழில் உற்பத்தி பன்மடங்கு வளர்ச்சி!

பத்தியவாதிகளாலோ தேசிய பிற்போக்கு வாதிகளாலோ அன்றி நவீன திரிபுரிவாதிகளாலோ ஏற்படுத்தப்பட்ட எக்கஷ்டமும் அவர்களைச் சளைப்புறச் செய்யவில்லை. மாருக இக்கஷ்டங்கள் அவர்களுடைய சோஷலிச தேசாபிமான உணர்வை கூட்டி மேலும் கூடுதலான முயற்சிகள் எடுப்பதற்கு உற்சாக மளித்தன. சீன மக்கள் அரசாங்கத்தினதும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும், தோழர் மா சே துங்கினதும் தலைமையில் சீன மக்கள் மக்கள் கம்யூன்களை விருத்தி செய்வதிலும் அபராது உழைத்தனர்.



ஷாங்காய் உருக்கு ஆலையில் இரவு வேலை செய்யும் காட்சி

இரண்டாண்டுக் காலத்தில் முக்கிய பொருளாதாரக் கஷ்டங்களைப் பொதுவாக முறியடித்தனர். 1961ம் ஆண்டுக்குப் பின் பொருதார நிலமை வருடா வருடம் விருத்தியடைந்துள்ளது. இந்த வருடம் எல்லா வகையிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எவரும் எதிர்பார்க்காத முறையில் நிலைமை மாறுகின்றது.

தோழர் மா சே துங் கூறினர்: ''புதிய விஷயங்கள் வளரும் பொழுது கஷ்டங்களும் ஏற்றமும் தாழ்வும் ஏற்படுவது வழக்கம். சோஷலிசம் கட்டி எழுப்புவது சிக்கலற்ற வேலை என்ருே இலேசாக வெற்றியடைய முடியும் என்ருே நினைப்பதும், கஷ்டங்களும் தோல்விகளும் ஏற்படுவதோ என்பதும், பிரமாண்ட முயற்சிகள் தேவையில்லை என்று கூறுவதும் வெறும் கனவு. பிற்போக்கு சக்திகளுக்கும் எங்களுக்கும் கஷ்டங்கள் உள்ளன. ஆனல் பிற்போக்கு சக்திகளின் கஷ்டங்களை வெல்ல முடியாது. ஏனென்ருல் அவை இறந்துபோகும் சக்திகள். அவைக்கு எதிர்காலம் கிடையாது. எங்கள் கஷ்டங்களை வெல்ல முடியும். நாம் புதிய வளரும் சக்திகள். எங்களுக்கு ஒளிபொருந்திய எதிர்காலம் உளளது'' என மேலும் அவர் கூறினர். ''மாக்சிச லெனினிச விஞ்ஞானத்தைச் சரியாக உணர்ந்து, மக்களில் நம்பிக்கை வைத்து, மக்களுடன் நெருங்கி நின்று அவர்களை முன்னேற்றப் பாதையில் எடுத்துச்சென்ருல் நாம் எந்தக் கஷ்டத்தையையும், தடையையும் சமாளிக்கவும், வெல் வும் முடியும். எங்கள் பலம் தோற்கடிக்க முடியாததாகத் திகழும்'' என்று மா சே துங் மேலும் நப்பிக்கை ஊட்டினர்.

தோழர் மா சே துங்கின் இந்தக் கணிப்புச் சரியான தென்பதை உண்மை விபரங்கள் நிரூபித்துள்ளன.

**பல துறைகளிலும் சிறப்பான வளர்ச்சி**

பொருளாதார நிலைமையில் பல துறைகளிலும் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பின் வருவனவற்றைக் கொண்டு இதைக்காண முடியும்.

கடந்த இரண்டு வருடங்களாகத் தானிய உற்பத்தி படிப்படியாகப் பெருகியதன் அடிப்படையில், கமத்தொழில் உற்பத்தியை மேலும் பல வகையிலும் அதிகரிப்பதற்கான முயற்சிகளை எடுக்கும் புதிய நிலைமை இவ்வருடம் உருவாகியுள்ளது.

**கமத்தொழில் அபிவிருத்தி**

வசந்தகாலப் பயிர்களாகிய நெல், பருத்தி, கரும்பு முதலிய பயிர்களைச் செய்யும் பகுதிகள் இவ்வருடத்தில் முந்திய வருடத்திலும் பார்க்க கூடியுள்ளன. உழவின் தரம் நல்லதாக இருக்கின்றது. பயிர்கள் சரியாகக் கண்காணிக்கப்படுகின்றன. பல பிரதேசங்களிலும் அவை நன்கு வளர்கின்றன.

கோடைகால அறுவடை பல பகுதிகளிலும் கடந்த வருடத்தைவிடச் சிறந்ததாக இருக்கின்றது. கூடாத கால நிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட சில மக்கள் கம்யூன்களைத்தவிர மறு கோதுமை விளையும் இடங்களில் அறுவடை முந்திய வருடத்தைவிடக் கூடியுள்ளது. பல பகுதிகளில் கோதுமை அறுவடை 10–20 விகிதம் கூடியுள்ளது. முன்னர் சீனத்தின் முக்கிய நெல் உற்பத்தி செய்யும் இடங்களாகத் திகழ்ந்த சீனத்தின் கிழக்கு, தெற்கு மாகாணங்கள் மோசமான வரட்சியினல் பாதிக்கப்பட்ட பொழுதும், சில மாகாணங்களில் முந்திய வருடங்களுடன் ஒப்பிடும் பொழுது குறைந்த உற்பத்தி ஏற்பட்ட பொழுதும் பல மாகாணங்களில் அறுவடை, முந்திய வருடத்தை விட கூடுதலாக உள்ளது. ஹூனன், ஹூப்பே, கியாங்சி மாகாணங்களில் பெரும் அறுவடை கிடைத்துள்ளது.

கோடைகாலத்தில் ஏற்பட்ட நல்ல அறுவடை விவசாயிகளுக்குப் பெரிதும் ஊக்கமளித்துள்ளது. நாடு பூராவுமுள்ள கம்யூன்களின் உற்பத்திக் கோஷ்டிகள் வசந்த காலத்தில் விதைக்கப்பட்ட பயிர்களைச் சரியாகக் கண்காணிக்கின்றனர். வரட்சி, வெள்ளம் ஆகியவற்றை எதிர்த்து உறுதியாகப் போரிடுகின்றனர். வசந்தகால அறுவடையிலும் பார்க்க இலையுதிர் கால அறுவடை கூடிய விகிதம் உயருமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர். சென்ற வருடத்திலும் குறைந்த அறுவடைபெற்ற உற்பத்திக்கோஷ்டிகள் கோடைகால அறுவடையில் அக்குறைவை நிறைவேற்றலாம் என எதிர்பார்க்கின்றனர்.

மிருக வளர்ப்பும் இவ்வருட ஆரம்பத்திலிருந்து நன்குசெயல்படுகின்றது. மந்தைகளின் தொகை கூடியுள்ளது. பன்றிகளினதும், கோழிகளதும் தொகை மிகவும் வேகமாக முன்னேறியுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது மரக்கறி, பழ உற்பத்தியும் கூடியுள்ளது;

(10-ம் பக்கம் பார்க்க)

# சினிமாத் தொழிலாளர்கள் மாநாடு!

## பொதுச்செயலாளர் அறிக்கையின் முக்கிய பகுதிகள்

### இலங்கை சினிமா ஹால் பிலிம் ஸ்டுடியோ ஊழியர் சங்கத்தின்

**புதுவருட உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| தலைவர்: | எம். ஜி. மெண்டிஸ் |
| உப-தலைவர்கள்: | நா. சண்முகதாசன் |
| | எச். ஜயவர்த்தன |
| | எச். ஏ. ராஜசிங்க |
| பொதுச்செயலாளர்: | எம். எம். செனிவிரத்தின |
| அமைப்புக்காரியதரிசி: | டபிள்யூ. பீ. ஜயசுந்தர |
| உதவி காரியதரிசிகள்: | கே ஜே. நாணயக்கார |
| | ஏ. சி. எம், சயாட் |
| | விஜேதுங்க பண்டா |
| தனாதிகாரி: | கே. குலவீரசிங்கம் |

பொதுச் சபை அங்கத்தவர்கள் :-

| | |
|---|---|
| R. ராஜதுரை | லியோ போல் டி சில்வா |
| வீ. பூபாலசுந்தரம் | வை. எம். பியரத்ன |
| சி. டி. குணவர்த்தன | பீ. டி. ஆரியதாச |
| எம்: ஜோசப் | எம்.சி.எம். மொஹிதீன் |
| வீ. மோத்தா | கே. வில்பட் |
| எம். பி. சனூன் | என். ஏ. எஸ். ஹமீது |
| இசத். அசீஸ் | கே. ஏ. வில்லியம் |
| ஏ. கே. தர்மதாச | கே. எம். ஜயவர்த்தன |

சினிமாத் தொழிலாளர்கட்கு தனிப்பட்ட தொழிற்சங்கம் இல்லாத காரணத்தினால், சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள இலங்கை பொதுத் தொழிலாளர் சங்கத்தில் அணி திரண்டோம். சில வருடங்கள் கழிந்தபின், பிறிம்பான ஓர் தொழிற்சங்கமாக, இலங்கை சினிமா ஹால், பிலிம் ஸ்டுடியோ சங்கத்தை ஸ்தாபித்து அதில் அணி திரண்டோம். முக்கியமாக இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் எமக்களித்த சரியான தலைமை காரணமாகவே இம்முயற்சி சாத்தியமாயிற்று.

1958ம் ஆண்டு சிலோன் எண்டர்டெயின்மென்ற் லிமிடட் ஸ்தாபனத்தின் தொழிலாளர்களும், லிபர்டி சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தின் தொழிலாளர்களும் எமது சங்கத்தில் சேர்ந்து கொண்டனர். 1960ம் ஆண்டு நியூ இம்பீரியல் தியேட்டர்ஸ் தொழிலாளர்கள் எமது சங்கத்தில் சேர்ந்தனர்.

1961ம் ஆண்டு சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டெட் தொழிலாளர்கள் சிலர் எமது சங்கத்தில் சேர்ந்தபோதிலும், பல காரணங்களுக்காக எம்மை விட்டு விலகினர். ஆனால் 1962ம் ஆண்டு மறுபடியும் எங்கள் சங்கத்தில் சேர்ந்து கொண்டனர். இன்று சிலோன் தியேட்டர்ஸ் கிளை மிகவும் பலம் பொருந்திய கிளைகளில் ஒன்று.

1962ம் ஆண்டு முற்பகுதியில் நியூ ஒலிம்பியா, சவோய் சினிமா தொழிலாளர்கள் எமது சங்கத்தில் அணி திரண்டனர். 1962ம் ஆண்டு பிற்பகுதியில், இரு பெரும் சவுண்ட் ஸ்டுடியோக்களான சிலோன்ஸ்டுடியோஸ், கந்தானை சவுண்ட் ஸ்டுடியோஸ் ஆகிய ஸ்தாபனங்களின் தொழிலாளர்கள் எமது சங்கத்தில் அணி திரண்டனர்.

மேற்குறிப்பிட்ட தொழிலாளர்கள் எமது சங்கத்தில் அணி திரள்வதற்கு முக்கிய காரணமாக இருந்தது, எமது சங்கம் ஆரம்பிக்குமுன் இலங்கை பொதுத் தொழிலாளர் சங்கத்தில் இருந்த எமது தோழர்கள் சினிமாத் தொழிலாளர்களுக்காக நடத்தியபோராட்டங்களும், வென்றெடுத்த உரிமைகளுமே.

#### சேவை விஷயங்கள்

எமது சங்கம் ஆரம்பிக்குமுன், சினிமாத் தொழிலாளர்கள் பலர், சிலோன் மேர்க்கன்டைல் யூனியனில் அணிதிரண்டிருந்தனர். சினிமாத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இச்சங்கம் ஏதேனும் செய்யவில்லை. மேர்க்கன்டைல் யூனியன் சினிமாத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கான பணியில் தவறியதாலும், இலங்கைப் பொதுத்தொழிலாளர் சங்கத்தின் சரியான பல நடவடிக்கைகளாலும், சினிமாத் தொழிலாளர்கள் முன்னேற்ற மடைந்தமையினாலும் எமது சங்கத்தில் பல நூற்றுக்கணக்கான சினிமாத் தொழிலாளர்கள் அணிதிரண்டனர். எமது சங்கம் ஸ்தாபிக்கப்படுமுன், சினிமாத் தொழிலாளர்கள் மிகவும் சங்கடமான சூழ்நிலையில் வேலை செய்தனர். சரியான ஓர் சம்பள நிர்ணயமோ, விடுமுறைகளோ இருக்கவில்லை. இத் தொழிலாளர் ஒன்று திரளும்போது, முதலாளிகள் தொழிற் சங்கங்களுக்கெதிரான பலத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தொழிலாளர் மத்தியில் என்றுமில்லாத அளவு ஐக்கியமும், ஸ்தாபன ரீதியாகத் திரளவேண்டும் என்ற உணர்வும் பரவியது. முதலாளிகள் இம்முயற்சியைத் தடுப்பதற்காக, இடமாற்றம், வேலை நிறுத்தம், சங்கக்கூடங்கள் தடை செய்தல் ஆகிய முயற்சிகளில் ஈடுபட்டனர். இம்முயற்சிகளுக்கு எதிராகப் போராடியது மட்டுமல்லாது, தொழிற்சங்கத்தில் இயங்கும் உரிமை ரூ. 17/50 விசேஷ பஞ்சப்படி 14 நாள் வருடாந்த லீவு, 7 நாள் மெடிகல் லீவு, வருடாந்த சம்பள உயர்வு, வருடாந்த போனஸ், கடனுதவி, பதவி உயர்வு, சடுதி மாற்றங்களை நிறுத்தல் போன்ற கோரிக்கைகளை, போராட்டங்கள் மூலம் எமது சங்கம் வென்றெடுத்துள்ளது என்பதை கூறுவதில் நாம் பெருமைப்படுகிறோம்.

சினிமாஸ் லிமிடெட் ஸ்தாபனத்தின் தவறான சம்பளக் கொள்கையை, தொழிற்கோடுகள் மூலம் எமது சங்கம் திருத்தியுள்ளது. சிலோன் தியேட்டர்ஸ் தொழிலாளர்களின் (ஓவர் டைம்) மேலதிகச் சம்பளம் பூரண தொகையில் கொடுக்கப்படவேண்டும் என்ற எமது சங்கத்தின் கோரிக்கையில் நாம் வெற்றி கண்டுள்ளோம். முக்கியமான பொருளாதாரக் கோரிக்கையை வென்றெடுக்கத் தீவிர நடவடிக்கையில் ஈடுபடுவதென சங்கம் தீர்மானித்துள்ளது.

#### எமது தலைமை

தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக இடைவிடாது போராடிவரும் பல மிக்க சம்மேளனமான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் எமது சங்கம் இணைந்துள்ளது. 1958 ஏப்ரல், மே மாதங்களில் தனியார் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்கட்கு அரசாங்க விகித பஞ்சப்படி போராட்டம் நடத்தியது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம். இதன்பலனாக தேயிலை றப்பர் ஏற்றுமதி, அச்சு, பொறியியல் தொழிலாளர்கள் இச்சலுகையை அனுபவிக்கின்றனர். இச்சம்மேளனத்தின் தலைமையினால் 80./· விகிதம் சினிமாத் தொழிலாளர்கள் எமது சங்கத்தில் அணி திரண்டுள்ளனர்.

#### பொதுக் கோரிக்கைகள்

இன்று தொழிலாளி வர்க்கம் ஓர் பாரதூரமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்த நாட்டின் தொழிலாளர்கள் சகலரும் ஒன்றுசேர்ந்து போராடுவதற்குத் தம்மைத் தயார்செய்துகொள்ளல் வேண்டும், நாம் ஒன்றுகத் திரண்டு தொழிற் சங்கங்களின் கூட்டுக்கமிட்டிக்கு எமது பூரண ஆதரவை நல்கி 21 கோரிக்கைகளை வென்றெடுக்க இன்று நாம் சபதமேற்கவேண்டும்.

# சோவியத் நாடும் எல்லைப் பிரச்சினையும்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை ஆரம்பிக்கவிருக்கும் ஆயுதம்தாங்கிய மோதலை அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உதவியோடு நடத்த உத்தேசித்துள்ளார்கள். சீனாவின் மீது யுத்தம் தொடர அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் இந்தியாவுக்கும் அண்மையில் ஏற்பட்டுள்ளதொடர்பு யாவரும் அறிந்ததே.

#### சோவியத் நாட்டின் ஆயுத உதவி

ஆனால், சோவியத் நாடு இந்தியாவுக்கு ஆயுதங்களைக் கொடுக்க முன்வந்துள்ளதானது உலகத்திலுள்ள சகல முற்போக்கு சக்திகளையும் ஆச்சரியத்திலாழ்த்தியுள்ளது ஏகாதிபத்தியவாதிகளோடு போட்டிபோட்டுக்கொண்டு இந்தியாவுக்கு ஆயுத உதவி செய்ய முன்வந்துள்ளது மேலும் ஆச்சரியமாயுள்ளது.

ஒரு கம்யூனிஸ நாடு, மற்றொரு நாட்டுக்கு ஆயுத உதவி செய்வது ஒரே ஒரு நிலையில் தான். அந்த நாடு தனதுநாட்டு விடுதலைக்காகவோ, அல்லது தனது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவோ ஏகாதிபத்திய வெறியர்களுக்கு எதிராகப் போராடும் போதுதான் உதவியளிக்க முடியும்.

சோவியத் ஆயுத உதவி பெறும் இந்தியா அந்த நிலையில் உள்ளதா? இல்லை. இந்தியா போராடுவது ஏகாதிபத்தியவெறியர்களுக்கு எதிராக அல்ல. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக இருந்தால் ஏகாதிபத்தியவாதிகள் இவ்வளவு ஆவலோடு உதவுவார்களா? இந்தியா சோஷலிஸ நாட்டுக்கு விரோதமாகவே போராடுகிறது. எனவே, ஏகாதிபத்தியவாதிகள் இத்தனை உற்சாகத்தோடு உதவுகிறார்கள்.

ஆனால்' சமாதான வாழ்வுக்காக, உலக சமாதானத்துக்காக, யுத்தத்தை ஒழிப்பதற்காக, ஆயுத பரிகரணத்திற்காக எவ்வளவோ அக்கறை கொண்டுள்ள சோவியத் நாடு சரித்திரத்தில் எந்தக் காலகட்டத்திலும் நிர்ணயிக்கப்படாத எல்லைப்பிரச்சினையில் அண்டை நாடுகளான இரு நாடுகளுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளபோது, இந்த முறையில் தலையிடுவது சரியா? ஒரு நாடு பேச்சுவார்த்தைக்கு விண்ணப்பிக்கும்போது, மற்ற நாடு யுத்தத்திற்குத் தயாராவதற்கு யுத்த ஆயுதங்கள் கொடுப்பது முறையா? சமாதானமான பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினைக்கு முடிவு கண்டு இரு நாடுகளும் சமாதான - சகவாழ்வு வாழ்வதற்கான முயற்சிகள் எடுப்பதை விடுத்து, சோவியத் நாடு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவுவது இந்தியாவை யுத்தத்திற்குத் தயாராக்கவில்லையா?

இந்தக்காரணங்கள் ஒருபுறமிருக்க, சோஷலிஸ்ட் முகாமின் தலைமையான சோவியத் நாடு சோஷலிஸ சீனத்திற்கு எதிராக, முதலாளித்துவ இந்தியாவின் பக்கம் சார்வதின் அர்த்தமென்ன? சோஷலிஸ்ட் சீனாவுக்கு அணு ஆயுத ரகசியங்களைக் கொடுக்க மறுக்கையில். முதலாளித்துவ இந்தியாவுக்கு மிகவும் நவீன யுத்த ஆயுதங்கள் வழங்குவதின் நோக்கமென்ன? இது பாட்டாளிவர்க்கத்தின் சர்வதேசியத்துவத்தின் ஒரு அங்கலட்சணமா?

ஒரு கேள்வி எழுப்பவிரும்புகிறேன். தற்போது சோவியத் நாடு இந்தியாவுக்குச் செய்யும் யுத்த ஆயுத உதவி பெற்றதும் இந்தியா தன் அண்டைநாடுகளான பாக்கிஸ்தான், பர்மா முதலிய நாடுகளுக்கு விரோதமாக உபயோகிக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? நம் தாய்த்திருநாடு இலங்கைக்கு எதிராக உபயோகிக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம்? என்றாவது ஒரு நாள் சோவியத் நாட்டுக்கே விரோதமாகப் பாவிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன சான்றுள்ளது? இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு - இந்திய பாட்டாளிவர்க்கத்திற்கு எதிராக உபயோகிக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதமுள்ளது?

இறுதியாக ஒரு கேள்வி.

இன்று சீனாவை 'ஆக்கிரமிப்பாளன்' என்று குற்றம் சாட்டுபவர்கள் இருவகைப்பட்டவர்களவர். ஒரு பகுதியினர்: ஏகாதிபத்தியவாதிகளும் முழுக்க முழுக்க படுபிற்போக்குவாதிகளுமாவர். மற்றொரு பகுதி, அங்குமிங்குமுள்ள திரிபுவாதிகளே. இந்தப் பகுதியினரும் புரட்சிகர போராட்டங்களில் விருப்பமில்லாதவர்களே. தொழிலாள வர்க்கப் போராட்டங்களையும், தேசிய விடுதலைப் போராட்டங்களையும் விரும்பாதவர்களே.

சீனா ஒரு சோஷலிஸ நாடு. சோஷலிஸ சீனா ஒருபோதும் இந்தியாவின் ஒரு அங்குல நிலத்தையேனும் தனதாக்கிக் கொள்ள விரும்பாது. அதேவேளை இந்திய பிற்போக்காளர்கள் சீனாவின் ஒரு அங்குல நிலத்தைத்தானும் அபகரிப்பதை சகித்துக்கொண்டிருக்காது. எங்களுக்கு மற்றவர்களின் ஒரு அங்குல நிலமாவது வேண்டியதில்லை. அதேபோல், எங்காவது ஒரு அங்குல நிலத்தைத்தானும் மற்றவர்கள் கைப்பற்ற அனுமதிக்கப்போவதும் இல்லையென்பது சீனாவின் உறுதிமிக்க கோட்பாடு.

தொழிலாளர் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் போது 'அதிதீவிரப் போக்கு' உசிதமற்றது, 'பிற்போக்காளர்களுக்கு உதவும்' என தத்துவ விளக்கம் தருபவர்கள் ஒரு சோஷலிஸ்ட் நாடு தன் எல்லைப் பிரதேசத்தைப் பாதுகாக்கப் போராடும் போது, "ஆக்கிரமிப்பாளன்"களாக மாறியுள்ளார்கள் என்றும் 'ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவி' செய்பவர்கள் என்றும் விவரிப்பது புதுமையானதல்ல.

சீன இந்திய எல்லைப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவும், ஆசியாவின் இரு பெரும் நாடுகளான சீன இந்திய ஐக்கியத்தை நிரந்தர நட்புறவு மூலம் வளர்க்கவும், சீனா முன் வைத்துள்ள தவறற்ற கொள்கையை ஆதரிப்பது நம்நாட்டுப்பாட்டாளி வர்க்கத்தின் மேன்மைமிகு கடமையாகும்.

-அரசியல் நிருபர்.

# சீனப் புரட்சியின் சரித்திரமு

நாடு பூராவும் வெற்றி அடைந்து 1949ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ம் திகதி மக்கள் சீனக் குடியரசின் ஸ்தாபிதத்தில் முடிவடைந்த தற்காலத்தைய சீனப்புரட்சி, மகத்தான ஒக்டோபர் புரட்சியின் தொடர்ச்சியாகும். சீனப் புரட்சியின் மகத்தான தலைவரான தோழர் மா சே-துங் பல தடவைகளிலும் சுட்டிக்காட்டியவாறு, சீனப் புரட்சியில் மாக்சிச லெனினிசத்தின் பொதுவான உண்மைகளை, திட்டவட்டமான நடைமுறையுடன் இணைத்ததினுலேயே அது வெற்றி பெற முடிந்தது.

தற்காலத்தைய சீனப்புரட்சியின் சரித்திரமும், அப்புரட்சியை வெற்றியடையச் செய்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியினதும், அபிவிருத்தியினதும் சரித்திரமாகும். இச் சரித்திரத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. கட்சி ஆரம்பமும், முதல் புரட்சிகர உள்நாட்டு யுத்தமும். (1921–1937)

2. இரண்டாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தம். (1927–1937)

3. யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தம். (1937–1945)

4. மூன்ருவது புரட்சிகர உள்நாட்டு யுத்தமும், மக்கள் சீனக் குடியரசு ஸ்தாபிதமும். (1945—)

கப் புரட்சியின் ஒரு பகுதியாகவும் உருவெடுத்தது. அந்த ஆண்டுக்கு முன்னர் ஏற்பட்ட தயிப்பிங் புரட்சி, 1911ம் ஆண்டுப் புரட்சி போன்ற எல்லாப் புரட்சிகர இயக்கங்களும் முதலாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெற்றன, ஆகவே தோல்வியிலே முடிந்தன.

ருஷ்யாவில் ஒக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்தது, சீனுவின் புரட்சிகர படித்த கூட்டத்தினரிடையே மாக்கிச லெனினிசக் கருத்துக்கள் பரவுவதற்கு உதவியது. முதல் தடவையாகத் தொழிலாள வர்க்கம் தனது தலைமையான பாத்திரத்தை முன் வைத்த மே 4ம் திகதி இயக்கத்துக்குப்பின்னர் மாக்சிச லெனினிசக் கருத்துக்களும் சீனத்து தொழிலாள வர்க்கமும் ஒன்றிணைந்துகொண்டன. ஆகவே 1921ம் ஆண்டு ஜுலை 1ம் திகதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது தற்செயலானதல்ல. சீனுவின் கைத்தொழில், தொழிலாள வர்க்க இயக்கக் கேந்திரஸ்தானமாகிய ஷாங்ஹாயில் கூடிய முதல் கட்சி மகாநாட்டில் 50 கம்யூனிஸ்டுகளின் சார்பில் 12 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அவர்களில் ஒருவராக ஹுனுன் பிரதேசத்தின் கட்சி அமைப்பின் பிரதிநிதியாகத் தோழர் மா சே–துங் கலந்து கொண்டார். அவர் மே 4ம் திகதி இயக்கத்துக்கு முன்னர் ஹுனுனில் புரட்சிகர அமைப்பொன்றை உருவாக்கி

அது தொட்டுக்காட்டியது:

"உள்நாட்டு கலகத்தை நீக்குதல், யுத்தப்பிரபுக்களைத் தூக்கி எறிதல், உள் நாட்டு சமாதானத்தை ஸ்தாபித்தல், சர்வதேச ஏகாதிபத்தியத்தின் அடிமைத் தளைகளிலிருந்து அவர்களை விடுவித்து சீன நாட்டின் பூரண சுதந்திரத்தை அடைதல், சீனம் முழுவதையும் உண்மையான மக்கள் ஜனநாயகக் குடியரசொன்றில் ஒற்றுமைப்படுத்துதல்"

அதன் பின்னர், சோஷலிசத்தையும் கம்யூனிஸத்தையும் காண்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என அறிக்கைகூறியது.

ஜனநாயகப் புரட்சிக்குத் தொழிலாள வர்க்கமே தலைமைதாங்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டாததும், தொழிலாளர்களும் விவசாயிகளும் அரசியல் அதிகாரம் பெறும் கோரிக்கையை முன் வைக்காததும், நிலத்திற்கான கோரிக்கையை விவசாயிகள் முன் வைக்காததுமே, இவ்வறிக்கையின் குறை பாடுகள். இவை பின்னர் பாரதூரமான தவறுகளாக வளர்ந்தன.

### இரு முக்கிய பாடங்கள்

கட்சி ஆரம்பமாகியதற்குப் பிந்திய ஆண்டுகளில் தொழிலாளவர்க்கம் பெருமளவிற்கு வளர்ந்தது. நாடு முழுவதிலும் தொழிலாளர் போராட்டங்கள் பிரமாண்டமான அளவில்

துக்கும் மற்றும் ஜனநாயக சக்திகளுக்குமிடையே கூட்டணி ஏற்படுத்தும் நோக்கத்துடன் டாக்டர் சன் யாட் சென் தலைமையிலிருந்த குமின்ராங்கிடன் ஐக்கியப்படுவதற்குக் கட்சி உறுதியான நடவடிக்கைகள் எடுத்தது. 1923ம் ஆண்டு ஜுன் மாதத்தல் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்ருவது மகாநாடு, ஏகாதிபந்தியத்தையும் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களையும் எதிர்த்து டாக்டர் சன் யாட் சன் எடுத்த ஜனநாயக நிலையினைச் சரியாகக் கணிப்பிட்டது. குமின்ராஙை, தொழிலாளர்சளதும், விவ

ஏஜென்டுகளான வலதுசாரி சக்திகளையும் எதிர்த்த புரட்சி எழுச்சியின் ஆரம்பமாக இது அமைந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனையின் பேரில், அதன் தலைமையுடனும் ஆதரவுடனும் புரட்சிகர இராணுவப் பாடசாலை (அகடமி)யுடன் கூடிய புரட்சிகர அரசாங்கம் குவான் ருன் மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்புகழ் பெற்ற புரட்சிகர இராணுவப் பாடசாலையில் சியாங் கே–ஷேக் தலைவராகவும், சூ என் லாய் காரியதரிசியாகவும் கட



மக்கள் சீனத்தின் மதிப்பரிய தலைவர் உலக தொழி
ஏகாதிபத்தியத்தின் உறுதியான எதிரி உலக சோஷலிசம்
மாக்சிச மாமேதை மா

## கட்சி ஆரம்பமும் முதல் புரட்சிகர உள் நாட்டு யுத்தமும்

சீனத் தொழிலாள வர்க்கம் மாக்சிச லெனினிச விஞ்ஞானத்துடன் இணைந்ததன் விளைவாகவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது. முதலாவது உலக யுத்தத்தின் பின், வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலால் சீனுவில் கைத்தொழில்களால் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டது. இது இயற்கையாகவே சீனத்தொழிலாள வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது. சீனத் தொழிலாள வர்க்கம் விரைவில் பெருமளவு வளர்ந்து, வேர்சயில்ஸ் ஏகாதிபத்திய ஒப்பந்தத்தையும், ஏகாதிபத்தியத்தையும், நிலப் பிரபுத்துவத்தையும் பொதுவாக எதிர்த்த 1919ம் ஆண்டு மே 4ம் திகதி இயக்கத்தில் தனது தலைமையான நிலைமையை நிறுவிக்கொண்டது.

சீனப் புரட்சி பழைய வகையிலமைந்த ஜனநாயகப் புரட்சி என்ற நிலையிலிருந்து புதிய முறைக்கு மாறுததற்கான திருப்பமாக 1919ம் ஆண்டு கணிக்கப்படுகின்றது. ஏனென்ருல் அந்த ஆண்டிலிருந்து சீனுவின் ஜனநாயகப்புரட்சி சீனத் தொழிலாள வர்க்கம் தலைமை தாங்கும் புரட்சியாகவும், உல

யிருந்தார். இம் மகாநாடு சீனக கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தது; அதன் முதல் சட்டதிட்டங்களை வகுத்தது; அதன் மத்திய உறுப்புகளைத் தெரிவு செய்தது. பூரணமாக புதியதோர் அரசியல் கட்சி கம்யூனிசத்தை நோக்கமாகவும், மாக்சிச லெனினிசத்தைச் செயல் முறை வழிகாட்டியாகவும் கொண்ட தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியக் கட்சி சீனத்தில் உதயமாகியது. கட்சியின் மத்திய உறுப்புக்களுக்குத் தலைமை தாங்குவதற்குச் சென்-ரு-சியுவை மகாநாடு தேர்ந்தெடுத்தது. மே 4ம் திகதி இயக்கத்திற்கு முன் அவர் மிகவும் பிரசித்திபெற்ற சீர்திருத்த ஜனநாயகவாதி; தலைசிறந்த அறிவாளி. ஆனுல் அவர் சிறந்த மாக்சிஸ்டாகப் பின்னர் பரிணமிக்க முடியவில்லை.

1922ம் ஆண்டு ஜுலை மாதம் ஷர்ஹாவில் இரண்டாவது கட்சி மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாடு கட்சியின் கூடிய, குறைந்த பட்சத் திட்டத்தைக்கொண்டதோர் கட்சி அறிக்கையை உருவாக்கியது. சீன மக்களின் அடிப்படைக் கடமைகள் பின் வருபவை என


வளர்ச்சியடைந்தன. சட்டரீதியான சீனத் தொழிற்சங்க காரியாலயம் (செக்ரெட்டேரியட்) ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. முதலாவது அகில சீனத் தொழிற் சங்க மகாநாடு கன்ரனில் 1922 மே மாதத்தில் நடைபெற்றது. வெற்றியும் தோல்வியும் கண்ட இத்தொழிலாள வர்க்கப் போராட்டங்கள், இரு முக்கிய பாடங்களைக் கட்சிக்கும், தொழிலாள வர்க்கத்திற்கும் அளித்தன. முதலாவது, நாட்டின் ஜனத்தொகையில் சமவிகிதத்தினரான விவசாயிகளுடன் தொழிலாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ எதிர்ப்புக்கூட்டணியில் சேருதல் வேண்டும். இக் கூட்டணியில் இலட்சக்கணக்கான நகரப் புறக் குட்டி முதலாளி வர்க்கத்தினரையும், ஏகாதிபத்தியத்தையும் நிலப் பிரபுத்துவத்தையும் எதிர்த்துப் போராட விரும்பும் முதலாளித்துவ ஜனநாயக சக்திகளையும் ஒன்று சேர்த்தல் வேண்டும். இரண்டாவதாக, ஆயுதந்தாங்கிய புரட்சியினுல் எதிர்க்க வேண்டும்.

இதன் பின் கோமின்ராங் மூலம் தொழிலாள வர்க்கத்

சாயிகளதும், குட்டி முதலாளி வர்க்கத்தினதும் புரட்சிகர கூட்டணியாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் கணிப்பிட்டுக்கொண்டது. ஐக்கிய முன்னணிக்கான கட்சியின் கொள்கை சீனப்புரட்சியின் வேகத்தைக் கூட்டியது. கம்யூனிஸ்டுகளும் கலந்து, கூட்டாகத்தலைமைதாங்கி கொமின்ராங்கின் முதல் தேசிய மகாநாடு 1924ம் ஆண்டு ஜனவரி மாதம் கன்ரனில் நடைபெற்றது. ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும், கோமின்ராங்கில் உள்ள அதன்

மையாற்றிய வொம்பா கல்லூரியாகும். கோமின்ராஙும், கம்யூனிஸ்டுகளும் சியாங்கே ஷேக்கை தலைவராகத் தெரிந்தெடுத்து, 1925ம் ஆண்டு தொடங்கி 1927ம் ஆண்டுவரை நடாத்திய சிறப்புமிகு வடதிசைப் படையெடுப்புக்கான அடிப்படை இங்ஙனம் அமையப் பெற்றது. வடதிசைப் படையெடுப்புப் பட்டாளம் பெரிய வெற்றிகள் கண்டது. 1927ம் ஆண்டு மார்ச் மாதம் சூ–என்–லாயின் தலைமையில் உள்ள தொழிலாளர்களின் எழுச்சியினுல் ஷாங் ய்ஹ விடுதலையாக்கப்பட்டது.

# ரமும் அதன் பாடங்களும்



வர் உலக தொழிலாளர்களின் ஒப்பரிய தலைவர்
லக சோஷலிசம் காணத் தலைமை தாங்கும் நாயகன்
மேதை மா சே-துங்

தொழிற்சங்கங்களின்முழு உறுப்பினர்கள் தொகை 2,800000 ஆகவும் விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர் தொகை 95 இலட்சமாகவும் வளர்ந்திருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் தொகை 57,900 ஆகக் கூடியது.

## சியாங்கேஷேக் துரோகம்

இக் காலகட்டத்தில் தான் ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதலின் பேரில் சியாங்கேஷேக் புரட்சிக்குத் துரோகம் செய்தார்; கம்யூனிஸ்டுகளின் எதிராளியானர்; ஷாங்ஹாயில் மட்டும் 5,000 பேர் கொலை செய்யப்பட்ட எதிர்ப்புரட்சியை நடாத்தினர். சூ-என்-லாய் கூடக் கைதாகிக் கொலை செய்யப்படவிருந்தார். ஆனால் அவர் தப்பிவிட்டார். அக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடித்த தவருன கொள்கையின் காரணமாக எதிப்ர்புரட்சி வெற்றிபெற முடிந்தது. சென் - ரு - சுவின் தலைமையில் கட்சி, மக்களின் தேவைகளை வெல்வதற்காகப் பரந்த மக்களின் இயக்கத்தை ஆதரிக்கவும் முன்னெடுத்துச் செல்லவும் உறுதியான, திட்டவட்டமான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. மக்களின் சொந்தப்பட்டாளத்தினை கட்டி எழுப்புவதின் அவசியத்தையும் கட்சி சரியாகக் கவனிக்கவில்லை.

இந் நிலைமையில் சென்-ரு-சு சலுகைகளுக்கு மேல் சலுகைகள் அளித்தார். இவை பிற்போக்குவாதிகளின் கரங்களைத் தான் பலப்படுத்தின. ஏகாதிபத்தியவாதிகள் உடனே சியாங்கே ஷேக்குடன் கூட்டுச்சேர்ந்தனர். நிலப்பிரபுத்துவ நிலச்சொந்தக்காரரும், பெரிய (காம்பிருடோர்) முதலாளிகளும் சியாங்கே ஷேக்கைத் தமது அரசியல் பிரதிநிதியாகக் கொண்டனர். சீனப் புரட்சியை உள்ளிருந்து நசுக்குமாறுஇந்த இரண்டு பகுதிகளும் சியாங் கேஷேக்கைதூண்டினர்.

அந்த நேரத்தில் புத்திமதிகளை கேட்டிருத்தால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பின் ஏற்பட்ட தோல்வியைத் தவிர்த்திருக்கலாம் அல்லது குறைத்திருக்கலாம். "சீனப் புரட்சியின் சாத்தியக்கூறுகள்" என்ற புகழ் பெற்ற பேச்சில் தோழர் ஸ்டாலின் 1926-ம் ஆண்டு நவம்பரிலேயே, சீனத் தேசிய முதலாளி வர்க்கத்தின் பலவீனமான தன்மைகளையும், சீனவின் எதிர் புரட்சி சக்திகள் மூலம் சீனப் புரட்சியில் ஏகாதிபத்தியவாதிகள் தலையிடுவதன்பேரபாயம் பற்றியும் ரொம்பவும் சரியாக சுட்டிக்காட்டியுள்ளார். சீனப் புரட்சியில் உண்மையான புரட்சிகர ஆயுதந்தாங்கிய சக்திகளின் அதி முக்கியத்துவத்தையும், கம்யூனிஸ்டுக்கள் யுத்தக் கலையைப்படித்து இராணுவத்துக்குத் தலைமைதாங்குவதன் அதி முக்கியத்துவத்தையும் அவர் சரியாகச் சுட்டிக்காட்டினர்.

சீனப் புரட்சியின் இந்த இக்கட்டான கட்டத்தில் தோழர் மா சே துங் தனது புரட்சிகரத் திறமையைக் காட்டி ர். மாக்சிச லெனிஸிச அடிப்படையில் சீனத்தின் வர்க்கத் தொடர்புகளை முதலில் ஆராய்ந்தும், சீனப் புரட்சியின் வெற்றி தொழிலாள வர்க்கம் விவசாயிவர்க்கத்திற்கு மேலாகத் தலைமை தாங்குமா என்பதையும் பொறுத்தேயிருக்கின்றது என முதலில் சுட்டிக்காட்டியதும் அவரே.

குனன் விவசாயிகளின் உணர்ச்சிமிகு போராட்டங்களை ஆராய்ந்தபின் 1927, ஜனவரியில் "குனன் விவசாய இயக்கம்பற்றி அறிக்கை" என்ற நூலை அவர் எழுதினர். சீனப் புரட்சியில் விவசாயிகளின் பங்கைப் பூரணமாக எடைபோட்டதே இந்நூலின் முக்கிய சிறப்பாகும். இரண்டாவதாக, கிராமப் புறங்களில் விவசாயிகள் அரசாங்கத்தையும், விவசாயிகள் பட்டாளத்தையும் அமைப்பதன் அவசியத்தையும் அவர் காட்டினர். மூன்ருவதாக, இந்நூல் விவசாயிகளின் பல படிகளையும் ஆராய்ந்து சின சனத்தொகையின் பெரும்பான்மையினரான வறுமைப்பட்ட விவசாயிகளே விவசாயிகளுள் மிகவும் புரட்சிகரமானவர்கள் என சுட்டிக்காட்டியது. நான்காவதாக, மக்களைத் துணிவுடன் தட்டி எழுப்பி, ஸ்தாபன ரீதியாகத் திரட்டி அவர்களை நம்பும் புரட்சிக்ர எண்ணத்தை அது முன் வைத்தது. கட்சியின் தலைமை இச்சரியான கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.ஆகவே புரட்சியின் தோல்வி தவிர்க்க முடியாதது.

முதலாவது புரட்சிகர உள் நாட்டு யுத்தம் சியாங்கே ஷேக்கின் துரோகத்துடன் தோல்வியில் முடிந்தாலும் அது கட்சிக்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் பல முக்கிய பாடங்களைக் கற்றுக்கொடுத்தது. முதலாவதாக சீனத்தின் ஜனநாயகப் புரட்சி தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலுள்ள ஐக்கிய முன்னணியினுல் நடாத்தப்படல் வேண்டும், என அது போதித்தது. இரண்டாவதாக தொழிலாள வர்க்கத்தலைபையின் முக்கிய பிரச்சினை விவசாய வர்க்கத்தின் பிரச்சினையுடன் இணைந்ததாகும். விவசாயிகளை புரட்சிகர நேச வர்க்கமாக வெல்லும் பொழுதே புரட்சி வெற்றிகரமாகும். மூன்ருவதாக சீனப் புரட்சியின் முக்கிய வழி நீர்ப்புரட்சியை எதிர்த்த ஆயுதந்தாங்கிய புரட்சியாக மட்டுமே திகழ முடியும், புரட்சிகர பட்டாளமின்றி எதையுமே சமாளிக்க முடியாது.

★

## இரண்டாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தம்

புரட்சிக்குத் தோல்வி ஏற்படுவதைத் தடுக்கக் கட்சி எடுத்த முயற்சிகள் அனைத்தும் தவறின. சியாங்கே ஷேக் தனது பரிபூரண பிற்போக்கு ஆட்சியை ஸ்தாபித்தார், பல கட்சிகளின் தலைவர்களுக்கும் புரட்சிகர தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், புத்தஜீவிகளுக்கும் எதிராக அவர் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தார். இத்தகைய நிலைமையில் போராட்டத்தைத் தொடர்வதின் அவசியத்தை கட்சி மக்களுக்கு விளக்கியது. கட்சி அமைப்பின் சில பகுதிகள் விவசாய சீர்திருத்தத்திலும் கொரில்லாப் போராட்டங்களிலும் விவசாயிகளுக்குத் தலைமை தாங்குவதற்காக, எதிர்ப் புரட்சி சக்திகள் பலவீனமாகவும் புரட்கி பலமாகவும் அமைந்துள்ள பகுதிகளுக்குச் சென்றனர். கட்சி அமைப்பின் மறுபகுதிகள், கட்சியின் அங்கத்தவர்களையும், அமைப்புகளையும் பாதுகாப்பதற்காகவும், மக்களின் புரட்சிகரசக்திகளை கட்டி எழுப்புவதற்காகவும் நகரங்களில் தங்கியிருந்து இரகசியமாக மறைந்திருந்து வேலை செய்தனர். பின்னர் இவ்விரு அணிகளும் தமது போராட்டங்களை இணைத்து எதிரிகளின் உள் முரண்பாடுகளையும் பலவீனங்களையும் பாவித்து புரட்சிகர இயக்கத்தின் புத்துயிர்ப்புக்காகப் போரிட முடிந்தது.


1927 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கடசியின் அவசர மகாநாடு சென்-ரு-சுவைத் தலைமையிலிருந்து நீக்கி, தவறுகளைத் திருத்திக்கொண்டது. புரட்சியைக் காப்பாற்றுவதற்காகக் கோடை அறுவடைக் காலத்தில் விவசாயிகள் கிளர்ந்தெழுதல் வேண்டுமென இம் மாநாடு விவசாயிகளுக்கோர் அழைப்பு விடுத்தது. தோழர் மா-சே-துங் மேற்கு கியாங்சே, கிழக்கு கூனன் மாகாணங்களுக்கு சென்றார். அங்கே வட திசைப் படையெடுப்புப்பட்டாளத்தின் ஒரு பகுதி விவசாயத் தொழிலாளர் துருப்புகளுக்கு அவர் தலைமை தாங்கினர், இவ் வழியில் எதிரியை எதிர்த்துப் போராடுவதற்காக தொழிலாளர்களினதும் விவசாயிகளதும் புரட்சிகரப் படடாளத்தின் அணி ஒன்று உருவாக்கப்பட்டது. மேலும், 1927க்கும் 1928க்கும் இடையில் கட்சி கிழக்குப் குப்பேயிலும், கிழக்கு, தெற்கு கூனனிலும், கன்ரன் நகரத்திலும், கைனன் தீவில் உள்ள கிழக்கு குவான்ருங்கிலும் மற்றும் இடங்களிலும் எழுச்சிகளை ஏற்படுத்தியது. தோழர் மா சே துங்கும், சூ-தேயும் தலைமைதாங்கிய புரட்சிகர பட்டாளங்கள் சிங்காங் பிரதேசத்தில் ஒன்றுசேர்ந்தன. சிங்காங்கில் குனன்-சியாங்சி எல்லைப் பிரதேச தொழிலாளர்களதும் விவசாயிகளதும் அரசாங்கம் அமைக்கப்பட்டது. இக்காலம் தொடக்கம் பல புரட்சி ஸ்தளங்கள் ஒன்றன்பின் ஒன்ருக அமைக்கப்பட்டன. மத்திய புரட்சித்தளமும் அமைக்கப்பட்டது.

(அடுத்த இதழில் தொடரும்)

# வடபகுதி மோட்டார் தொழிலாளர் கோரிக்கைகள்

இம் மாதம் 23ம் திகதி இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணப்பிரதேசசபையின் கூட்டம் நடைபெற்றது, யாழ்ப்பாணப் பிரதேசத்தில், இலங்கை போக்குவரத்துச் சபையின் உயர் உத்தியோகத்தர்கட்கும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே இத்தகைய கூட்டம் நடந்தது இதுவே முதல்தடவை. இக்கூட்டம் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் ஆலோசனையின்பேரில் நடைபெற்றது.

மோட்டார் தொழிலாளர்களின் பல பிரச்சினைகள் இக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டன. இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் அமைப்புக் காரியதரிசியான தம்மிக குணதாச அவர்கள் பிரதான தொழிற்சங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வடபகுதிப் பிரதிநிதியான திரு



குணரத்தினமும். கிழக்கு டிப்போவைச் சேர்ந்த கதிரவேலும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பஸ்களுக்கு நிரந்தரமாக ஊழியர்களை நியமித்தல், ஓவர்டைம் சரிசமமாகப் பங்கிடுதல் முதலிய பிரச்சினைகள் பேசப்பட்டன. கிழக்கு டிப்போவில் நடைபெறும் தவறான நிர்வாகத்தையும், பாராபட்சத்தையும் தொழிற் சங்கம் எதிர்த்தது. கிழக்கு டிப்போவின் போர்மனான T. குணரத்தினத்தை மாற்ற வேண்டுமெனச் சங்கம் கோரியது.

பஸ்களுக்கு ஊழியர்களை நிரந்தரமாக நிறுவல், ஓவர்டைம் சரிசமமாகப் பங்கிடுதல் ஆகிய கோரிக்கைகளை இயன்றளவு அளிப்பதென ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிழக்கு டிப்போ போர்மன் குணரத்தினத்தை மாற்றும் பிரச்சினையை, மேலும் விபரங்களைப் பெற்றபின் பரிசீலிப்பதென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# வெரகர வேலைநிறுத்தம்

வெரகெரவில், அலுமினிய மிகுதியை கள்ளத்தனமாக விற்றதாகக் குற்றஞ்சாட்டி, மூன்றாந்தர ஸ்டோர் கீப்பரை இலங்கை போக்குவரத்துச் சபை, உத்தியோகத்திலிருந்து நிற்பாட்டியது. இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் இதை எதிர்த்து, ஸ்டோர் கீப்பரை உத்தியோகத்தில் அமர்த்தவேண்டும் எனக்கோரியது.

இதற்காதரவாக, சப்ளைப் பிரிவைச் சேர்ந்த எல்லா ஸ்டோர் கீப்பர்களும், என்ஜினியரிங் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். இக்கட்டத்தில் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் இவ்விற்பனைக்குப் பொறுப்பான உயர் உத்தியோகத்தர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டுமெனக்கோரியது. பிரதான சப்ளை உத்தியோகத்தர், இ. போ. ச. டென்டர் சபைத் தலைவர், உதவிப் பிரதான சப்ளை உத்தியோகத்தர் ஆகியவர்களே அலுமினிய மிகுதியை விற்கவேண்டும் என்று ஸ்டோர் கீப்பருக்கு ஆணையிட்டவர்கள்.

இ. போ. ச. தலைவர் உயர் உத்தியோகத்தர்களின் நலன்களைப் பாதுகாக்க முனைந்தார். ஆனால் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் இவர்களை வேலையிலிருந்து நீக்கம் வேண்டுமென உறுதியாக நின்றது. 3500 தொழிலாளர்கள் அனைவரும் செப்டம்பர் மாதம் 10-ம் திகதி வேலை நிறுத்தம் செய்தனர்.

இவ்வேலை நிறுத்தத்தின் விளைவாக, மந்திரி, தொடர்புள்ள மூன்று உத்தியோகத்தர்களையும் வேலை நீக்கம் செய்தனர். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் 12-ம் திகதி வேலைக்குத் திரும்பினர்.

இ. போ. ச. வின் சரித்திரத்தில் உயர் உத்தியோகத்தர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது இதுவேமுதல் தடவையாகும்.

## மக்கள் கம்யூன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தருகிறார். கம்யூனிஸ்ட் அல்லாத, முதலாளித்துவக்கொள்கையுடைய இவரின் விளக்கம் இந்தப் பிரச்சினைக்கு சிறப்பான விளக்கந் தருகிறது.

அவர் கூறுகிறார்:

"மக்கள் கம்யூன்களில் தனிக் குடும்பத்தவர்களுக்கு, அவர்கள் விரும்பினால் சொந்தமாக உணவு சமைத்துச் சாப்பிட முடியும். ஆனால் 100க்கு 99 சத வீத கம்யூன் மக்கள் பொது உணவுச்சாலைகளையே விரும்புகிறார்கள். காரணம், பொது உணவுச் சாலைகளில் எல்லா வகையான உணவுகளும் இருக்கின்றன. அவைகளில் தாம் விரும்பியவற்றை இன்பமாகச் சாப்பிட அவர்களுக்கு முடிகிறது. அதோடு, பொது உணவுச் சாலை உணவு இலவசமாக வேறு கிடைக்கின்றது. அதோடு, சமைப்பதற்குச் செலவிடும் நேரத்தை, குடும்பத்தினர் முதியோர் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதிலும், நாட்டியம், நாடகம், சங்கீதம், விளையாட்டு ஆகியவைகளைப் பயிற்றுவித்தும், மற்றும் சிலர், பொழுதுபோக்கு விவகாரங்களில் ஈடுபடுவதிலும், கலாச்சார இலக்கிய துறையில் கலந்தும், அரசியல் வகுப்புகள் கூட்டங்களில் பங்கு பற்றியும் பிரயோஜனமாகப் போக்குகிறார்கள். சிறு குடும்பமாக இல்லாமல், மிகப் பெரிய குடும்பமாக. அவர்கள் வாழ்கிறார்கள்.

அதிக ஓய்வு நேரமும், வசதியும் இருக்கின்ற காரணத்தால், உலகிலேயே கல்வியறிவில் பிற்பட்டுக்கிடந்த சீனத்து விவசாயிகளிடையே, 5ஆண்டுகளில் கம்யூன் நிர்வாகம் கல்வி இல்லாமையை முற்றும் மாற்றியதுடன், சிறந்த கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் தோற்றுவித்திருக்கிறது.

சீனத்து மக்கள் கம்யூன்களின் மிகப் பெரும் வெற்றியை, சாதனையை 1960, 61, 62 ஆகிய ஆண்டுகள் உலகுக்கு குரல் உயர்த்தி முழங்கின.

இம்மூன்று ஆண்டுகளிலும், மக்கள் சீனம் மிகப் பெரும் இயற்கை கோளாறுகளுக்கு ஆளாயிற்று. மேற்கத்திய நாடுகளின் கணிப்புப்படி கடந்த நூறு ஆண்டுகளில் சீனம் எதிர்நோக்காத இயற்கை-விளைவு ஏற்பட்டது. ஒரு புறம் கொடும் வெள்ளம், மறு புறம் வரட்சி. பண்டைய சீனத்தில் இத்தகைய கேடு விளைந்திருந்தால் 5 கோடி மக்களுக்கு மேல் அகால சாவுக்குப் பலியாகி இருப்பார்கள் என்று சீனத்து பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இத்தகைய பெரும் இயற்கை விளைவை மக்கள் கம்யூன்கள் திறமையுடன் எதிர்த்து வெற்றி கண்டன. மூன்று ஆண்டுகளிலும் பட்டினியில் ஒருவர்கூட சாகாமல் பாதுகாத்த பெருமை கம்யூன் அமைப்பையும், அதன் திறமையான உணவு விநியோகத்தையுமே சாரும்.

இம்மூன்றாண்டு வெற்றிகள் பற்றி சீன விவசாய மக்களின் பாமரப் பாட்டு இதோ!

வானை எண்ணி அஞ்சுகிலோம்
மண்ணை எண்ணி அஞ்சுகிலோம்
ஏன்? ஆயிரம் குடும்பங்கள்
எழிலார் குடும்பம் ஒன்றானோம்
ஆனபின்னர் இன்றோடு
ஆண்டு மூன்று மழையில்லை!
வானம் பொய்த்ததானாலும்
வயல்கள் வரண்டு காயவில்லை
நீருக் கொன்றும் குறைவில்லை!
நிறைந்து நிற்கும்
வயலெல்லாம்
சாரி சாரியாய் மலர்கள்
தலையைத்தூக்கிச்
சிரித்திடுமே!'

# கைத்தொழில்கமத்தொழில் உற்பத்திப் பெருக்கு

(6-ம் பக்க தொடர்ச்சி)

### கைத்தொழில் உற்பத்தி

இரண்டு வருடகால சீர்திருத்தத்தின் பின் கைத்தொழில் உற்பத்தியில் பலதர வளர்ச்சி ஏற்படுகின்றது.

1963ம் ஆண்டு முதல்ஆறுமாதங்களில் முக்கிய கைத்தொழில் உற்பத்திகள் படிப் படியாகக் கூடியுள்ளன. பல வழிகளில் கடந்த வருட உற்பத்தியிலும், இவ்வருடம் கூடியுள்ளது. கமத்தொழிலுக்கான இயந்திர உற்பத்தியில் ஜனவரி–ஜூன் காலகட்டத்தில் 42 விகிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. உழவு யந்திரங்களின் உற்பத்தி 30 விகிதமாகக் கூடியுள்ளது. சிறு கைத்தொழிலில் மக்கள் பாவிப்புக்கான பொருட்கள் உற்பத்தி தொடர்பாக வளர்ந்துள்ளது. ஜனவரி – ஜூன் காலப் பிரிவில் கமத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட 17சிறு கைத்தொழில்கள் 20 விகிதமாகக் கூடியுள்ளன. இந்த 17 கைத்தொழில்களில், பால், முட்டை உற்பத்திகள், இறைச்சி, சோப், சிகரட்டுகள் முதலியவை 40 தொடக்கம் 100 விகிதம் வரை கூடியுள்ளன.

கனரகக் கைத்தொழில், உருக்கு உற்பத்தி ஆகியவையும்கூடுதலாக வளர்ச்சியுற்றன; எண்ணெய் உற்பத்தி வளர்ச்சியுற்றது; மர உற்பத்தி முந்திய வருடத்துடன் ஒப்பிடும்போது 10 விகிதம் கூடியது. ஜூன் மாதத்தில் சராசரியாக உற்பத்தியாக்கப்பட்ட கரி ஜனவரி உற்பத்தியிலும் பார்க்க 40000 தொன்கள் கூடியதாகும். பெரும்பான்மையான கைத்தொழில்களில் 1963 உற்பத்தித் திட்டத்தின் அரைவாசியோ அதற்குக் கூடிய பங்கோ முடிக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் பொருட்களின் தரமும் சிறப்படைந்துள்ளது. கூடிய பொருட்களும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. ஜனவரி-ஜூன் மாதத்தில் உருக்கப்பட்ட இரும்பில் 99 விகிதம் தரமானது, 95 விகித சுருளைகள் தரமானவை, 97 விகித பருத்திப் பொருட்கள் முதல் தரமானவை. 1963ன் முதல் பகுதியில் எடுக்கப்பட்ட கரியில் முந்திய வருடத்தைவிட சிறு விகிதம் தூசும் குறைந்த அளவில் சாம்பல் தன்மையும் இருந்தது. நாட்டின் உருக்கு ஆலைகள் 300 வகையான புதிய சுருளைகளை உற்பத்தி செய்தன. நாட்டின் பொறியியல் தாபனங்கள் 220 புதிய வகை இயந்திரங்களை உற்பத்தி செய்தன. இவற்றுள் கணிசமானவை விவசாயத்திற்கு உதவியாக அமையும் தன்மையாவன.

உற்பத்தியைக் காட்டி, சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கான பரந்த இயக்கம் ஒன்று நாட்டின் கைத்தொழில் நிலையங்கள் அத்தனையிலும் நிலவுகின்றது. தொழிலாளர்கள், என்ஜினியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகிய அனைவரும் கைத்தொழில் உற்பத்தியை மேலும் கூட்டுவதற்குக் கடுமையாக உழைக்கின்றனர்.

கைத்தொழில், கமத்தொழில் உற்பத்தி வளர்ச்சியடைந்ததால், சந்தை கூடுதலாகப் பொருட்களைக் கொண்டுள்ளது.

கமத்தொழில், கைத்தொழில் உற்பத்திப் பொருட்களைக் கூட்டும் திட்டத்தை வர்த்தக இலாக்காக்கள் வெற்றிகரமாகச் செய்து வருகின்றன. 1963ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அரசாங்க வர்த்தக இலாக்காக்கள் முந்திய வருடத்திலும் 20 விகிதம் கூடுதலான அளவிற்கு கமத்தொழில் சிறு பொருட்களை வாங்கியுள்ளன; இரண்டு மடங்கு பன்றி இறைச்சியும், முட்டைகளும் வேண்டியுள்ளன. சீனத்தின் மிக முக்கிய கைத்தொழில் நகரமான ஷாங்காயிலுள்ள ஒன்பது பொருள் வாங்கிப் பங்கீடு செய்யும் நிலையங்களில் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதத்தில் 16·9 விகிதம் கூடுதலான பெருமதியுள்ள பொருட்கள் பரிமாறப்பட்டுள்ளன. இந்நிலையங்களால் வாங்கப்பட்ட சோப், பாத்திரங்கள், சுடு நீர்ப்போத்தல்கள், படுக்கை விரிப்புகள், பருத்தி விரிப்புகள் முதலிய மிகவும் தேவையான அம்சங்கள், 60–200 விகிதம் கூடுதலான அளவிற்கு இந்நிலையங்களால் வாங்கப்பட்டன.

விளைவாக நாட்டுப்புறத்திலும், நகரப் புறத்திலும் பொருள் நிலைமை படிப்படி விருத்தியடைகின்றது. சீனத்தின் தெற்குப்பகுதியிலோ அல்லது வடக்குப் பகுதியிலோ உள்ள பெரியதும் சிறியதுமான நகரங்களில் உள்ள சந்தைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை யாரும் கவனிக்காமலிருக்க முடியாது. தெருவில் உள்ள கடைகளில் புத்தம் புதிய மரக்கறிகளும், பழங்களும் உயர அடுக்க வைக்கப்பட்டுருக்கின்றன. பலசரகுக்கடைகளில் முன்னர் இருந்ததிலும் பார்க்கக் கூடுதலாக இப்பொழுது மீன், இறைச்சி, முட்டை முதலியன விற்கப்படுகின்றன. சிறியதும் பெரியதுமான சிற்றுண்டிச் சாலைகள் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. வாடிக்கைக்காரர்களின் வீட்டு வாசல்களில் உணவுப் பொருட்களையும் கைத்தொழில் பொருட்களையும் கையால் தள்ளிச்செல்லும் கரத்தையில் எடுத்துச் சென்று கொடுக்கின்றனர் விற்பனையாளர்கள்.

1963 ஜனவரி–ஜூன் காலப் பகுதியில் பீகிங், ஷாங்காய், ரியென்சின், சென் யாங், வுகான் கன்ரன், சியான், சுங்கின் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் முந்திய வருடம் இதே காலப் பகுதியில் வாங்கியதிலும் பார்க்க இரு மடங்கு முட்டையும் இறைச்சியும் வேண்டியுள்ளனர். கோழி விற்பனையும் கூடியுள்ளது. கம்பளிப் பொருட்கள், பட்டுகள், கைக்கடிகாரக்கள், ரப்பர் சப்பாத்துக்கள், பிளாஸ்டிக் பொருட்கள் செயற்கை நூல் பொருட்கள் ஆகியவையின் விற்பனையும் கூடியுள்ளது.

சீனப் பொருளாதாரம் பல துறைகளிலும் சிறப்பாக வளர்ச்சியுறுகின்றது என்பதை இவை நிரூபிக்கின்றன. சரியாகச் சொல்வதானால், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அளவிற்குப் பொருட்கள் உற்பத்தி செய்யப் படவில்லை. சீன மக்கள் இன்னும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர், ஆனால் பெரிய கஷ்டங்களை வென்றுள்ளபடியாலும், சீன தேசிய பொருளாதார வளர்ச்சி நல்லதோர் முறையில் வளர்கின்றபடியாலும் எதிர்காலத்தில் மேலும் மகத்தான வெற்றிகளை அடைய முடியும் எனச் சீனமக்கள் நம்புகின்றனர். ஒரு குறிக்கப்பட்ட காலத்தின்பின் சீனாவின் சோஷலிச நிர்மானம் புதிய உத்வேகத்துடன் புதிய கட்டத்தை அடையும் என அவர்கள் நம்புகின்றனர்.

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பான தலைமை!

## சீன மக்களின் மகத்தான ஒற்றுமை!

( 10-ம் பக்கத் தொடர்ச்சி )

### எங்ஙனம் சீனுவின் பொருளாதாரம் சிறப்பாக வளர முடிந்தது?

இத்தகைய குறுகிய கட்டத்தில் பொருளாதார வளர்ச்சியில் இந்தச் சிறப்பான திருப்பத்தை ஏற்படுத்த சீன மக்களுக்கு எங்ஙனம் முடிந்தது? அடிப்படையான காரணங்கள் பின் வருபவையாம்:

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் மா சே துங்கினதும் தலைமையும், சோஷலிசத்தைக் கட்டுவதற்கான கட்சியின் பொதுக் கொள்கையும், ''திருத்துதல் ஸ்திரப்படுத்துதல், வாழ்க்கைத் தரத்தை நிரப்பி உயர்த்துதல்'' என்ற கட்சியின் கொள்கையும் முதன்மையான காரணங்கள்.

சீனு பெரிய ஜனத்தொகையும், செழிப்பான இயற்கை வசதிகளும் உடையதோர் சோஷலிஸ நாடு. ஆனுல் இன்றும் பொருளாதார ரீதியில் வறுமையுடையதாகவும் பண்பாட்டு ரீதியில் பின்தங்கியதாகவும் இருக்கின்றது. ஏகாதிபத்தியத்தினுல் தொடர்பாகத் தாக்கப்படுகின்றது. பழைய சமுதாயத்தின் மிகுதியான வறுமையையும் பின்தங்கிய நிலையையும் நீக்குவதற்கும் நாட்டின் தற்பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் சீன மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஒருமைப்பட்டு நிற்பது அவசியம்: ஆக்கபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் செயல்படல் வேண்டும். கட்சியின் பொதுக்கொள்கையின்படி கூறுவதானுல் சோஷலிஷப் பொருளாதார வளர்ச்சி நியதிக்கிணைய ''பூரணமாக வேலை செய்து, சோஷலிசத்தைக் கூடிய வேகத்துடனும், சிறப்பாகவும், மேலும் கூடிய பொருளாதாரப் பலன்களை'' ஏற்படுத்தும் வண்ணமும் செயல்படல் வேண்டும். தோழர் மா சே துங்கும் கம்யூனிஸ்ட் கட்சியும் 1958ம் ஆண்டு மார்ச் மாதம் முன்வைத்த பொதுக்கொள்கை சீனமக்களின் இவ்வுறுதிக்கும் அபிலாஷைக்கும் ஆதரவானதாக இருந்தது. ஆகவே அதை மக்கள் பெரிதும் ஆதரித்தனர். நிலைமை கஷ்டமாகும் பொழுதெல்லாம், பொதுக்கொள்கை கூடுதலான பலத்தை அளித்தது. கடந்த இரண்டாண்டுகளாக பொதுக் கொள்கை அளித்த உற்சாகத்தினுல் மக்கள் எப்பொழுதும் மகத்தான, புரட்சிகர உறுதியுடன் உழைத்தனர். இம்முறையில் தான் சீனப் பொருளாதாரம் சிறப்புற்று வளர முடிந்தது. இந்த இரண்டு வருடங்களில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சோஷலிஸத்தைக் கட்டி எழுப்புவதற்கான பொதுக்கொள்கையை உயர்த்திப் பிடித்தது மட்டுமல்லாமல் செயல்முறை அனுபவத்தின் அடிப்படையில் திட்டவட்டமான பல கொள்கைகளையும் வகுத்துக்கொண்டது.

### சோஷலிச நிர்மாணக் கொள்கை.

தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட தடங்கலை நீக்குவதற்காக 1960ம் ஆண்டு கடைசிப் பதியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ''திருத்துதல், ஸ்திரப்படுத்துதல், வாழ்க்கைத் தரத்தை நிரப்பி உயர்த்துதல்'' என்ற கொள்கையை முன் வைத்தது. இக்கொள்கையின் முக்கிய கருத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: கமத்தொழில் துறையில் கமத்தொழில் உற்பத்தியைக் கூடியவிரைவில் புதுப்பிக்கவும், பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும். அதே நேரத்தில் கைத்தொழில் உற்பத்தியும், கைத்தொழிலில் பல துறைகளிடையே உள்ள தொடர்பும் சரியாக வகுக்கப்படல் வேண்டும். அன்றுடம் தேவைப்படும் பொருட்களைக் கூட்டுவதற்குத் தகுந்த முயற்சி எடுக்கப்படல் வேண்டும்; மூலப் பொருள், மற்றும் பொருட்களின் நுகர்வைக் குறைத்து, தொழில் உற்பத்தியைக் கைத்தொழிலில் கூட்டுதல் வேண்டும்.


இக்கொள்கையின்படி கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சீன நாடு கமத்தொழிற் துறையில் பெருந் தொகையானவர்களை ஈடுபடுத்தியது. கமத்தொழிலுக்குக் கூடிய பொருளாதார, தொழில் நுட்ப நிதியுதவி அளித்தது. அரசாங்கம் 40 கோடி சிறிய உலோக உபகரணங்களையும், 30,000 உழவு யந்திரங்களையும் மேலும் பல நீர்ப்பாசன யந்திரங்களையும் கிராமப்புறங்களுக்கு அளித்தது. அரசாங்க செலவில் பெரும்பகுதி கமத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்டது; கமத்தொழிலுக்கென அளிக்கப்பட்ட நீண்டகாலக் கடன்களை கூட்டியுள்ளனர். கைத்தொழிற் துறையிலும் தொடர்ச்சியான வளர்ச்சி ஏற்பட்டது. கமத்தொழில் உற்பத்திக்கு உதவும் வண்ணம் கைத்தொழில் செயல்பட்டது.

### மக்கள் கம்யூன்கள்

இரண்டாவதாக, சீனு, மக்கள் கம்யூன்கள் என்றழைக்கப்படும் சக்திவாய்ந்த சமுதாய அமைப்பைச் சரியாக அமுல்படுத்துகின்றது.

சீனத்தில் 50 கோடி விவசாயிகள் உள்ளனர். தற்பொழுது அவர்களின் கமத்தொழில் ஆயுதங்கள் இன்னும் பழைய தன்மையினவாக அமைந்திருப்பதால் கமம் செய்தல் இன்னும் உடல் உழைப்பாகவே இருக்கின்றது. இதன் விளைவாக உழைப்பு உற்பத்தி குறைவாகவும், இயற்கை இடர்பாடுகளை எதிர்த்து நிற்கும் தன்மை கட்டுபடுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது. சீன மக்கள் சக்திவாய்ந்த, மக்கள் கம்யூன்கள் என்ற கூட்டுப் பொருளாதார ரீதியில் உழைத்திராவிடில் அவர்கள் கடந்த சில வருடங்களாக நடந்த பாரதூரமான இயற்கையின் இடர்பாடுகளை எதிர்த்து நின்றிருக்க முடியாது. இக் கஷ்டங்களை எதிர்த்துப் போரிடமுடியும் என்பதை ம கள் கம்யூன்கள் நிரூபித்துள்ளன.

முதன் முதலில், உற்பத்திக்குத் தேவையான இடங்களுக்கு மக்களையும், மூலப் பொருட்களையும் திரட்டுவதற்கு மக்கள் கம்யூன்களால் முடிந்துள்ளது. அடுத்ததாக மக்கள் கம்யூன்கள் உற்பத்திக் கேற்றபடி தேவைகளைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளத்தக்க அமைப்பை அளித்துள்ளன. அதன் அங்கத்தவர்களின் வாழ்க்கைக்கென சிறந்த ஒழுங்குகளை மக்கள் கம்யூன்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. மக்கள் கம்யூன்கள் ஜனநாயக ரீதியாகவும், சிக்கனமாகவும்,



'' ரெட் ஸ்டார் கம்யூன் '' பண்ணையில் பாவிக்கப்படும் நவீன உழவு யந்திரங்கள்

கெட்டித்தனமாகவும் நடத்தப்படுகின்றன.

மூன்ருவதாக, 1958-60 ஆகிய மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட மகத்தான நிர்மாண வெற்றிகள் கஷ்டங்களை வெல்வதில் முக்கிய சகதியாகத் திகழ்ந்தன.

1950-60 ஆண்டுகளில் நூற்றுக் கணக்கான பெரி ı நீர்த்தேக்கங்களும், ஆயிரக்கணக்கான மத்திய தர நீர்த்தேக்கங்களும், பல்லாயிரக்கணக்கான சிறிய நீர்த்தேக்கங்களும் கட்டப்பட்டன; கமத்தொழிலுக்கென 50,000 உழவு யந்திரங்கள் தயாரிக்கப்பட்டன. இவை கடந்த இரண்டு வருடங்களில் கமத்தொழில் உற்பத்தி கூடுவதற்கு உதவின.

இதே காலத்தில் நாட்டின் பிரதான கைத்தொழில் உற்பத்தி இருமடங்காகக் கூடியது. நாட்டிற்கு தேவையான யந்திரங்களையும் உபகரணங்களையும் சீன நாடே உற்பத்தி செய்ய முடிந்துள்ளது. விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சியிலும் கூடிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

### சீன மக்களின் ஒற்றுமை

நான்காவதாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் மகத்தான ஐக்கியத்துடன் இருந்தது, கஷ்டங்களை வெல்வதற்கும், சோஷலிசத்தைக் கட்டி எழுப்புவதற்கும் அடிப்படைக் காரணமாய் அமைந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும், தோழர் மா சே துங்கையும் சுற்றிச் சீன மக்கள் எப்பொழுதும் பிணைந்து நிற்கின்றனர். தேசிய நிர்மாணத்தில் அவர்கள் உறுதியுடனும், சக்தியுடனும் உழைக்கின்றனர். அவர்கள் தமது தாய் நாட்டையும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும், தலைவர் மா சே துங்கையும் ஆழமாக நேசிக்கின்றனர். சோஷலிசத்தைக் கட்டி எழுப்புவதற்கான பொதுக் கொள்கை, மிகுந்த தீவிர வளர்ச்சி, மக்கள் கம்யூன்கள் ஆகிய சிறப்புமிகு துவஜங்களைத் தூக்கிப் பிடித்து அவற்றுக்காகப் போராடுகின்றனர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் மா சே துங்கினதும் தலைமையில் அவர்கள் சோஷலிசப் பாதையில் வெற்றிகரமாகப் பீறு நடை போட முடியுமென நம்புகின்றனர்.

எல்லா இனங்களையும் சேர்ந்த சீன மக்களின் ஒற்றுமை நீண்ட நெடுங்காலப் புரட்சிகரப் போராட்டத்தில் உறுதியாக்கப்பட்டது.

### பிற்போக்குவாதிகளின் தப்புக் கணக்கு

ஏகாதிபத்தியவாதிகளும், பிற்போக்கு தேசியவாதிகளும், நவீன திரிபுவாதிகளும், சீன நாடு தனது பொருளாதாரக்கஷ்டங்களைத் தானுகவே வெல்லமுடியாதென நினைத்தனர். வேறு சிலர் மக்கள் சீனக்குடியரசு 'தன் பலத்தில் நிற்கமுடியாதெனக் கருதினர். சீன எதிர்ப்புப் பிரசாரத்தைப் புதிய வேகத்துடன் நடாத்தினர். ஏகாதிபத்தியவாதிகளினதும், சீன மக்களை வெறுக்கும் அவரின் பாதம் நக்குபவர்களதும் கெட்ட ஆசைகள் நிறைவேருமல் கனவாகப் போனதை எவரும் காணமுடியும்.

அவர்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலுள்ள 65 கோடி சீன மக்களின் மகத்தான ஒற்றுமையையும், சீன மக்களின் புரட்சிகர உணர்ச்சியையும், அவர்களின் தன்னம்பிக்கையையும் குறைத்து மதிப்பிடுவதாலே இத்தகைய பகற் கனவு காண்கின்றனர். அவர்கள் தமது பலத்தைக் கணித்து மக்கள் பலத்தைப் பார்க்க மறுக்கின்றனர்.

''நாம் தனிமைப்பட்டு நிற்கவில்லை. ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் எல்லா நாடுகளும், மக்களும் நமது நண்பர்கள். ஆனுலும் எங்கள் பலத்தில் நம்பியே நாங்கள் புதுமை காண விழைகின்ருேம். நாம் திரட்டும் சக்திகளில் நம்பிக்கை வைத்துச் சீன, வெளிநாட்டுப் பிற்போக்குவாதிகளைத் தோற்கடிக்க முடியும்'' எனத் தோழர் மா சே துங் மூன்ருவது புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தின் போது கூறினர்.

சீன ı க்கள் தமது பலத்தைக் கொண்டு பிற்போக்கு சியாங்கே-ஷேக் அரசாங்கத்தைத் தோற்கடித்தனர்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிந்தனர். மக்கள் சீனக் குடியரசை ஸ்தாபித்தனர். அவர்கள் அதே ரீதியில் சோஷலிசப் புரட்சியை முன்னெடுத்துச் சென்று, சோஷலிச நிர்மாணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி மேலும் பலம் மிக்க சோஷலிச நாட்டை நிறுவுவர் என்பதில் சந்தேகமில்லை.

பாடு படுபவாக்கே — இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல — நாடு
காண்ப தவரலவோ?

வாழவேண்டு மெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழை என்ருெருவன் — உலகில்
இருக்கலா காதையா?

—கவிமணி

# சீன எதிர்ப்புக் கும்பலின் விஷமப் பிரச்சாரம்

இலங்கையில் சீன எதிர்ப்புக் கும்பல் அண்மையில் துரிதமாகச் செயலாற்றுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரபல கையாளும், பலகாலமாக ''யாங்கிடிக்கி'' என்று கூறப்படுபவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தொடக்கம் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் பிலிப் குணவர்த்த, றிபியூன் பத்திரிகை வரை சீன எதிர்ப்புக் கோஷம் பெருகி வந்துள்ளது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் பொறுத்த மட்டில் பட்ஜெட் விவாதத்தை சாதகமாகக் கொண்டு திருமதி தேஜா குணவர்த்தனவைப் பத்திரிகைக் கமிஷனில் நியமித்ததை ஒட்டி, சீன மேல் அவதூறு பொழிந்தது, அவரது வர்க்கக் கண்ணோட்டத்திலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிதலிலும் எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால் சிலரை அவர் பிறநாட்டு அரசாங்கங்களின் ஏஜன்டுகள் என தார் பூச முனைந்தது, சட்டி முட்டியைப் பார்த்து நீ கறுப்பு நிறமென்று கூறுவதுபோல் உள்ளது. திருமதி தேஜா குணவர்த்தனவின் 'குருஷேவிசம்' என்ற புத்தகத்திற்கு அவர் காட்டிய வெறுப்பும் இப்புத்தகம் சோவியத் யூனியனுக்குப் போக முடியாது தடைசெய்யப்பட்டதையிட்டு அவர் வெளிக்காட்டிய மகிழ்ச்சியும் வேடிக்கையாக உள்ளன. தோழர் குருசேவுக்கு இந்த நாட்களில் அபூர்வமான நண்பர்கள் தோன்றியிருக்கிறார்கள் போலத் தெரிகிறது!

ஆனால் பட்ஜெட் விவாதத்தின்போது பிலிப் குணவர்த்தன சீனவுக்கு எதிராக வெடித்துக் கிளம்பியதற்குத் தான் காரணம் தெரியவில்லை. சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களை ''பீக்கிங் யுத்தப் பிரபுக்கள்'' என்று குறிப்பிடுமளவிற்கு தன்னுள் இரத்தக் கொதிப்பை ஏற்படுத்திவிட்டார் போல் தெரிகிறது, இது ஒரு மார்க்சியவாதியின் பேச்சா அல்லது திரிபுவாதத்தின் சமீபத்திய பிரதி பலிப்பில் ஒன்றா? பிலிப் குணவர்த்தனவிற்கு அவரது மார்க்சியம் இன்றும் ஞாபகத்தில் இருக்குமானால், ஒரு சோஷலிஸ நாடு இன்னும் ஒரு நாட்டைத் தாக்கவேண்டிய அவசியம் இல்லையென்பதும், யுத்தத்திற்கான பொருளாதார அடிப்படையை சோஷலிசம்தான் அகற்றுகிறது என்பதும் நன்கு புரிந்திருக்கும். ஒன்று, சீன ஓர் சோஷலிஸ நாடு அல்ல, அல்லது பிலிப் குணவர்த்தனவிற்கு மார்க்சிசம் தெரியாது. சீனவின் மோசமான எதிரிகள்கூட சீன ஓர் சோஷலிஸ நாடு இல்லை என்று சொல்லத் துணியவில்லை.

பிலிப் குணவர்த்தன மார்க்சிசத்தைவிட்டு, எப்பொழுதோ விலகிவிட்டார் என்பது தெரியாத விஷயமல்ல. காலம் சென்ற திரு. எஸ், டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் புத்த பிக்குகளின் காலடியில் சரண் கிடந்து ''தசபணத'' என்ற பத்துக் கோட்பாடுகளுக்கு (அதில் ஒன்று மார்க்சிச எதிர்ப்புப் போர்) தனது விசுவாசத்தை சத்தியப் படுத்தும் காட்சி இன்னும் மக்கள் மனதில் தெளிவாக உள்ளது. சீன-இந்திய எல்லைப்பிரச்சினை இரு நாடுகளுக்கிடையில் குரோதமாக வளர்ந்தபோது பிலிப் குணவர்த்தன அதைப் பிழையாகக் கணக்குப் போட்டுக் கொண்டார். நாடு பூராவும் சீன எதிர்ப்பும் இந்திய நட்பும் பரவுகிறது என்ற நம்பிக்கையில் மயங்கி நின்றார். இதே விதமயக்கத்தின் காரணமாக, 1956லும் வகுப்புவாதக் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார்.

ஆனால் நிகழ்ச்சிகள் அவரது மயக்கத்திற்கு மாறாக இருந்தன. இலங்கை மக்கள் சீன–இந்திய எல்லைப் பிரச்சினையின் உண்மையான காரணகர்த்தாக்களை புரிந்துகொள்ளாமலில்லை. இந்திய ஏகபோக முதலாளிகளின் பிற்போக்குத் தன்மையையும், அமெரிக்க, பிரித்தானிய மற்றும் ஏகாதிபத்திய நாடுகள் ஓடிவந்து இந்தியாவுக்கு ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் கொட்டியதையும் அதிலிருந்து இந்திய ஏகபோக முதலாளிகளுக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகளையும், இலங்கை மக்கள் சரிவரப் புரிந்துகொண்டார்கள். இப்பிரச்சினைக்குச் சூடேற்றுவதின் மூலம், கம்யூனிஸசீனத்திற்கு எதிராக தனது பிரச்சாரத்தை வலுப்படுத்துவதோடல்லாது, இந்தியாவில் தனக்குள்ள நண்பர்கள் மூலமாக திபெத்திலும் கால்வைக்கலாம் என்று ஏகாதிபத்தியவாதிகள் விரும்பினர் என்பதையும், இலங்கை மக்கள் புரிந்துகொள்ளத் தவறியதில்லை சீனவில் ஆட்சி புரியும் தொழிலாளி வர்க்கத்தின் ஆக்கிரமிப்பற்ற சமாதான மனப்பான்மையில் இலங்கை மக்களுக்கு ஆழ்ந்த உறுதியான நம்பிக்கை இருந்தது. சீனத் தொழிலாளி வர்க்கம், 1952ம் ஆண்டு, நெருக்கடியான கட்டத்தில் எமக்கு உதவி அளித்ததையும் பர்மா, நேபாளம், பாகிஸ்தான் போன்ற அண்மை நாடுகளுடன் உள்ள எல்லைப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துள்ளதையும் எமது நாட்டு மக்கள் அறிவர். பிற்போக்குவாதிகளின் தீவிரப் பிரச்சாரத்தினால் ஆரம்பத்தில் ஓரளவு தெளிவற்ற நிலையில் இருந்தபோதிலும். இந்தியத் துருப்புகளைச் சுற்றி வளைத்து சிறந்த சாதனைகளுடன் முன்னேறிக் கொண்டிருந்த கட்டத்தில் சீனவின் மிக உன்னதமான செயலான பரிபூரண யுத்த நிறுத்தமும், காயமடைந்த இந்தியப் போர் வீரர்களைத் திருப்பியனுப்பியதும், கைப்பற்றிய எல்லா ஆயுதங்களையும், வாகனங்களையும் திருப்பியனுப்பியதும், பிடிபட்ட இந்தியத்துருப்புகளை மனிதாபிமானத்துடன் கண்காணித்ததும் இறுதியாகப் பிடிபட்ட எல்லா இந்தியபோர் வீரர்களையும் திருப்பியனுப்பியதுமாகிய இச் சம்பவங்கள் எல்லாம் இந்தியாவுடன் சீன கொண்டுள்ள சமாதான கொள்கையை மென்மேலும் எமது மக்களின் மனதில் பதிய வைத்துள்ளன.

ஆம். பிலிப் குணவர்த்தனவின் கணக்கு பிழைத்துவிட்டது. சந்தேகத்துக்குரிய யு. என். பி., சமஷ்டிக் கட்சிகளின் தள்ளாடும் சீன விரோதக் கொள்கையின் கீழ் தனிப்பட்டு நிற்கிறார். ஆனால் அவர் சீனவுக்கெதிராக வெடித்தெழுவதையிட்டு ஓர் முக்கிய கேள்வி கேட்கப்படவேண்டும்; பிலிப்பினுடைய அதிதீவிர சீன எதிர்ப்பு இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கொள்கையா? இல்லாவிடில் கம்யூனிஸ்ட் சமசமாஜ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் பிலிப்பினுடைய அனாவசியமான சீன எதிர்ப்புக்கு மறுப்புக் கூறவில்லை? அதுவும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும், சீன இந்திய எல்லைப் பிரச்சினையில் சீனவின் கொள்கையையும், நடவடிக்கையையும் சரியென்று ஏற்றுக்கொண்டவர்கள்..... ஒருவேளை 'திரிபுவாதம்' என்னும் வியாதி இடதுசாரித் தலைவர்களின் நேர்மையைக் குழிதோண்டிப் புதைக்குமளவிற்கு குடிகொண்டுவிட்டதோ?

**அரசியல் விமர்சகர்**

வாங்கி வாசியுங்கள்
தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது எப்படி?
நா. சண்முகதாசன்
-தொழிலாளி வெளியீடு

ஒன்றுபட்ட தொழிற்சங்கங்கள் முன்வைக்கும்

# 21 கோரிக்கைகள்

1 நாளொன்றுக்கு ரூபா 1/- அல்லது மாதம் ஒன்றுக்கு ரூபா 30 விகிதம் ஊதிய உயர்வு.

2 எல்லா வாழ்க்கைச் செலவுப் படிகளுக்கும் வருமான வரியிலிருந்து விதி விலக்கு.

3 எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஆகக்கூடியதாக 45 மணிநேரவேலை வாரம்.

4 எல்லாத்தொழிலாளர்களுக்கும் போதிய வீட்டுவசதி அல்லது வீட்டு வாடகைப்பணம்.

5 முதலாளிகளினால் வழங்கப்பட்ட வாச ஸ்தலங்களில் குடியிருக்கும், தோட்டத்தொழிலாளர்கள் உட்பட்ட, தொழிலாளர்களுக்குப் பூரண குடியிருப்பு உரிமைகள்.

6 (அ) ஸ்தலஸ்தாபன சேவை உட்படதனியார் துறையிலுள்ள சகல தொழிலாளர்களுக்கும் 7நாள் காசுவல் விடுமுறையும் 30 நாள் வைத்தியவிடுமுறையும்.

(ஆ) பிரசவ விடுமுறை பிரசவத்திற்கு முன்னர் ஆறு வாரமும் பின்னர் ஆறு வாரமுமாக அதிகரிக்கப்படுதல, கர்ப்ப காலத்தின் கடைசிப் பகுதியிலும் பிரசவத்தைத் தொடர்ந்தும் குறைக்கப்பட்ட வேலை நேரம்.

(இ) அரசாங்க ஸ்தாபனங்களில் லீவு பொதுவிடுமுறைகளைப் பொறுத்தவரை சனிக்கிழமையை அரை நாளாகக்கணித்தல்.

(ஈ) பொதுவிடுமுறைகள் ஞாயிற்றுக்கிழமைகளில்வரும் பொழுது அடுத்த நாளை விடுமுறை நாளாகக் கணித்தல்.

(உ) சாப்பு காரியாலய சிப்பந்திகள் சட்டத்துக்குட்பட்ட எல்லா சட்டரீதியான விடுமுறைகளும் தனியார் துறையிலுள்ள தொழிலாளர்க்கு வழங்கப்படுதல்.

(ஊ) ஞாயிற்றுக்கிழமையை எல்லாத் தொழிலாளர்கட்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாளாக்குதல்.

7 வருடாந்த சம்பள உயர்வு 30 வருடங்களுக்கு நீடித்தல்.

8 ஸ்தலஸ்தாபன சேவை உட்பட்ட பொதுத்துறை ஊழியர்கள் 6 மாத சேவைக்குப்பின் தற்காலிக ஊழியர்களாகவும் 3வருடசேவைக்குப் பின் நிரந்தர பென்ஷன் உள்ள ஊழியர்களாகவும் ஆக்கப்படுதல். சம்பள உயர்வு பென்ஷன் ஆகியவற்றிற்கு நிரந்தர சேவைக்குமுற்பட்ட தற்காலிக சேவையையும் கணக்கிடுதல்.

9 தகுந்த பிரதி வேலையும் முந்தியசேவைக்கான போதிய நஷ்டஈடுமின்றி வேலை நீக்கம் எதுவும் செய்யப்படுதல் கூடாது.

10 (அ) ஊழியர் சேமநிதிக்கு முதலாளிகளின் கட்டணம் முழு ஊதியத்தின் 10%. ஆகக் கூட்டப்படுதல்.

(ஆ) ஊழியர் சேமநிதியில் 10 ஆண்டுகளுக்குக் குறையாது அங்கத்தவராக இருந்ததன் பின் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டாலும் ஊழியருக்கென ஊழியர் சேமநிதியில் இருக்கும் பணத்தையும், ஊழியர் சேமநிதிக்கு மாற்றப் பட்டுள்ள நிதித் தொகைகளையும் எடுப்பதற்கான வசதி.

11 ஊழியர் சேமநிதி ஆரம்பிக்கும் முன்பாக உள்ள ஒவ்வொரு வருட கடந்த காலச் சேவைக்கும் ஒருமாத முழு ஊதியம் கிராட்டியுட்டி வழங்கப்படுதல்.

12 அரசாங்க கார்ப்பரேஷன் கோர்ட்டுகளுக்கு தொழிலாளர்களிடமிருந்து தெரியப்பட்ட பிரதிநிதிகள் நியமிக்கப்படுதல்.

13 இடமாற்ற, உத்தியோக உயர்வு போர்டுகள் தொழிற் சங்கப்பிரதிநிதிகளுடன் நிறுவப்படுதல்.

14 ஆசிரியர்கள், அரசாங்க கார்ப்பரேஷன் ஊழியர்கள், ஸ்தலஸ்தாபன சேவை ஊழியர்கள் உட்பட்ட எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் பூரண தொற்சங்க அரசியல் குடியுரிமைகள்வழங்கப்படுதல். தொழிற்சங்கஉத்தியோகத்தர்களுக்கு எல்லாத்தோட்டங்களிலும் பிரவேச உரிமை வழங்குதல்.

15 வேலை நிறுத்தங்களில்பங்குபற்றியது காரணமாகவோ, தொழிற்சங்க வேலைகள் ஆகியவற்றிற்காகவோ நீக்கப்பட்ட அல்லது கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்ட எல்லாபொது ஊழியர்களுக்கும், கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கும் திரும்ப வேலைகொடுத்தல். அதே காரணங்களுக்காக விதிக்கப்பட்ட எல்லாத் தண்டனைகளும் அகற்றப்படுதல்.

16 பொதுச் சேவைப் பழைய ஊழியர்களை (old entrants) தண்டிக்காமை சம்பந்தமாகக் காலஞ்சென்ற எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் வாக்குறுதியைநிறைவேற்றுதல். சம்பளஉயர்வுகள் முதலியன திரும்பவும் வழங்கப்படுதல்.

17 உத்தியோக மொழியில் தேர்ச்சி தேவையில்லாத கடமைகளில் ஈடுபட்டுள்ள பொது ஊழியர்களுக்குத் தேர்வுப் பரீட்சையிலிருந்து விதி விலக்கு.

18 (அ) அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை உத்தியோக உயர்வு சாத்தியக் கூறுகள், நிர்வாக சேவையில் உயர்மட்ட ஸ்தானங்களில் 50%. விகிதம் கீழ் மட்டங்களிலிருந்து நிரப்பப்படத் தகுந்த வழிவகைகள் ஆகியன கொண்ட ஒரு முகப்படுத்தப்பட்ட நிர்வாக சேவை.

(ஆ) தொழில்நுட்ப கைத்தொழில் தரங்களில் இருக்கும் தொழிலாளர்கள் தரத்துக்குத் தரம் உயர்வு பெறுவதற்குச் சரியான வாய்ப்புக்களுக்கான வசதி.

19 பொது, ஸ்தலஸ்தாபன ஊழியர்களின் நம்பிக்கையைப் பெறத்தக்கதாக பொது சேவைக் கமிஷனையும், ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனையும் புனரமைப்பது. பொதுச்சேவைக் கமிஷன், ஸ்தலஸ்தாபனக் கமிஷன் ஆகியவற்றின் முந்திய தீர்மானங்களைப் புனராலோசிக்கப் பாராளுமன்றத்தின் ஆணைக்குக் கீழ் ஒரு புனர் விசாரணை சபை நிறுவுவது.

20 தொழிலாளர் நஷ்டஈடு சட்டத்தின் கீழான நஷ்டஈடு விகிதத்தை மும்மடங்காக்குவது, விபத்து நாளிலிருந்து முழு ஊதியம் வழங்குவது.

21 சமமான வேலைக்குச் சமமான சம்பளம்.

(அ) பெண்களுக்கு எதிராகச் சம்பளத்தில் வித்தியாசம் கூடாது.

(ஆ) ஆசிரியருக்கு இருப்பது போல் மொழியை அடிப்படையாகக் கொண்டு சம்பள வித்தியாசம் கூடாது.

# யுத்தம்-சமாதானம், புரட்சி-சகவாழ்வு
# ஏகாதிபத்தியம்-தேசிய விடுதலை

## —சீனாவின் கண்ணோட்டம்—

(யுத்தம், சமாதானம், தேசிய சுதந்திர இயக்கம், ஏகாதிபத்தியம் ஆகியவைபற்றிய சீன நாட்டின் கொள்கைகள் இன்று உலகெங்கணும் மிகுந்த சிரத்தையுடன் கவனிக்கப்பட்டு வருகின்றன. அதன் முக்கிய சாராம்சத்தை "மக்கள் தினசரி" தலைபங்கத்திலிருந்து தொகுத்துக் கீழே தருகின்றோம்.
நன்றி: ஆபிரிக்கப் புரட்சி (மாதப் பத்திரிகை) — ஆசிரியர்.

### 1. யுத்தமும் சமாதானமும்

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கைகளை எதிர்க்கும், ஏகாதிபத்தியம் புதிய யுத்தம் ஆரம்பிப்பதைத் தடுக்கும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் நிலையை உறுதியாக எடுத்துள்ளது. ஏகாதிபத்தியம் இருக்கும்வரை ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான அடிப்படை இருந்தே தீரும் என நாம் எப்பொழுதும் கருதுகின்றோம்.

இரண்டாவதாக, சோஷலிச முகாமைத் தொடர்ச்சியாகப் பலப்படுத்தியும், ஆசிய-ஆபிரிக்க-லத்தீன்-அமெரிக்க நாடுகளின் தேசிய ஜனநாயக இயக்கங்களையும், பல்வேறு நாடுகளிலுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களையும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் இயக்கத்தை பலப்படுத்தியும், அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, உறுதியான போராட்டத்தின் மூலமே உலக சமாதானத்தை நிச்சயமாகக் காப்பாற்றமுடியும் என சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது.

★

### 2. தேசிய சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவு

உலக சமாதானத்தைக் காப்பதற்கான போராட்டம், பல்வேறு நாடுகளிலுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று ஆதரவானவை; அவற்றைப் பிரிக்கமுடியாது என சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது. தேசிய சுதந்திர இயக்கங்களும் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களும், ஏகாதிபத்திய யுத்த சக்திகளைப் பலவீனப்படுத்தி, உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பலம்மிக்க சக்தியாகும். தேசிய சுதந்திர போராட்டங்களும், மக்கள் புரட்சிகரப் போராட்டங்களும் எவ்வளவுக்குக் கூடுகின்றனவோ அவ்வளவுக்கு அவை உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு உகந்தவையாகும். சோஷலிச நாடுகளும், எல்லா நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளும், உலகத்திலுள்ள சமாதானம் விரும்பும் மக்களும் தேசிய சுதந்திர இயக்கங்களையும், பல்வேறு நாடுகளிலுள்ள மக்களையும் புரட்சிகரப் போராட்டங்களையும் உறுதியாக ஆதரித்தல் வேண்டும்; தேசிய சுதந்திர, மக்களின் புரட்சிகர யுத்தங்களையும் உறுதியாக ஆதரித்தல் வேண்டும்.

★

### 3. புரட்சிகர யுத்தமும் உலக சமாதானமும்

இவ்விஷயம் பற்றிய எங்களுடைய கருத்தை "யுத்த மனப்பான்மையானது" எனக் கூறி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குபவர்கள், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தை, தேசிய இயக்கங்களுக்கும், மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கும், தேசிய சுதந்திர, மக்களின் புரட்சிகர யுத்தங்களுக்கும் எதிரானதாக நிறுத்துகின்றனர். அவர்களின்படி, அடக்கப்பட்ட நாடுகளும், ஒடுக்கப்பட்ட மக்களும் ஏகாதிபத்தியமும் பிற்போக்குவாதிகளும் "தானமாக அளிப்பதை" மட்டும் பெறவே முடியும்; அவர்கள் ஏகாதிபத்தியத்தையும் பிற்போக்குவாதிகளையும் எதிர்த்துப் போராட்டம் நடாத்துதல் கூடாது; ஏனென்றால் அவர்கள் உலக சமாதானத்தைக் குழப்பிவிடுவர். ஏகாதிபத்தியமும் பிற்போக்குவாதிகளும் ஆயுதந்தாங்கி அடக்குமுறை செய்யும்பொழுது அடக்கப்பட்ட நாடுகளும், ஒடுக்கப்பட்ட மக்களும் புரட்சி எதிர்ப்பு யுத்தத்தைப் புரட்சிகர யுத்தத்தினால் எதிர்ப்பது, "சீர்செய்ய முடியாத விளைவுகளை" ஏற்படுத்திவிடுமென இவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தேசிய சுதந்திர இயக்கத்துக்கும், மக்களின் புரட்சிகர போராட்டத்துக்கும் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியும் யுத்தம் விழையும் ஏகாதிபத்திய சக்திகளைப்பலவீனப்படுத்தி, உலகத்தின் சமாதான சக்திகளைப் பலப்படுத்தும் என உண்மைகள் காட்டுகின்றன. புரட்சிக்குப் பயப்படும், புரட்சியை எதிர்க்கும் நிலையை எடுத்தல், தேசிய சுதந்திர இயக்கத்திற்கும், மக்களின் புரட்சிகரப் பாதைக்கும் தோல்விகளையும் தடைகளையும் தான் விளைவிக்கும்; இது சமாதான சக்திகளைத் தான் பாதிக்கும்; ஏகாதிபத்திய வாதிகள் உலக யுத்தத்தை ஆரம்பிக்கும் ஆபத்தை மேலும் கூட்டும்.

### 4. ஏகாதிபத்தியம் "கடதாசிப் புலி"

1946-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தோழர் மா சே துங் இக்கொள்கையை முன்வைத்தார். சீன மக்களுக்கு மிகவும் கஷ்டமான காலம் அது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடனும், ஆள் பலத்திலும் ஆயுதபலத்திலும் மிகுந்த மேன்மையுடனும் திகழ்ந்த கோமின்டாங் பிற்போக்குவாதிகள் நாடு தழுவிய உள்நாட்டு யுத்தத்தை அவிழ்த்துவிட்டனர். அப்பொழுது, கொதிப்படைந்த எதிரியின் தாக்குதல்களுக்கு எதிராகவும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வெல்ல முடியாது என்ற எண்ணத்திற்கு எதிராகவும் சீனப் புரட்சியின் முன்னரும், சீன மக்களின் எதிர்காலத்தின் முன்னரும் எழுந்த கேள்விகள் இவை தாம். நாம் போராடத் துணிவோமா? புரட்சி செய்வோமா? வெற்றி பெறுவோமா? இந்த இக்கட்டான கட்டத்தில்தான், "ஏகாதிபத்தியமும், எல்லாப் பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகள்" என்ற மாக்சிச லெனினிசக் கொள்கையைத் தோழர் மா-சே-துங் முன்வைத்து சீன கம்யூனிஸ்டுகளுக்கும், சீன மக்களுக்கும் தத்துவார்த்த ஆயுதம் அளித்தார். அவர் மிகவும் தெளிவாகக் கூறினர்:

"எல்லாப் பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகள். வெளித்தோற்றத்தில் பிற்போக்குவாதிகள் பயங்கரமானவர்கள். ஆனால் உண்மையில் அவ்வளவு பலம் வாய்ந்தவர்களல்ல. நீண்ட காலப் பார்வையில் பிற்போக்கு வாதிகளல்ல, மக்களே சக்தி வாய்ந்தவர்கள்"

"ஒவ்வொரு அடக்கப்பட்ட நாடும், ஒடுக்கப்பட்ட மக்களும் எல்லாவற்றுக்கும் மேலாக ஏகாதிபத்தியத்தையும், பிற்போக்குவாதிகளையும் தோற்கடிப்பதற்குப் புரட்சிகர நம்பிக்கையும், புரட்சிகரத் துணிவும், புரட்சிகர உணர்வும் கொண்டிருத்தல் வேண்டும், அல்லாவிடில் எந்தப் புரட்சியும் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்காது"

ஏகாதிபத்தியம் அணு ஆயுதங்களுடன் திகழ்ந்த பொழுதும், போரிடத் துணிந்த புரட்சிகர மக்களை அடிபணியச் செய்ய முடியாது என்பதை சரித்திரம் நிரூபித்துள்ளது. சீனப் புரட்சியின் வெற்றியும், கொரியா, வியட்நாம், கியூபா, அல்ஜீரியா மற்றும் நாட்டு மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் மகத்தான வெற்றிகளும், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆயுதங்களைக் கொண்டிருந்த பொழுதே வெல்லப்பட்டன.

★

### 5. சமாதான சகஜீவனம் முடியாது

வித்தியாசமான சமுதாய அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே சமாதானமான சகஜீவனம் என்ற பிரச்சினையும், அடக்கப்பட்ட நாடுகளும், அடக்கப்பட்ட வர்க்கங்களும் புரட்சி செய்தல் என்ற பிரச்சினையும் இரு வித்யாசமான பிரச்சினைகள்; ஒரே வகையானவையல்ல. வித்தியாசமான சமுதாய அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே சமாதான சகஜீவன கொள்கையை அனுசரிக்கமுடியும். அடக்கும் நாடுகளுக்கும்; அடக்கப்பட்ட நாடுகளுக்கும் இடையேயும், அடக்கும் வர்க்கங்களுக்கும் அடக்கப்பட்ட வர்க்கங்களுக்கும் இடையேயும் சமாதான சகஜீவனக் கொள்கையை அனுசரிக்க முடியாது. அடக்கப்பட்ட நாட்டுக்கும் மக்களுக்கும் முன்னுலுள்ள கேள்வி ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்குவாதிகளினதும் ஆட்சியைத் தூக்கி எறிவதற்கான புரட்சிகரப் போராட்டத்தை நடத்துவதே. ஏகாதிபத்தியத்துடனும் பிற்போக்குவாதிகளுடனும் சமாதான சகஜீவனம் என்ற கொள்கையாக அது இருக்கவும் இல்லை; இருக்கவும் முடியாது.

★

### 6. தேசியப் போராட்டங்களுக்கு ஆதரவு

பின்தங்கிய நாடுகளைப் பொறுத்தவரையில் ஏகாதிபத்தியம் அனுசரிக்கும் கொள்கை எத்தகைய ரூபத்திலும், தன்மையிலும் அமைந்தாலும் காலனிச் சுரண்டல் கொள்கையாகவே அமையும். பின் தங்கிய நாடுகளின் நலனைக் கருத்துட்கொண்ட கொள்கையாக எந்த முறையிலும் அமையாது. பின் தங்கிய நாடுகளுக்கு சோஷலிச நாடுகள் உதவியளித்தல் வேண்டும். முதன் முதலில் அவைகளின் தேசிய சுதந்திரப் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்தல் வேண்டும். சுதந்திரம் வென்றபின் தேசிய பொருளாதாரங்களை விருத்திசெய்ய உதவி அளித்தல் வேண்டும். ஆனால் பின்தங்கிய நாடுகளுக்கு ஏகாதிபத்தியவாதிகள் காட்டும் காலனிக் கொள்கையை சோஷலிச நாடுகள் அனுமதித்தல் கூடாது. இதனிலும் கீழாக, பின் தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திகவாதிகளுடன் "கூட்டாகத் தலையிடக்" கூடாது. எவராவது இங்ஙனம் செய்தால், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவத்திற்குத் துரோகம் செய்து ஏகாதிபத்தியத்தினதும், காலனி முறையினதும் நலன்களுக்கும் சாதமாகச் செயல்படுவதாகும்.

---

## சீனாவில் . . .

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

1959, 60, 61ம் ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகளில் சீன மக்கள் வெளிநாடுகளில் ஒரு சதத்திற்காவது கெஞ்சவில்லை. தமது உழைப்பின் சக்தியாலும் சீனக்கம்யூனிஸ்ட்கட்சியின் சரியான வழிகாட்டுதலினாலும் வெற்றிகண்டார்கள். தொழில் பெருக்கத்தைக் குறிப்பிட வேண்டுமானால் 1958--63 ஆண்டிற்கான ஐந்து ஆண்டுத் திட்டத்தை மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றினார்கள்.

கிராமப்புறத்து மக்களிடமும் தொழிலாளர்களிடமும் நேரடியாக இவற்றை என்னால் அறிந்துகொள்ள முடிந்ததே தவிர குடும்பச் சண்டையையோ அதற்கான அறிகுறியையோ எங்குமே நான் காணவில்லை.

கடைசிநாள். தாயகம் திரும்ப பீக்கிங்கிலிருந்து விமான மூலம் கன்ரனுக்குப் பிரயாணமானோம். சிறிது தூரம் ரயிலில் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. கன்ரன் ஸ்டேசனிலிருந்து பிரயாணமாகி ஒரு ஸ்டேசனில் இறங்கி நானும் தோழர் அல்விசும் சீனத்தோழர்கள் மூவரும் கதைத்துச் சிரித்தபடி அடுத்த றெயில் ஏறுவதற்கு சிறிது தூரம் நடக்கிறோம். பிளாட்பாரத்தில் ஒரு சீனர் வியர்வை சிந்த தோளில் தடி மீது இருபக்கமும் கடும்பாரம் சுமந்து வருகிறார். ஒரு மனுஷி அவரிடம்போய் ஏதோ கதைக்கிறாள். அவர் தனது சட்டைப் பையிலிருந்து காசு நோட்டு ஏதோ எடுத்துக்கொடுக்கிறார். அப்பாடா! அந்த மனுஷி பத்திரகாளி போல் நின்றாள். காசைச் சுருட்டி எறிந்தாள். பலத்தச் சத்தம் வைத்து ஏதோ பேசினாள். உடனே அவர் பாரத்தை அப்படியே போட்டுவிட்டு மனுஷியை அடிக்கப் போனார். நான் திகைத்தேவிட்டேன். நடக்கக் கூடாத சம்பவம். சீனாவில் நான் தங்கிய இத்தனை நாட்களும் முயற்சித்துப் பார்த்தும் காண கூடாமல் போன சம்பவம், நிகழ்ந்தது. என் மனம் அந்தரப்படுகிறது. சே! இதென்ன! சீனாவில் இன்னும் பிரச்சினைகள் இருக்கின்றனவா! ம்! சே! ஒரே சிந்தனை. என் மனம் ஆறுதல் கூற முற்படுகிறது. சீனம் 65கோடி மக்களைக் கொண்ட நாடு. 14ஆண்டுகளுக்குள் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கமுடியுமா? இன்னும் காலம் வேண்டும் என்றெல்லாம் என் மனம் ஆறுதல் கூற முற்படுகிறது. மனம் கேட்கவில்லை. மனத்துள் ஒரே போராட்டம். தோழர் அல்விஸ் அவர்களுக்குக் கூறினேன் "தோழர் பார்த்தீரா சண்டையை, இன்னும் நிலைமை சரியில்லை" என்று கூறி முடிப்பதற்குள் இடைமறித்து தோழர் அல்விஸ் "நாம் எங்கிருக்கிறோம் பார்த்தீரா" என்று கேட்டார். நிமிர்ந்து பார்த்தேன் அது ஹொங் கொங்! ஹொங் கொங் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்துவரும் பிரதேசம். இந்தச் சம்பவம் அவர்களுடைய ஆதிக்கத்திலுள்ள எல்லையில் தான் நடந்தது.

# நட்புறவை விரும்பும் சீனாவா ஆக்கிரமிப்பு நாடு?

## சீன - இந்திய எல்லைப் பிரச்சினையின் உண்மைகள்!

தங்களுடைய வீரம்செறிந்த இராணுவம் வெற்றிவாகை சூடி முன்னேறும்போது, தாமே தம் விருப்பத்திற்கிணங்க ஒரு தலைப் பட்சமாகப் போரை நிறுத்தி, தம் இராணுவத்தைத் திருப்பி அழைத்தது உலக சரித்திரத்தில் இதுவரை நிகழாத புதுமையல்லவா?

போரின்போது, தாங்கள் கைப்பற்றிய எதிரியின் யுத்தத் தளபாடங்களை, மிக நல்ல முறையில், பழுதுபட்டவைகளை திருத்தியமைத்து புதியதாக தங்கள் கைகளால் எதிரியிடம் மீண்டும் ஒப்படைத்தது உலக வரலாற்றில் புதுமையல்லவா?

ஆம், உலக சரித்திரத்தில் நிகழாத இத்தகைய நிகழ்ச்சியை - புதுமையை உலகில் நிகழ்த்திய நாடு ஒன்று உண்டென்றால், அந்த ஒப்புயர்வற்ற நாடு, மக்கள் சீனக் குடியரசாகும்.

இத்தகைய மேன்மைமிகு நாட்டை ''ஆக்கிரமிப்பாளன்'' என்று குற்றம் சுமத்த முடியுமா? எவ்விதத்திலும் முடியாததொன்றாகும்.

ஆனால், அறிவு வளர்ச்சிபெற்றுள்ள இன்றைய உலகின் அபிமானத்தைப் பெற்ற நாட்டை ''ஆக்கிரமிப்பாளன்'' என குற்றம் சுமத்துபவர்கள், வஞ்சங் கொண்ட துஷ்டர்களாகத் தான் இருக்கவேண்டும்.

சர்வதேச ரீதியில் இத்தகைய இழிவடைந்த பிரச்சாரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியமும் - முதலாளித்துவ பிற்போக்காளரும் ஆரம்பித்து வைத்தனர்.

இவர்களின் இப்பிரச்சாரத்தைப் பற்றி எவரும் வியப்படையப் போவதில்லை-கவலைப் படப்போவதுமில்லை.

ஆனால், புதுமையும் - கவலை தருவதுமானதொன்று, சர்வதேச ரீதியிலும்-தேச ரீதியிலும் தங்களை சோஷலிஸ்டுகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் இத்தகைய இழிவான பிரச்சாரத்தை மக்கள் சீன குடியரசின் மீது சுமத்துவதே.

இந்தியா அமைதியான சாந்த சொரூபி, கடுமையான நெருக்கடிக்குள்ளான நாடு, ஆனால், சீனா பிடிவாதமுள்ள, மற்றோருக்கு துன்பம் தரும் முரட்டு சுபாவமுள்ள நாடு என அறிவுரை கூறுபவர்களுக்கும், சீனா இந்தியா இரு நாடுகளுக்குமுள்ள அடிப்படை வித்தியாசத்தின் விளக்கம் தெரியாது, விளக்க வருபவர்களுக்கும் கீழ்க்கண்ட பிரச்சினைகளை முன்வைக்கிறோம்.

<u>இதோ விளக்கம் :</u>

1. இந்தியா, பெரும் முதலாளிகளின் - நில பிரபுத்துவ ஜமீன்தார்களின் - முதலாளித்துவ ஆட்சியுள்ள நாடு. சீனா தொழிலாளர் - விவசாயிகளின் ஆட்சியிலுள்ள சோஷலிஸ்ட் நாடாகும்

2. சீனா, இந்தியா இருநாடுகளின் எல்லைக்கோடு, எக்காலத்திலாவது சட்டபூர்வமாகவோ ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியதிப்படியோ, இருநாடுகளும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட முறையில் '' பிரிக்கப் '' படவில்லை. இந்த நிலையில் எல்லை சம்பந்தமாக ஏற்பட்ட நெருக்கடியின் போது, சீனா இந்தியாவை ஆக்கிரமித்தது என்று எப்படிக்கூற முடியும்.

3. சரித்திரத்தில் சீனமும், இந்தியாவும் எக்காலமும் அமைதியும் - சமாதானமும் கொண்ட நட்பு நாடுகளாகவே இருந்துள்ளன. இந்த இரு நாடுகளுக்கிடையில் எல்லை பிரிக்கப்படாதிருந்தும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தலையிடு செய்யும் வரை எல்லைப் பிரச்சினை ஏற்படவில்லை. இதற்குக் காரணம், இந்த இருநாடுகளுக்கும் உரிமைகொண்ட பாரம்பரியம் இருந்ததேயாகும். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னிஷ்டம்போல், சட்ட விரோதமாக, சீன இந்திய எல்லையைப் பிரித்து பேதத்தை உட்புகுத்தியது. என்றாலும், சீனாவும்-இந்தியாவும் தங்களது தேச விடுதலையை வென்றெடுத்ததும், இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலோங்கி வளர்ந்தது. இவ்வேளையில் கூட, ஏகாதிபத்தியத்தால் சட்ட விரோதமான முறையில் நிர்ணயிக்கப்பட்ட எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள, சமாதானமாகத் தீர்வுகாண நட்புறவோடு பேச்சுவார்த்தை தொடங்க முன்முயன்றது சீனமல்லவா?

4. சமாதான - சகவாழ்வு கொள்கையை அமுல்படுத்தும் முகமாக உலகில் முதன் முதலில் சீனமும் இந்தியாவும் செய்துகொண்ட ''பஞ்ச சீல'' கோட்பாடு ஒப்பந்தம் சீனத்தின் ஒப்பற்ற பெரு முயற்சியல்லவா?

5. பழமையான நிலப் பிரபுத்துவத்தை ஒழித்து விவசாயிகளுக்கு நிலப்பங்கீடு செய்தபோது, திபேத்தில் ஏற்பட்ட கலவரத்தின் பின், திபேத்தின் தங்கப் பாளங்களோடு வெளியேறிய பெரும் நிலப்பிரபுத்துவ கிளர்ச்சிக்காரர்களுக்கு தஞ்சமளித்த இந்திய அரசாங்கம், சீனப் பிரதேசத்தின் மீது உரிமை கோர ஆரம்பிக்கவில்லையா? 1959-ம் வருடம் மக்மோகன் எல்லைக் கோட்டைத் தாண்டி வடக்கே சீனப் பிரதேசத்தில் ஆக்கிரமிப்பில் இறங்கவில்லையா?

6. சீன, இந்திய எல்லைப் பிரச்சினையில் சமாதான பூர்வமாகத் தீர்வுகாண 1960 ஏப்ரல் மாதத்தில் சீனப்பிரதமர், சிநேகபூர்வமான பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியப் பிரதமர் நேருவைச் சந்திப்பதற்காக புதுடில்லிக்கு வருகை தரவில்லையா? பேச்சுவார்த்தைகளில் தீர்வுகாணும் வரை தற்போது அமுலிலுள்ள எல்லைக்கோட்டை கௌரவமளிக்குமுகமாக எல்லையில் அமைதியை நிலைநிறுத்த இரு தரப்பாரும் தம் எல்லைப் பாது காவலர்களை வாபஸ் பெறுவது என்ற ஆறு அம்சம் கொண்ட ஒரு தீர்மானம் சீனப் பிரதமர் சௌ என்-லாய் அவர்களால் முன்வைக்கப் பட்ட போதிலும், இந்தியப் பிரதமர் நேரு இதை நிராகரிக்கவில்லையா?

7. சீனப்பிரதேசத்தில் இந்திய அத்துமீறல்கள், ஆத்திர மூட்டல்கள் மேலும் அதிகரித்து எல்லைப் பிரச்சினை தினம் தினம் உக்கிரமடைந்த போது, சீனம் பொறுமையையும், அவசரமின்மையையும் கைக்கொண்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண பெருமுயற்சி செய்யவில்லையா? முடிவாக சீனத்தின் சமாதான பூர்வமான ஆலோசனைகளை சீனத்தின் பலவீனம் எனத் தவறாகக் கருதிக்கொண்டு யுத்தத்தின்மூலம் ஆக்கிரமிப்பில் இறங்கியது இந்திய அரசாங்கமல்லவா?

> சீன-இந்திய எல்லை நெருக்கடி முற்போக்கு உலகிற்கு முக்கியமான ஒரு பிரச்சினை. இப் பிரச்சினை பற்றி பல கருத்துக்கள் உருவாகி உள்ளன.
>
> இப்பிரச்சினையில் யார் சரி? யார் பிழை? ஆக்கிரமிப்பாளர் யார்? சாந்தசொரூபி யார்? என விளங்கிக் கொள்வதற்கு இக் கட்டுரை பிரயோசனப்படும் என நாம் கருதுகிறோம்.
>
> —ஆசிரியர்.

8. சீனா ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இரு நாடுகளுக்காக கிழக்கு எல்லையில் இந்தியா ஏற்றுக்கொண்ட மக்மோகன் எல்லைக்கோடு உள்ளது. ஆனால், 1962 அக்டோபர் 20ந் தேதியளவில் எல்லையில் ஆயுத மோதல் ஏற்பட்ட போது, இந்தியா தாக்குதலை ஆரம்பிக்கும் போது, இதே எல்லைக்கோட்டுக்கு வடக்கே வெகு தூரம் முன்னேறி இந்திய இராணுவத்தினர் காவல் முகாம்கள் அமைத்தனர். இவ்வாறு இந்தியா தான் ஏற்றுக்கொண்ட மக்மோகன் கோட்டைத் தாண்டி சீனப்பிரதேசத்தில் நுழையவில்லையா?

9. எல்லையில் ஆயுதமோதல் ஏற்பட்டபோது மேற்கு எல்லையில் பாரம்பரியமுள்ள சரித்திரபூர்வமான சீனப்பிரதேசத்தில் இந்தியா காவல் முகாம்களை நிறுவவில்லையா?

இது சீனப் பிரதேசமாகையால், சீன மக்கள் குடியரசு 1956-1957ம் ஆண்டுகளில் பெரும் யந்திரங்களை உபயோகித்து சிங்கியாங்கிலிருந்து திபெத்வரை இப்பிரதேசத்தில் பிரமாண்டமான போக்குவரத்துப்பாதை அமைத்ததை, இந்திய அரசாங்கம் சீனப் பத்திரிகைச்செய்தி மூலம், இதைப் பற்றி அறியும்வரை, இதைப் பற்றி தெரிந்துகொள்ளாமல் இருந்தது புதுமையல்லவா?

10. சீனா தனது கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள போராட்டத்திலீடுபட வேண்டியதேற்பட்ட போதும், போராடும் போதும், எல்லையில் ஆயுத மோதல் ஏற்பட்டு நான்கு தினங்களுக்குப் பின்பு, 1962 அக்டோபர் 24ந் திகதி, ஆயுத மோதலைத் தவிர்க்க சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், எல்லைப் பிரச்சினைக்கு முடிவு காண மூன்று அம்ச ஆலோசனையை சீனா சமர்ப்பிக்கவில்லையா? சீன-இந்திய எல்லைப் பிரச்சினை சமாதான பூர்வமாக தீர்வுகாணும்வரை அமுலிலுள்ள எல்லைக்கோட்டுக்கு மதிப்பளித்ததோடு, 20 கிலோமீட்டருக்கு தமது இராணுவத்தினரைப் பின்னடையச் செய்து எல்லைப்பிரச்சினையை நட்புறவோடு தீர்த்துக்கொள்ள இரு நாடுகளின் பிரதமர்களுக்குமிடையில் மீண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுகோள் விடுக்கவில்லையா?

அடுத்தடுத்து இருமுறையும் இவ்வேண்டுகோள்களை இந்தியா நிராகரிக்கவில்லையா?

11. உள்நாட்டு - வெளிநாட்டு அரசியல் லாபத்திற்காக சீன இந்திய எல்லைப்பிரச்சினைக்கு முடிவு காணாது வைத்திருக்கவும், இரு நாடுகளுக்கு மிடையில் ஆயுத மோதல்கள் தொடர்ந்து நடைபெறவும், எல்லை பூராவும் அமைதிநிலவாமலிருப்பதற்கும் சகல முயற்சிகளையும் செய்த இந்திய அரசாங்கம், மேற் குறிப்பிட்ட வேண்டுகோளை நிராகரித்து, எல்லைப் போராட்டத்தை மேலும் உக்கிரமடையச் செய்வதை உணர்ந்த சீன மக்கள் குடியரசு இந்த நிலையை மாற்றுவதற்காக மேற்கூறிய மூன்று அம்ச ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு தம் சார்பிலேனும், இதைத் தாமே முயற்சிசெய்து தீர்க்கவேண்டுமென முடிவெடுத்து 1962நவம்பர் 22ந் தேதி சரித்திரம் இதுவரையில் கண்டிராத முறையில் போரை நிறுத்தி, தனது இராணுவத்தை திருப்பி அழைக்கும் அறிக்கையை வெளியிடவில்லையா?

12. இதையொட்டி, வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டிருந்த, சீன எல்லைப்பாதுகாவலர்கள் 1962 நவம்பர் 22ந் திகதி தாமே முழு எல்லையிலும் நிகழ்ந்த போரை நிறுத்தவில்லையா?

1962 டிசம்பர் 1ம் திகதியிலிருந்து சீன எல்லைப்படையினர், 1959நவம்பர் 7ந் திகதி வரை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எல்லைக்கோட்டிலிருந்து 20 கிலோ மீட்டர் பின்னடையவில்லையா?

யாரோ ஒருவர் கூறியது போல் போர் நடந்து கொண்டு வந்தமுறையில் நிறுத்தாமல் தொடர்ந்து நடத்தினால் டில்லி நகரையும் கைப்பற்றும் சக்தியிருந்த சீனா, எல்லையில் சில இடங்களில் எல்லைக் கோட்டைத் தாண்டியும், சில இடங்களில் தங்கள் பிரதேசங்களிலேயே போரிட்டுத் தமது வெற்றி உச்சநிலையை அடைந்துகொண்டிருந்த வேளையில், தம் விருப்பப்படி போரை நிறுத்திப் பின்வாங்கிச்சென்ற சீனாவை எத்தகைய தர்க்கத்தின் மூலமும் '' ஆக்கிரமிப்பாளன் '' என்று கூறமுடியுமா?

### <u>சீனாவின் நேச நடவடிக்கைகளும் இந்தியாவின் விரோத நடவடிக்கைகளும்</u>

'' சாந்த சொரூபி'' இந்தியாவுக்கும், '' ஆக்கிரமிப்பாளன் '' சீனாவுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களை எடுத்துக்காட்டியது இத்தோடு முடியவில்லை.

சீனா தன்னிஷ்டப்படி யுத்தத்தை நிறுத்தி எல்லையில் அமைதி ஏற்பட்டபின்பு, இந்தியப் படைகள் சீனப்பிர தேசத்தினுள் பலாத்காரமாக நுழைந்த சம்பவங்கள் பல.

மற்றொரு புறத்தில் போரை நிறுத்தி எல்லையிலிருந்து 20 கிலோ மீட்டர் பின்னடைந்தபின் எல்லையில் வாழும் சாதாரண குடிமக்களின் போக்குவரத்து வசதிகளை முறைப்படுத்தவும், சீர்குலைவாளர்களின் செயல்களை முறியடிக்கவும், ஒழுங்கான நிர்வாகத்தை ஏற்படுத்தவும், சரியான நிர்வாக எல்லைக்கோட்டில், யுத்த நிலையை மாற்றி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும், காவல் நிலையங்களை நிறுவவும் வேண்டுமென 1962 நவம்பர் 21ந் திகதி சீனா முன்வைத்த ஆலோசனையின்படி அறிக்கைகளின்படியும் செயலாற்ற சீனாவுக்கு உரிமை உண்டென்றாலும், எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கும் பேச்சுவார்த்தைகளுக்குவாய்ப்பளிப்பதற்காகவும், கொழும்பு மகாநாட்டின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிப்பதற்குமாக தனது பிரதேசத்தில் அவ்விதமான நடவடிக்கைகளில் சீனா ஈடுபடவில்லையா?

அது மட்டுமல்ல,

அன்று மேலைநாட்டு ஏகாதிபத்தியங்களின் விளையாட்டு மைதானமாக இருந்த ஆசியா விழித்தெழுந்து, தங்களது தேச விடுதலையைப் பெற்றதும், புறமுதுகிட்டோடிய ஏகாதிபத்தியவாதிகள், சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கிடையில் பல இடையூறு

(எதிர்பக்கம் பார்க்க)

களை உண்டாக்கிவிட்டே ஓடினார்கள். சாந்த சொரூபி இந்தியா — பர்மா — நேபாளம் —பாகிஸ்தான்—இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் தனக்கிருந்த பிரச்சினைகளில் ஒன்றையாவது தீர்த்துக்கொள்ளவில்லை. அவற்றைத் தீர்ப்பதற்கான தனது விருப்பத்தைக் கூட வெளியிடவில்லை. சில தினங்களுக்குமுன் சைப்ரஸ் நிக்கோஸியா நகரில் நடைபெற்ற ஆசிய — ஆபிரிக்க ஒத்துழைப்பு மகாநாட்டில், கௌரவ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலுள்ள நாட்டை, சந்தர்ப்பவாத—கபட நாடு என்று வர்ணித்த இந்தியப் பெண் பிரதிநிதி, கௌரவ ஸ்ரீமாவோ அவர்கள், சீன—இந்தியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வைத்த ஆலோசனைகளைப்பற்றி ஒரு நல்ல வார்த்தை கூடப்பேசவில்லை.

ஆனல் 'ஆக்கிரமிப்பாளன்' சீனு, 'சாந்த சொரூபி' இந்தியாவைத் தவிர்த்து மற்றைய அண்டை நாடுகளான பாகிஸ்தான், நேபாளம், பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளோடுள்ள தனது பிரச்சினைகளில் சமாதானபூர்வமாகத் தீர்வு கண்டுள்ளது.

சீன—இந்திய எல்லைப்பிரச்சினை ஏற்பட்டபோது இந்திய அரசாங்கம் பாரம்பரியமாக இந்தியாவின் சட்டத்திற்கு மதிப்பளித்து வாழ்ந்து வந்த சீன மக்களின் உடமைகளை அரசுரிமையாக்கி கொள்ளையடித்தது. ஆனல் மறுபுறம் சீன அரசாங்கம், தனது சீன எல்லைப் பாதுகாப்புப் படையினர் எல்லை கடந்த இந்திய ராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றிய சகல யுத்த தளபாடங்களையும் திருத்தி, மிசச்சிறந்த முறையில் இந்திய அரசாங்கத்திடம் திருப்பி ஒப்படைத்தது.

இருமுறையாக ஒப்படைக்கப்பட்ட ஆயுத தளபாடங்களில் 1,146 பீரங்கிகளையும் 270 தானே இயங்கும் மிஷின் துப்பாக்கிகளையும், 17,000 கைக்குண்டுகளையும், 12லட்சம் வெடி குண்டுகளையும், ஒரு விமானத்தையும், ஹெலிகொப்டர் விமானமொன்றையும், 12 டிரக்டர்களையும், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இரு யுத்த டாங்கிகளையும், துப்பாக்கிகளையும் பாதுகாத்து, எண்ணையிட்டு, சுத்தப்படுத்தி மோட்டார் வாகனங்களைத் திருத்தி அமைத்து, பெற்ரேல் நிரப்பி வைத்திருந்தனர். அவைகளை கையெழுத்திட்டு பொறுப்பேற்ற இந்திய அரசாங்கத்தின் இரு அதிகாரிகளான திரு. எவ். வி. என் ஹோரல், திரு. பி. எஸ். பர்தா ஆகிய இருவரும் தங்கள் நல்லெண்ணத்தைக் கூறி இவ்வ தொகையான யுத்த தளபாடங்கள் சரியான பாதுகாப்போடு, குறைபாடில்லாமல் கிடைக்கும் என நாங்கள் கருதவில்லை என்று கூறியுள்ளார்கள்.

# அமைதிகாக்கும் சீனு ஆக்கிரமிப்பு நாடா?

(14-ம் பக்க தொடர்ச்சி)

மேலும் சாந்த சொரூபி இந்தியா, பாரம்பரியமாக இந்தியாவில் வாழ்ந்த சீன மக்களைச் சிறைபிடித்தும், அவர்களின் சொத்துக்களைக் கைப்பற்றியும், கடுமையான சித்ரவதைகள் செய்தும் சிறையில் அடைத்தார்கள். அவர்களை மீட்டு மீண்டும் சீனுவிற்கு வரவழைக்க சீன அரசாங்கம் கப்பல் அனுப்பிய போது தாயகம் செல்ல விருப்பம் தெரிவித்த சீன மக்களை இந்திய அரசாங்கம் அவர்களில் அநேகமானோரை சீ) செல்ல அனுமதிக்காது பலாத்காரமாக தடுத்துவைத்தது. அதிகமாக தாய் தந்தையர்களுக்கு அனுமதியளித்தது. அவர்களின் குழந்தைகள் செல்லத் தடை செய்தார்கள். கணவனை அனுப்பிவிட்டு மனைவியை இந்தியாயில் தடுத்து வைத்தார்கள்.

ஆனல், மறுபுறம் ''ஆக்கிரமிப்பாளன்'' சீனு எல்லையில் ஆயுதமோதல்கள் ஏற்பட்ட போது, தமது இராணுவத்தால், சிறைபிடிக்கப்பட்ட, தோல்விகண்ட இந்திய வீரர்கள். சகலரையும், விடுதலை செய்து மீண்டும் இந்தியாவிற்கே அனுப்பினர். அப்படி அனுப்பப்பட்டவர்களின் தொகை 3,9!2 ஆகும். இது மட்டுமல்லாமல், போரின் போது மரணமடைந்த 26 இந்திய வீரர்களின் சடலத்தையும் இந்தியாவிற்கு ஒப்படைத்தனர். விடுதலையடைந்த இந்திய இராணுவக் கைதிகள் சீனுவில் இருக்கும்போது மிக நல்ல முறையில் கவனிக்கப்பட்டார்கள். காயாங்களுக்கு, நோய்களுக்கு சரியான வைத்திய உதவியளிக்கப்பட்டு, மீண்டும் இந்திய எல்லைக்கு அவர்களை அனுப்பி விடுதலைசெய்தபோது நோய்ப்பட்டவர்களுக்கு உதவ சீன வைத்திய உதவியாளர்கள் கூட அனுப்பப்பட்டனர். உடையில்லாதோருக்கு உடையளிக்கப்பட்டது. சீனுவை சுற்றிப்பார்க்க விரும்பியவர்களுக்கு பார்க்க அனுமதியளிக்கப்பட்டது. அவர்களுக்கு வந்த சகல கடிதங்கள் - பார்சல்கள் அனைத்தும் சரியாக ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தங்கள் குடும்பத்தினரை சந்திக்கவேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றுமுகமாக, மோசமான சீதோஷ்ண நிலைமை-போக்குவரத்தின்மை இருந்தும், கூடியமட்டும் விரைவில் அவர்களை எல்லையில் கொணர்ந்து விடுவதற்கு பெரும் முயற்சி எடுக்கப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில், காயங்களினல், நடமாடமுடியாத கைதிகளை சீனவீரர்கள், தங்களது தோள்களில்சுமந்து உதவி செய்தனர். சீனுவில் இருக்கும் பேது அவர்களின் மத அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதற்கு மதிப்பளித்து அனுமதிகப்பட்டது.

## சீன-இந்திய எல்லைப்பிரச்சினையில் நீண்ட காலமாக உள்ள மேலும் சில வேறுபாடுகள்

கடந்த வருடம் பெப்ரவரி 17-ந் திகதி சுவீடன் வானெலி நிருபர், சால்ஸன் அவர்களுக்கு சீன வெளிநாட்டு மந்திரியும் உதவிப் பிரதமருமான சென்யீ அவர்கள் டெலிவிசன் பேட்டியின்போது, சீழ்க்கண்ட பதிலை அளித்தார். சரித்திர காலந்தொட்டு சீனு - இந்திய மக்களும் எக்காலத்திலும், நட்புறவோடு வாழ்ந்தவர்கள். இந்த இரண்டுபேருக்கும் இடையிலான முக்கிய நெருக்கடி சமீபத்திய எல்லைப் பிரச்சனையே.

சீனு-இந்திய இருநாடுகளும் ஆசியாவில் தலைசிறந்த நாடுகள். தங்களது வளர்ச்சியடையாத பொருளாதாரத்தோடு சில அவசர அவசிய அபிவிருத்திகளில் ஈடுபடவேண்டியிருந்தது மேலும், ஆசியா - ஆபிரிக்காவினது ஒத்துழைப்பை வளர்க்கவும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும், ஏகாதிபத்தியவாதிகளுக்குவிரோதமாகஇந்த இருநாடுகளும் பொறுப்போடு செயல் பட்டுள்ளன.

இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக சீன எதிர்ப்பு பிரச்சாரம் செய்துவந்தபோ போதும், இந்தியா சீனுவின் எதிரின்று சீனு எப்பொழுதாவது கருதியதில்லை. சீனமக்கள் இந்திய மக்களின் நண்பர்கள். சீனு-இந்திய மக்களது அபிலாசைகளுக்கு எதிரான நிலைமை இந்தியாவில் நீண்டகாலம் தோடராது என நாம் நம்புகிருேம். சீனு-இந்திய நாடுகளைக் வெவ்வியுள்ள கருமேகம் கலைந்து போகும். தூரதிருஷ்டி நோக்கோடு, எல்லைப் பிரச்சனையை பார்க்கும்போது, சீன— இந்திய நட்புறவின் சரித்திரத்தில் இது ஒரு சிறிய சம்பவமே.

இது சீன அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

## இந்திய அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்ன ?

இந்திய அரசாங்கம் சீனுவை எதிரியாகக் கருதுகிறது. சீன-இந்திய நட்புறவைப்பற்றி இப்போது பேசுவதில்லை. எல்லைப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண ஆரம்ப முதலே அவர் விரும்பவில்லை. தனது தேசிய-விதேசிய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு சீன இந்திய பிரச்சினையை நீடிக்க விரும்புகிறது, இந்தியாக்குள் சீன எதிர்ப்பு இயக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது. சீனுவுக்கெதிராக யுத்தம் நடத்த தயாராகிறது. எல்லைப் பிரச்சினைக்கு. யுத்தத்தின் மூலம் தீர்வு காண விரும்புகிறது. அதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையோடு சகல ஏகாதிபத்தியங்களின் உதவியையும் நாடுகிறது- உதவியை அப்படியே வரவேற்கிறது அதனது செயல் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமல்ல, சீனுவுக்கே எதிரானது. சீன—இந்திய எல்லைப் பிரச்சினை, தற்காலிகமானதென கருதவில்லை. மாருக நிரந்தரமானது என கருதினர். (சீன-இந்திய பிரச்சினைசம்பந்தமான குற்றங்களை, சீனு மீது சுமத்தி அவதூறுசெய்ய முயலுவதுடன், கொழும்பு நாடுகளின் ஆலோசனையை நிராகரிக்கிறது என்ற குற்றத்தையும் சாட்டுகிறது.

இப்பேர்ப்பட்ட அவதூறுகளைப் பரப்புபவர்களோடு சோஷலிச அணியைச் சேர்ந்தவர்களும் இணைத்துள்ளது ஒரு புதிய அம்சமாகும்.

இதுச் சம்பந்தமான உண்மைதான் என்ன?

சீன இந்திய பேச்சுவார்த்தைக்கான வழிவகைகளைக் காணுவதற்கு கொழும்பு மகாநாடுகள் எடுத்த முயற்சிக்கு சீன அரசாங்கம் தனது முழு ஆதரவையும் வெளிவிட்டுள்ளது பகிரங்கமாகத் தெரிந்ததே.

இதுமட்டுமல்ல சீன—இந்திய நேரடிப் பேச்சுவார்த்தைக்கு முன்னேக்கமாக கொழும்பு நாடுகளின் ஆலோசனையை கொள்கையளவில் ஒப்புக்கொண்டது. இந்த ஆலோசனைகளில் சில தெளிவற்ற தன்மையுள்ளவை, என எடுத்துக் காட்டியுள்ள சீன அரசாங்கம் இதுபற்றி ஓரளவு தெளிவு படுத்தியுள்ளது. ஆனல், சீன இந்திய பேச்சு வார்த்தைக்கு ஆரம்ப நிலையாக இந்த அபிப்பிராயத்தை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டுமென சீனு கூறவில்லை. ஆனல் இதுபற்றி இந்தியா வேறுமுறையில் புரிந்துகொண்டுள்ளது. இருந்தும் இருநாடுகளினது பேச்சுவார்த்தைக்கு தான் இணங்குவதாயிருந்தால், தான் ஏற்றுக்கொண்டவாறு சீனுவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக்கோருகிறது. இதை பூர்வாங்கக் கோரிக்கையாகவைத்துள்ளது. இது, கொழும்பு நாடுகளின் மாநாட்டின் அடிப்படை எண்ணங்களுக்கே எதிரானதாகும்.

கொழும்பு ஆலோசனை ஆறு அம்சங்கள் கொண்டவை. சீனு புதிதாக விளக்கம்கொடுத்திருப்பது, அந்த ஆலோசனையின் இரண்டாவது அம்சத்தில் (அ) பகுதியும், மூன்ருவது அம்சமுமாகும். மற்றெல்லா அம்சங்களையும் ஞு ஏற்றுக்கொள்கிறது. அப்படியிருக்க சீனு கொழும்பு நாடுகளின் ஆலோசனையை எதிர்க்கிறது என்று எவ்வாறு கூறமுடியும்?

கொழும்பு மாநாடு சட்டரீதியில் தீர்ப்பளிக்கக்கூடிய மாநாடல்ல, மாருக இரு நாடுகளுக்கிடையில் சமாதானத்தைத் தோற்றுவிக்கவும், நெருக்கடியைத் தளர்த்தவும் உதவுவதாகும். கொழும்பு ஆலோசனை முடிவான தீர்ப்பல்ல, பரிசீலனைக்குரிய ஆலோசனை மட்டுமே,

சீன அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதன் நோக்கமும் அதுவே, அப்படியிருக்க, சீனு இதை நிராகரிக்கிறது என்று விவாதமிடுவதின் அர்த்தமென்ன?

சீனு தொடர்ந்து கேட்டுக்கொள்வது, இந்த ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தை மூலம் நெருக்கடியைத் தளர்த்த ஒரு நிலைமையை உருவாக்க சீன-இந்தியப் பேச்சுவார்த்தை ஆரம்

(7-ம் பக்கம் பார்க்க)

# ஐக்கியத்திற்கான ஆலோசனைகள்!

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

## கூடுதலான ஸ்தாபன ரீதியான ஒற்றுமை

தற்பொழுது இருக்கும் எல்லாத் தொழிற் சங்கங்களும் கலந்து, ஒரு தொழிலுக்கு அல்லது ஒரு கைத்தொழிலுக்கு ஓரேயொரு சங்கம், தொழிற் சங்கங்களுக்கு ஒரே ஒரு சம்மேளனம் என்ற பூரண ஸ்தாபன ரீதியான ஒற்றுமையை நாம் உடனடியாக முன்வைக்கவில்லை. துரதிருஷ்டவசமாக இதற்கான காலம் இன்னும் ஏற்படவில்லை. அதே நேரத்தில், தொழிற்சங்க அமைப்புக்களின் இணைப்புக் கமிட்டி போன்ற, உறுதியற்ற தொழிற்சங்கங்களின்ஒற்றுமையிலும் சற்றுகூடிய ஸ்தாபன ரீதியான ஒற்றுமையைப் பற்றி நாம் சிந்திக்கின்ருேம். இவ்வமைப்பு தொழிற்சங்க இயக்கத்தின் குறிக்கப்பட்ட ஒரு பகுதியில் ஓரளவு ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் பங்கு வகித்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனல் சங்கங்கள் சில குறிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டும் ஒற்றுமைப்படும் உறுதியற்ற அமைப்பிலும் சிறந்த அமைப்பை ஏற்படுத்தும் காலம் வந்துவிட்டது எனவே நாம் கருதுகின்ருேம்.

## எமது ஆலோசனைகள்

ஆகவே தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்திற்காகப் பின்வரும் ஆலோசனைகளை முழுத் தொழிற்சங்க இயக்கத்தின் முன் நாம் சமர்ப்பிக்கின்ருேம். எல்லாத் தனிப்பட்ட சங்கங்களும் தொழிற் சங்க மத்தியஸ்தானங்களும், முழுத் தொழிற்சங்க இயக்கத்தினதும், பல்வகைப்பட்ட நடவடிக்கைகளையும் வழிகாட்டுதற்கும் தலைமை தாங்குவதற்குமாக, திட்டவட்டமான சட்டத்திட்டமும் உத்தியோகத்தர்களும் கொண்டதோர் தொழிற்சங்க மத்திய ஸ்தானத்தில் திரளுதல் வேண்டும்.

அதே நேரத்தில் பழைய வெறுப்புக்கள் விரைவில் மறைவதில்லை என்பதும், இன்று ஓரளவு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளபொழுதும் பரஸ்பர சந்தேகங்களும், நம்பிக்கையீனமும் பல தொழிற் சங்கங்களுக்கிடையே உள என்பதும் எமக்குத் தெரியும். பல சங்கங்கள் தமது தனிப்பட்ட, சுதந்திர நிலையை இழக்க விரும்புவதில்லை. இவ்வித்தியாசங்கள் மறைவதற்கு நீண்டகாலம் எடுக்கும். இந்த உண்மை நிலையை உணர்ந்து, காலப் போக்கிலும் பொதுப் போராட்டங்ளிகல் பங்குபற்றுவதன் விளைவாகவும் வித்தியாசங்கள் மறையும் எனக் காலங் கொடுத்து, தற்பொழுது தேசிய, சர்வ தேசிய ஸ்தாபனங்களுடன் தொடர்புள்ள சங்கங்கள் அல்லது மத்திய ஸ்தானங்களை இரண்டு அல்லது கூடிய வருடங்களுக்கு அங்ஙனம் தொடர அனுமதிக்கலாம் என நாம் ஆலோசனை கூறுகின்ருேம்.

இவ்வாலோசனை, பூரண ஸ்தாபன ஒற்றுமைக்கும், தொழிற்சங்கங்கள் உறுதியற்ற தன்மையில் ஒன்று கூடுவதற்கும், இடைப்பட்டதாகும். நாம் தொழிற்சங்க இயக்கத்தின் முன்வைத்துள்ள ஆலோசனைகளை தொழிற்சங்க இயக்கம் ஏற்றுக்கொள்ளும் நிலையிலுள்ளது என்பது எமது நம்பிக்கை. தொழிற்சங்க இயக்கத்தின் எல்லாப் பகுதிகளும், இவற்றை கவனத்துடனும், ஆதரவுடனும் கவனிப்பர் என நாம் மனமார நம்புகின்ருேம். எமது ஆலோசனைகளின்படி ஓர் ஐக்கிய தொழிற் சங்க மத்திய ஸ்தானத்தைச் சில ஆண்டுகளுக்கு நாம் நடாத்த முடிந்தால், ஒரு தொழிலுக்கு அல்லது கைத்தொழிலுக்கு ஒரு சங்கம், ஓரேயொரு தொழிற் சங்க சம்மேளனம் என்ற அடிப்படையில் பூரண ஸ்தாபன ரீதியானஐக்கியத்தை ஏற்படுத்த அவசியமான அடிப்படையை அமைப்பதில் வெற்றியடைந்தவராவோம்.

## பலம்மிக்க சக்தி

எமது நாட்டில் தொழிற் சங்க இயக்கம் நியாயமான அளவு பலம் வாய்ந்தது. எமது ஒரேயொரு குறைபாடு எமது ஒற்றுமையின்மையே. தொழிற் சங்கங்களில் 15 லட்சப் அங்கத்தவர்கள் இருக்கின்றனர் எனக் கணிப்பிட்டுள்ளது. அவர்களின் குடும்பங்களையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது இது முழு ஜனத்தொகையிலும் கணிசமான பகுதியாகும். இந்த 15 லட்சம் தொழிற்சங்க அங்கத்தவர்களையும் ஒரே ஸ்தாபனத்தில் ஒற்றுமைப்படுத்தி, முழுத் தொழிற்சங்க இயக்கத்தையும் ஒரே குரலுடன் பேசவைத்தால், எங்களை எதிர்த்து நிற்கக்கூடிய வேறெந்தச் சக்தியும் இந்த நாட்டில் கிடையாது.

# அமெரிக்க டியம் ஆட்சிக்கெதிராக தென்வியட்நாம் மக்கள் போராட்டம்

## தேசிய விடுதலைப் போராட்டத்தின் சிறப்புமிகு உதாரணம்

தென் வியட்நாமில் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தேசிய விடுதலைக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் பௌத்தர்களும், மாணவர்களும் பல பெரும் போராட்டங்கள் நடத்திவருகிறார்கள். புத்த பிக்குகள் தம்மைத்தாமே சுட்டெரித்துக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சிகளின் காரணமாக தென் வியட்நாமில் உள்ள நிலைபற்றி இலங்கை மக்களும், மற்றும் உலகத்திலுள்ள எல்லாநாட்டு மக்களும் விழிப்புற்றுக்கொண்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பாதம் தாங்கியான ங்கோ டிங் டியம் ஆட்சிக்கு வந்த கடந்த எட்டு வருடங்களுள், தென் வியட்நாம் ஓர் நரக லோகமாக மாற்றப்பட்டுவிட்டது. மக்களுடன் உள்ள எல்லாத் தொடர்புகளும் அற்றுப்போய், அமெரிக்க டியம் கும்பல் பயங்கர அடக்குமுறை ஆட்சி நடத்துகிறது. இந்த எட்டு வருட காலத்தில் டியம் ஆட்சியின் கீழ், உயிரிழந்தவர் 150,000 பேர், காயமடைந்தவர்கள் 190,000 பேர், கைது செய்யப்பட்டவர்கள் 800;000 இதனுள் 600,000 பேர் கொடுமைப் படுத்தப்பட்டதால் கை, கால் மற்றும் அவயவங்களை இழந்தனர்.

அமெரிக்க டியம் கும்பல் கடந்த காலத்தில் 20 பெரிய அடக்குமுறை இயக்கங்களை நடத்தியுள்ளது. 10,000த்திற்கு மேற்பட்ட பயமுறுத்தல் நடவடிக்கைகளை தேசாபிமானிகளுக்கும் வியட்நாம் மக்களுக்கும் எதிராககத்தீட்டியுள்ளது. ஒவ்வொரு பயமுறுத்தல் நடவடிக்கைகளிலும் விமானப் படை, கப்பற்படை, காலாற் படை, மற்றும் பாதுகாப்புப் படை, சிவில்படை, இரகசியப் படை ஆகியவைகளின் 10, 15 ஆயிரம் துருப்புகள் பங்கெடுத்துள்ளன. 20,000த்திற்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 33,000 கிராமங்கள் சிறைகூடங்களாக மாற்றப்பட்டு. ஆயிரக்கணக்கான மக்கள் கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க டியம் கும்பல் இரசாயன போர் முறைகளையும் கையாண்டுள்ளது. 12,000 அமெரிக்கத் துருப்புகள் வியட்நாம் மக்களுக்கெதிரான, பிரகடனப்படுத்தாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்க டியம் கும்பலின் பலாத்காரமும், அடக்குமுறையும், தென் வியட்நாம் மக்கள் தமது உயிரையும், உடமையையும், வாழும் உரிமையையும் பாதுகாக்கும் பொறுப்பை தாமே ஏற்றுக் கொள்வதைவிட வேறு வகையின்றிச் செய்துவிட்டது. தங்கள் எதிரிகள் யார் என்பதையும், அமெரிக்க டியம் கும்பலின் படு பிற்போக்குவாத அரசாங்கமே தமது இழிநிலைக்குக்காரணம் என்பதையும் மக்கள் தமது அனுபவம் மூலம் தெரிந்துகொண்டனர். இதன் காரணமாக டியம் கும்பலின் பாசிச ஆட்சிக்கெதிராக மக்களின் போராட்டங்கள் கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பரவிவருகின்றன.

### தென் வியட்நாம் தேசிய விடுதலை அணி

பிற்போக்குவாதிகளின் ஆட்சி மிருகத்தனமாக வளர்ந்ததற்கு எதிரான மக்களின் போராட்டம் மேலும் மேலும் ஐக்கியப்பட்டும், வலுப்பெற்றும் வருகிறது.

பாசிச அமெரிக்க ஆட்சியை ஒழிப்பதற்காக, தேசாபிமானம் கொண்ட சக்திகள் யாவையும் ஒன்று திரட்ட, 1960ம் ஆண்டு டிசம்பர் மாதம் தென் வியட்நாம் தேசிய விடுதலை அணி நிறுவப்பட்டது.

கீழ்வரும் ஸ்தாபனங்கள் இம் முன்னணியின் கீழ் அணிதிரண்டுள்ளன: புரட்சிகர மக்கள் கட்சி, ஜனநாயகக் கட்சி, றடிக்கல் சோஷலிசக் கட்சி, விடுதலைக்கான தொழிலாளர் சங்கம், விடுதலைக்கான மாதர் சங்கம், புரட்சிகர மக்கள் வாலிப சங்கம், தேசாபிமான, ஜனநாயக பத்திரிகையாளர் சங்கம், விடுதலைக்கான எழுத்தாளர்களினதும் கலைஞர்களினதும் சங்கம், ரேய் நுகுயென் (Tay Nguyen) சுய நிர்ணய இயக்கம், தற்பாதுகாப்புப் பண்ட ஆகியவை.

1962ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 13ம் திகதிவரை இம்முன்னணியின் முதல் மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் அரசியல் திட்டமும், முக்கிய பிரச்சினைகளில் கொள்கையும் தீர்மானிக்கப்பட்டன. அமெரிக்காவும் அதன் ஊது குழல்களும் தென்வியட்நாம் மக்களுக்கெதிராக நடத்தும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை முறியடிக்க பரந்த அளவில் ஐக்கியப்பட்டு செயலாற்றுவதின் மூலமே தென் வியட்நாம் மக்கள், தம்மையும் தென்வியட்நாமையும் விடுவிக்க முடியும் என்று இம்மாநாட்டறிக்கை கூறுகிறது. இவ்வறிக்கையில் மேலும் தேசிய விடுதலைக்காக, ஜனநாயகத்திற்காக, சமாதானத்திற்காக, நடுநிலைமைக கொள்கைக்காக போராடவேண்டும். அதன் மூலம் சமாதானமாகத் தமது தாயகத்தை ஒருமைப்படுத்தவேண்டும். என்று கூறப்படுகிறது. தென் வியட்நாம் மக்களின் போராட்டப் பாதையை இது காட்டுகிறது. தென்வியட்நாமின் 14,000,000 மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கிறது.

### வளரும் போராட்டங்கள்

தென் வியட்நாம் விடுதலை தேசிய முன்னணியின் தலைமையில், மேலும் பல மக்கள் அமெரிக்க டியம் கும்பலுக்கெதிரான போராட்டத்தில் இறங்கி, குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்துவருகிறார்கள்.

**இ. தி. மூர்த்தி**

### கிராமப்புறங்களிலே

மலைப்பிரதேசங்களிலே 1962ம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களுக்குள்;

—அமெரிக்க இராணுவ அடக்குமுறைக்கு எதிராக, பயங்கரவாதத்திற்கு திராக, சிறைகூடங்களில் அஞ்சாரமான துன்புறுத்தல்களுக்கும். அடக்குமுறைகளுக்கும் எதிராகக் குரல்கொடுத்து, ஆட்சேபித்து 2,500,000 மக்கள் நகரங்களிலும், பட்டினங்களிலும் கிளர்ச்சி செய்துள்ளனர்.

—கிராமங்களில் சிறை கூடங்கள் நிறுவுவதற்கெதிராக 6000000 மக்கள் கிளர்ச்சி செய்துள்ளனர். எதிரிகளால் நிறுவப்பட்ட 3,364 சிறைகூடங்களில், 2,234 சிறைகூடங்களை நாசம் செய்தனர். 8,982 கிராமங்களின் எதிரியின் பலத்தை முறியடித்தனர். 4,441 கிராமங்களை பூரணமாக விடுவித்தனர். இதன் மூலம் 14000,000 தென்வியட்நாம் மக்களில் 45 விகிதமான 6,400,000 மக்களைக் கொண்ட, 17,162 தென்வியட்நாம் கிராமங்களில் 76 விகிதமானவற்றில் செல்வாக்குப் பெற்றுள்ளனர்.

—எதிரியின் தாக்குதல்களிற்கு எதிராக பாதுகாப்புக் கிராமங்களை நிறுவுவதில் 500,000 மக்கள் பங்குகொண்டனர்.

### நகரங்களில் 1962ம் ஆண்டு:

—வாழ்க்கைத்தர உயர்வுக்கான ஜனநாயகத்திற்கான பலாத்கார வேலைவாங்கலுக்கெதிரான, வீடுகள் உடைக்கப்படுவதற்கெதிரான சிறைகூடக் கிராமங்கள் ஏற்படுத்துவதற்கெதிரான போராட்டங்களில் 435,830 தொழிலாளர்களும் மற்றும் உழைக்கும் மக்களும் பங்கு பற்றி உள்ளனர்.

—லீ குவங் லிங் என்ற ஆசிரியருக்கு மரணதண்டனை விதித்ததை எதிர்த்தும், மற்றைய போராட்டங்களிலும் 36,800 ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

—86 சந்தர்ப்பங்களில், மனிதத்தன்மையற்ற அமெரிக்க அதிகாரிகளையும், போர் வீரர்களையும் மக்கள் தாக்கியுள்ளனர்; அடித்தும், உதைத்தும் உள்ளனர்.

—லாவோஸ் பற்றிய ஜெனீவா மகாநாட்டின் பின்னர் ஓர் நடு நிலைமைக் கொள்கையுள் தென்வியட்நாம் தோன்ற வேண்டும் என்ற குரல் பரவும் அறிகுறிகள் தோன்றின.

1962ம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களுக்குள் 16,000 டியம் இராணுவத்தினர் பின்னெடுத்து ஓடிச் சென்றனர், அல்லது, புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்துகொண்டனர். (1961ம் ஆண்டு இந்த எண்ணிக்கை 5000ந்தான்.)

### துப்பாக்கிகள் அல்ல மக்களே தீர்மானிக்கும் சக்தி


தென்வியட்நாம் மக்கள் பழமையான ஆயுதங்களைத் தாங்கியபோதும், நவீன ஆயுதங்களுடன் போர்செய்யும் எதிரிகள் முன், வீரம்செறிந்த போராட்டங்கள் மூலம் எதிரியைப் படிப்படியாகத் தோற்கடித்துவெற்றியீட்டி வருகிறார்கள். இதற்குக் காரணம், தென்வியட்நாம் மக்கள் தது உரிமைக்காகப் போராடுகிறார்கள். அவர்கள் பக்கம் நியாயம் இருக்கிறது. எதற்காக யுத்தம் செய்கிறோம் என்பதை உணர்ந்தவர்கள். தமது உயிருக்காகப் போராடுகிறார்கள். நாட்டின் விடுதலைக்காக, ஒருமைப் பாட்டிற்காகப் போராடுகிறார்கள். ஆனால் டியம் கும்பலின் துருப்புக்களோ சோற்றுக் குழைக்கும்பட்டாளம், அமெரிக்க ஏகாதித்தியத்தின் அடக்குமுறைக்கொள்கைகளை விரிவுபடுத்த, விலைக்கு வாங்கப்பட்ட கூலிப்பட்டாளம் தென் வியட்நாமிலும் மற்றும் எங்காணுலும் சரி தியாக உணர்ச்சியும், திடமான இலட்சியமும் யுத்தம் புரிபவர்களுக்கு இருமடங்கு பலத்தைக் கொடுக்கிறது.

அணுகுண்டுகளையும், நவீன ஆயுதங்களையும் கொண்டு எதிரியை எதிர்த்த தென்வியட்நாம் மக்களின் வெற்றிகள், அமெரிக்க—டியம் கும்பல், உலகத்திலுள்ள எல்லாப் பிற்போக்குவாதிகளையும் போல் கடதாசிப் புலிகள் என்பதைத் தான் நிரூபித்துள்ளன.

### சிறப்புமிகு உதாரணம்

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளினதும், உலகத்திலுள்ள அடக்கப்பட்ட மக்களினதும் தேசிய விடுதலை இயக்கத்தின் சிறப்புமிகு உதாரணமாக வீரம் நிறைந்த தென் வியட்நாம் மக்கள் திகழ்கின்றனர்.

ஜனநாயகம், சுதந்திரம், சமாதானம், நடுநிலைமை, சமாதானபூர்வமான தாய் நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றிற்காகத் தென் வியட்நாம் மக்கள் நடாத்தும் வீரம் மிக்க போராட்டம், ஆசியாவிலும், உலகிலும், சமாதானத்திற்கான போராட்டத்தில் பெரும் பங்கு கொள்கிறது. அவர்களின் போராட்டம் நியாயமானது. தேச பக்தி மிகுந்தது. உலக மக்களின் ஆதரவும் அனுதாபமும் அவர்களுக்குண்டு. தென் வியட்நாம் மக்கள் அமெரிக்க டியம் கும்பலின் பாசிச ஆட்சியைத் தூக்கி எறிந்து, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை துரத்தி அடித்து பூரண வெற்றி காண்பது உறுதி.



தென் வியட்நாம் விடுதலைப் போராட்டத் தலைவியான ன்குயென் திய் பின்னுடன் மக்கள் சீனக்குடியரசின் மாண்புறு தலைவர் மா சே துங்.

# சீனத்தின் பாதையில் செல்வோம்

பதிப்பித்து வெளியிடுபவர்: ஆறுமுகம் செல்லையா கந்தசாமி, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
அச்சிட்டது; ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/1, கியூ வீதி, கொழும்பு 2.